




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:273 | 18-04-2026 | சனிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

18.04.2026 சித்திரை 5
சனிக்கிழமை

சூரிய உதயம் 6.02

**திதி:**
இன்று மாலை 3.45 வரை பிரதமை பின்பு துவிதியை.

**நட்சத்திரம்:**
இன்று காலை 10.52 வரை அசுவினி பின்பு பரணி

**யோகம் :**
இன்று அதிகாலை 3.26 வரை விஷ்கம்பம் பின்பு ப்ரீதி

**கரணம்**
இன்று அதிகாலை 4.46 வரை கிம்ஸ்துக்கினம் பின்பு மாலை 3.45 வரை பவம் பின்பு பாலவம்.

**அமிர்தாதி யோகம் :**
இன்று காலை 6.01 வரை சித்த யோகம் பின்பு அமிர்த யோகம்.

**சந்திராஷ்டமம் :**
இன்று காலை 10.52 வரை உத்திரம் பின்பு அஸ்தம்

**நல்ல நேரம்**
காலை 10.30 – 11.30.
மாலை 4.30 – 5.30

**இராகு காலம்**
காலை 9.00 – 10.30.

**எமகண்டம்**
பிற்பகல் 1.30 – 3.00.

**குளிகை**
காலை 6.00 – 7.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தொகுதி மறுவரையறை மசோதா தோல்வி!

**புதுடெல்லி, ஏப்.18:**

தொகுதி மறுசீரமைப்பு, மகளிர் இடஒதுக்கீடு தொடர்பான 3 மசோதாக்களும் மக்களவையில் தோற்கடிக்கப்பட்டன.

மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட தொகுதி மறுவரையறை மசோதா உள்ளிட்ட மூன்று மசோதாக்களுக்கும் ஆதரவாக 278 உறுப்பினர்களும், எதிராக 211 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

இந்த மசோதாக்கள் வெற்றி பெற மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் ஆதரவாக தேவை. அந்த வகையில் தொகுதி மறுவரையறை மசோதா நிறைவேற 326 வாக்குகள் தேவை. அது கிடைக்காத காரணத்தால், மூன்று மசோதாக்களும் தோல்வி அடைந்தன.



கடந்த 2023-ம் ஆண்டில் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி நாடாளுமன்றத்திலும், சட்டப் பேரவைகளிலும் மகளிருக்கு 33 சதவீத இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும். மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தை அமல்படுத்த மக்களவையில் தற்போதுள்ள 543 இடங்களை, 850 ஆக அதிகரிக்க மத்திய அரசு திட்டமிட்டு உள்ளது. இதற்கு அரசியல் சாசனத்தில் திருத்தம் மேற்கொள்ளும் நோக்கிலும், யூனியன் பிரதேசங்களிலும் மகளிர் இட ஒதுக்கீடு அமல்படுத்தப்படுவதை உறுதி செய்யும் நோக்கிலும், இதற்காக தொகுதி மறுவரையறையை மேற்கொள்ளவும் மூன்று மசோதாக்கள் நேற்று தாக்கல் செய்யப்பட்டன.

அரசியல் சாசன திருத்தம் (131-வது திருத்தம்) மசோதா 2026, தொகுதி மறுவரையறை மசோதா 2026 ஆகியவற்றை மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் மக்களவையில் அறிமுகம் செய்தார். யூனியன் பிரதேச சட்டங்கள் (திருத்த) மசோதா 2026-ஐ உள்துறை அமைச்சர் அமித் ஷா மக்களவையில் அறிமுகம் செய்தார்.

இந்த மசோதாக்கள் அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து இவற்றின் மீது விவாதம் தொடங்கியது. ஆளும் தரப்பிலும் எதிர்க்கட்சிகள் தரப்பிலும் பலர் தங்கள் கேள்விகளையும் வாதங்களையும் முன்வைத்தனர். இவற்றுக்கு பதில் அளிக்கும் விதமாக உள்துறை அமைச்சர் அமித் ஷா, பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் பேசினர். இந்த விவாதம் நேற்று இரவு சுமார் 1 மணி வரை நீடித்தது. இதையடுத்து இன்று காலை மீண்டும் விவாதம் தொடங்கியது.

இன்றைய விவாதத்தில் திமுக எம்பி கனிமொழி, காங்கிரஸ் எம்பி சசி தரூர், ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் எம்பி மிதுன் ரெட்டி, ஐக்கிய ஜனதா தளம் எம்பி ராஜிவ் ரஞ்சன் சிங், திரிணமூல் காங்கிரஸ் எம்பி கல்யாண் பானர்ஜி, தெலுங்கு தேசம் கட்சி எம்பி ஸ்ரீ கிருஷ்ண தேவராயலு, சமாஜ்வாதி கட்சியின் டிம்பிள் யாதவ், ஷிரோமணி அகாலி தளம் எம்பி ஹர்சிம்ரத் கவுர் பாதல், திமுக எம்பி ராஜா, காங்கிரஸ் எம்பி ஜோதிமணி, பாஜக எம்பி ஹேமமாலினி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் பங்கேற்று பல்வேறு கருத்துக்களை முன்வைத்தனர். எம்பிக்களில் பலர் மசோதாவுக்கு ஆதரவாகவும் எதிராகவும் தங்கள் கருத்துகளை முன்வைத்தனர். உறுப்பினர்களின் கேள்விகளுக்கு மத்திய அமைச்சர்கள் கிரண் ரிஜிஜு, ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் பதில் அளித்தனர். இறுதியாக உள்துறை அமைச்சர் அமித் ஷா மிக நீண்ட விளக்கத்தை அளித்தார். இதனைத் தொடர்ந்து மசோதாக்கள் மீதான வாக்கெடுப்பு நடைபெற்றது.

## தமிழ்நாடு, மேற்கு வங்கத்தில் ரூ.865 கோடி பறிமுதல்: தேர்தல் ஆணையம் தகவல்

**சென்னை, ஏப்.18:**

தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;-

பொதுத் தேர்தல்கள் மற்றும் இடைத்தேர்தல்கள் 2026: தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கத்தில் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ. 865 கோடியைத் தாண்டியது

1. அஸ்சாம், கேரளா, புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்காள சட்டப்பேரவைகளுக்கான பொதுத் தேர்தல் மற்றும் இடைத்தேர்தல்களுக்கான அட்டவணையை இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) மார்ச் 15, 2026 அன்று அறிவித்தது. தேர்தல் நடத்தை விதிகளை (MCC) கண்டிப்பாகப் பின்பற்றுவதை உறுதி செய்ய மாநில/யூனியன் பிரதேச அரசாங்கங்களுக்கு ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

2. தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் மற்றும் அவற்றின் எல்லை மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள், தலைமைத் தேர்தல் அதிகாரிகள் (CEOs), டிஜிபிக்கள் (DGPs) மற்றும் அமலாக்க முகமைகளின் தலைவர்களுடன் ஆணையம் பலமுறை ஆய்வுக் கூட்டங்களை நடத்தியது. வன்முறையற்ற, மிரட்டல்களற்ற மற்றும் தூண்டுதல்களற்ற தேர்தல்களை உறுதி செய்ய அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

3. இதனை உறுதி செய்வதற்காக, புகார்கள் மீது 100 நிமிடங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்ய இரு மாநிலங்களிலும் 5,011-க்கும் மேற்பட்ட (மேற்கு வங்கத்தில் 2,728 மற்றும் தமிழ்நாட்டில் 2,283) பறக்கும் படைகள் (FSTs) பணியமர்த்தப்பட்டுள்ளன. இது தவிர, வெவ்வேறு இடங்களில் திடீர் சோதனைகளை (Nakas) மேற்கொள்ள 5,363-க்கும் மேற்பட்ட (மேற்கு வங்கத்தில் 3,142 மற்றும் தமிழ்நாட்டில் 2,221) நிலையான கண்காணிப்புக் குழுக்கள் (SSTs) பணியமர்த்தப்பட்டுள்ளன.

4. 2026 பிப்ரவரி 26 அன்று தேர்தல் பறிமுதல் மேலாண்மை அமைப்பு (ESMS) செயல்பாட்டிற்கு வந்ததிலிருந்து, 2026 ஏப்ரல் 17 வரையிலான தரவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன: குடிமக்கள்/அரசியல் கட்சிகள் மாதிரி நடத்தை விதி மீறல்கள் குறித்து ECINET-ல் உள்ள C-Vigil Module மூலம் புகார் செய்யலாம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வால்பாறை மலைச்சாலையில் சுற்றுலா வேன் கவிழ்ந்து பயங்கர விபத்து: 10 பேர் உயிரிழப்பு

**கோயம்புத்தூர், ஏப்.18:**

கோயம்புத்தூர் மாவட்டம் வால்பாறை மலைச்சாலையில் சுற்றுலா வேன் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 10 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாக கேரள மாநிலத்தில் இருந்து சுற்றுலா வந்தவர்கள் வால்பாறையில் இருந்து பொள்ளாச்சிக்கு வேனில் சென்று கொண்டிருந்தனர். இந்த நிலையில் வால்பாறை - பொள்ளாச்சி சாலையில் சென்று கொண்டிருந்தபோது வேன் திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து பயங்கர விபத்துக்குள்ளானது. 13-வது கொண்டை ஊசி வளைவில் இருந்து கவிழ்ந்து விழுந்த வேன் உருண்டு 9-வது கொண்டை ஊசி வளைவில் வந்து விழுந்தது.

இதில் வேனில் பயணம் செய்த 16 பேரில் 10 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் விபத்து குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு நிலவி வருகிறது.

## தமிழ்நாட்டின் எதிர்காலத்தையே அடகு வைக்கின்றனர்: மு.க.ஸ்டாலின்

**சென்னை, ஏப்.18:**

சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிறந்தநாளையொட்டி முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:-

பிரிட்டிஷாரைக் கலங்கடித்த தமிழ் வீரர் தீரன் சின்னமலை பிறந்தநாள். அன்று, நேரடியாகப் போரிட்டு வெல்ல முடியாத ஆங்கிலேய ஆதிக்கவாதிகள் சூழ்ச்சியால்தான் சின்னமலையை வீழ்த்த முனைந்தார்கள். இன்றோ, தமிழ்நாட்டுக்குள் நேரடியாக நுழைய முடியாத டெல்லி ஆதிக்கவாதிகள் 'தொகுதி மறுவரையறை' எனும் சதித் திட்டத்தால் நம்மை அரசியல் வலிமையற்றவர்களாக்க முனைகிறார்கள். அன்று, சின்னமலையைக் காட்டிக் கொடுத்தான் ஒரு துரோகி. இன்றும் சில அடிமைகள் தங்கள் சுயநலத்துக்காகத் தாய்த்தமிழ்நாட்டின் எதிர்காலத்தையே ஆர்.எஸ்.எஸ். எஜமானர்களின் காலடியில் அடகு வைக்கின்றனர்.

இந்த ஆதிக்கவாதிகளையும் அடிமைகளையும் எதிர்த்து தமிழ்நாடு போராடும்... தமிழ்நாடு வெல்லும் எனத் தீரன் சின்னமலை அவர்களின் பிறந்தநாளில் சூளுரைக்கிறேன்! வெல்வோம்_ஒன்றாக. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அரசியலமைப்பு மீதான தாக்குதல் தோற்கடிப்பு: ராகுல்

**புதுடெல்லி, ஏப்.18:**

"மத்திய அரசு கொண்டுவந்துள்ள மகளிர் இட ஒதுக்கீடு மசோதா உண்மையில் மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் மசோதா அல்ல. மாறாக தேசத்தின் அரசியல் வரைபடத்தை மாற்றும் முயற்சி" என மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.




மேலும், "காஷ்மீரை போல் அனைத்து மாநிலங்களையும் பாஜக மாற்ற நினைக்கிறது. ஆனால் இந்த மசோதா ஒரு போதும் நிறைவேறாது. இதனால் தெற்கு மற்றும் வடகிழக்கு மாநிலங்கள் கவலை கொள்ளத் தேவையில்லை" என்றும் அவர் கூறியுள்ளார்.

தொகுதி மறுவரையறை தொடர்பான 3 மசோதாக்கள் மக்களவையில் நேற்று தாக்கல் செய்யப்பட்டன. இந்த மசோதாக்கள் மீதான விவாதம் நேற்று முதல் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், இன்று மக்களவையில் தொகுதி மறுவரையறை மசோதா தொடர்பான விவாதத்தின் போது மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது: தற்போதைய மசோதா மகளிருக்கானது அல்ல; 2023-ல் வந்ததே மகளிருக்கான மசோதா.

இப்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள மசோதா தேச விரோதமானது. இது தேசத்தின் அரசியல் வரைபடத்தையே மாற்றும் முயற்சி. அதை மகளிர் மசோதா போர்வையில் செய்கிறார்கள். மத்திய அரசின் இந்தச் செயல வெட்கக்கேடானது.

பெண்களே நம் நாட்டின் மையப் புள்ளி. இந்த அவையில் உள்ள ஒவ்வொருவரும், தங்கள் வாழ்வில் தாயாக, சகோதரியாக, மனைவியாக உள்ள பெண்களிடமிருந்து ஏதாவது ஒன்றை கற்றுக் கொண்டிருப்பார்கள். நேற்று இந்த அவையில் எனது சகோதரி பிரியங்கா காந்தி பேசியதை எண்ணி நான் பெருமை கொள்கிறேன்.

இந்திய அரசியலில் தற்போது நிகழ்ந்து வரும் மாற்றங்களைக் கண்டு பாஜக பயப்படுகிறது. உண்மை என்பது பல நேரங்களில் இருளில் தான் மறைந்திருக்கிறது. "இருட்டைப் பார்த்து பயப்படக்கூடாது," என இந்திரா காந்தி கூறியிருக்கிறார். உண்மையைப் பற்றி பேசுவதில் எனக்கு எந்த பயமும் இல்லை.

தாங்கள் அடைய விரும்பும் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ள, அரசியலமைப்புத் திருத்தம் ஒன்று தேவை என்பதை பாஜக நன்கு உணர்ந்துள்ளது. சாதிவாரி கணக்கெடுப்பை தவிர்த்து, பிற்படுத்தப்பட்டோர், பட்டியலின மக்களின் அதிகாரத்தைப் பறிப்பதே இந்த மசோதாவின் நோக்கம். இந்தியாவின் அதிகாரக் கட்டமைப்பில் ஓபிசி மற்றும் தலித்துகளுக்கு பாஜக எவ்வித இடமும் அளிப்பதில்லை

உங்கள் பலம் குறைவது கண்டு நீங்கள் நாட்டின் அரசியல் வரைபடத்தையே மாற்றத் துணிந்து விட்டீர்கள்.

முன்பு, அசாம் மற்றும் காஷ்மீரில் நீங்கள் இதைச் செய்தீர்கள். இப்போது அதைப்போலவே அனைத்து மாநிலங்களிலும் செய்ய நினைக்கிறீர்கள்.

ஆனால் இந்த மசோதா ஒரு போதும் நிறைவேறாது. இதனால் தென்னிந்திய மக்களும் வடகிழக்கு பிராந்திய மக்களும் கவலைப்பட வேண்டாம்." இவ்வாறு அவர் தெரிவித்தார்.








## திருக்குறள் குறள்-593

ஆக்கம் இழந்தேமென் றல்லாவார் ஊக்கம்
ஒருவந்தங் கைத்துடை யார்



ஊக்கத்தை உறுதியாகத் தம்மைப் பொருளாக உடையவர், ஆக்கம்( இழந்து விட்டக்காலத்திலும்) இழந்து விட்டோம் என்று கலங்க மாட்டார்.

## சிந்திக்க ஒரு நொடி



நாமாக யாரையும்
வெறுக்க வேண்டாம்....
ஆனால்.....
நம்மை வெறுப்பவரை
எப்போதும்
நினைக்கவும்
வேண்டாம்

**உஷா முத்துராமன்**

## முன்னாள் அமைச்சர் சிவி.சண்முகம் சின்னகரம் ஊராட்சியில் வாக்கு சேகரிப்பு





விழுப்புரம் மாவட்டம் வல்லம் வடக்கு ஒன்றிய அதிமுக சார்பில் இன்று வெள்ளிக்கிழமை அமாவாசை தினத்தில் மயிலம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் முன்னாள் அமைச்சர் சிவி. சண்முகம் இரட்டை இலை சின்னத்திற்கு சின்னகரம், தாமனூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் வாக்கு சேகரித்தார் இதனைத்தொடர்ந்து கிளைக்கழக நிர்வாகிகள் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

**அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## சித்திரை மாத அமாவாசை சிறப்பு பூஜை



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், துய்யம்பூந்துறைக் கிராமம், செங்கரைப்பாளையம் தோட்டக்காடு ஸ்ரீகன்னிமார்- ஸ்ரீகருப்பண்ண சாமி கோவிலில் பராபவ வருடம் சித்திரை மாதம் 4-ம்தேதி 17.04.2026 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சித்திரை மாத அமாவாசை சிறப்பு பூஜை இனிதே நடைபெற்றது.

## பணி நிறைவு பாராட்டு விழா



போளூர் வட்டம் அத்திமூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பணி ஓய்வு பெறும் ஆசிரியை க. வளர்மதி அவர்களுக்கு பணி நிறைவு பாராட்டு விழா பள்ளி வளாகத்தில்16.04.26 அன்று நடைபெற்றது இந்நிகழ்விற்கு முன்னாள் H.M. ஆர் அண்ணாமலை தலைமை ஏற்றும் எஸ் எம் சி தலைவர் முன்னிலை ஏற்றும் வரவேற்புரை A. மேனகா பொறுப்பு தலைமை ஆசிரியர் கலை நிகழ்ச்சிகள் சபிதா மற்றும் முத்தாரி அம்மாள் உதவி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பெற்றோர்கள் பணி ஓய்வு பெறும் ஆசிரியையின் உறவினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு பிரிவு உபச்சார விழா..!

**இராமநாதபுரம், ஏப்.18:**



இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி ஒன்றியம் சண்முககுமாரபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பை நிறைவு செய்த மாணவர்களுக்கு பிரிவு உபச்சார விழா நடைபெற்றது.

மாணவர்களுக்கு தலைமை ஆசிரியர் ச.கிறிஸ்து ஞான வள்ளுவன், ஆசிரியை அ.தாஹிரா, சத்துணவு பொறுப்பாளர் வே.மாரியம்மாள் ஆகியோர் ஆலோசனை வழங்கினர். பள்ளியின் சார்பில் பயனாடை போர்த்தப்பட்டு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. மாணவர்கள் ஆசிரியர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினர்.

பள்ளி வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும் சத்துணவு, காலையுணவு, அங்கன்வாடி, சுகாதாரப் பணியாளர்களுக்கு பள்ளியின் சார்பில் நினைவுப்பரிசு வழங்கப்பட்டது.

மாணவர்கள் ஆறு பேரும் பள்ளியில் வைப்பதற்காக தலைவர்கள் படங்களை வழங்கினார்கள்.

மாணவர்கள் சார்பில் பா.இவிஷா நன்றி கூறினார். மாணவர்கள் ஆசிரியர்களுக்கும் மற்ற மாணவர்களுக்கும் இனிப்பு வழங்கி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். மாணவர்களுக்கு மதிய உணவாக சிக்கன் பிரியாணி மற்றும் பாயாசம் வழங்கப்பட்டது.

# காட்பாடி தொகுதி விருதம்பட்டில் அதிமுக வேட்பாளர் ராமு வாக்கு சேகரிப்பு!

**வேலூர், ஏப். 18:**



வேலூர் மாவட்டம், காட்பாடி சட்டமன்ற தொகுதியில் அனல் பறக்கும் தேர்தல் பிரச்சாரம் நடந்து வருகிறது. இந்த தேர்தல் பிரச்சாரத்தில் அதிமுக வேட்பாளராக ராமுவும், திமுக வேட்பாளராக முன்னாள் அமைச்சர் துரைமுருகனும் களம் இறங்கியுள்ளனர்.

இதில் இவர்கள் இருவருக்கும் இடையேதான் கடும் போட்டி நிலவுகிறது. மற்ற அனைத்து வேட்பாளர்களும் இருக்கும் இடம் தெரியாமல் போயுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த தொகுதியில் இருமுனைப் போட்டி நிலவுவதால் வாக்காளர்கள் தெளிவாக இம்முறை வாக்களிக்க தயாராகி வருகின்றனர்.

குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் திமுக பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான துரைமுருகன் தொடர்ந்து இந்த தொகுதியில் வெற்றி வாகை சூடி வருகிறார். கடந்த முறை சொற்ப வாக்கு வித்தியாசத்தில் அதிமுக வேட்பாளர் ராமு தோல்வியை தழுவினர்.

ஆனால் இம்முறை ராமு பொதுமக்களை நேரடியாக சந்தித்து தனக்கு வாக்களிக்குமாறு வேண்டி கேட்டுக்கொண்டு வாக்கு சேகரித்து வருகிறார்.

இந்நிலையில் காட்பாடி விருதம் பட்டு பகுதியில் வீதி வீதியாகச் சென்று அதிமுக வேட்பாளர் ராமு வாக்கு சேகரித்தார். இந்த வாக்கு சேகரிக்கும் போது அதிமுக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## சித்திரை மாதம் அமாவாசை அன்னதானம், நீர் மோர் வழங்கும் நிகழ்ச்சி







கடலூர் மாவட்டம் புவனகிரி ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் சித்திரை மாதம் அமாவாசையை முன்னிட்டு 300 நபர்களுக்கு மேல் அன்னதானம் வழங்கப்பட்டது. கோடை வெயில் காரணமாக பொது மக்களுக்கு தாகம் தனிக்க நீர் மோர் வழங்கப்பட்டது. உபயம் :ஆர்ய வைஸ்ய சமாஜம் புவனகிரி. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## ஸ்ரீவிஜயகணபதிக்கு அமாவாசை சிறப்பு வழிபாடு

**சென்னை, ஏப்.18:**



சோழிங்கநல்லூர் புதிய குமரன் நகரில் அமைந்திருக்கும் ஸ்ரீ விஜயகணபதி ஆலயத்தில் சித்திரை மாதம் அமாவாசையை முன்னிட்டு R.ராமகிருஷ்ணன் ஐயர் அவர்களால் ஸ்ரீ விஜய கணபதிக்கு சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர்,இளநீர், பன்னீர், தேன், பஞ்சாமிர்தம், சந்தனம், வெட்டிவேர் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், சந்தனத்தினால் அலங்காரங்கள், ரோஜா பூ, சாமந்திப்பூ மாலைகளால் அலங்காரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. பக்தர்கள் விஜயகணபதியை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## ராமானுஜர் திருஅவதார உற்சவம்



மேல்கோட்டை ஸ்வாமி ராமானுஜர் திருஅவதார உற்சவம் திருமஞ்சனம் திவ்ய சேவை.



திருமலை ஸ்வாமி ராமானுஜர் திருஅவதார உற்சவம் நான்காம் திருநாள் மாலை புறப்பாடு.

# தொகுதி மக்களிடையே, குடிநீர் வழங்குவதை ஒப்பிட்டு கூறி வாக்கு சேகரித்த திமுக வேட்பாளர் மதிவேந்தன்

**ராசிபுரம், ஏப்.18:**



ராசிபுரம் (தனி) சட்டமன்ற தொகுதியில் திமுக வேட்பாளர் டாக்டர் மா.மதிவேந்தன் ஆர்.புதுப்பட்டி பேரூராட்சி பகுதியில் பொதுமக்களுடன் கலந்துரையாடி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் (தனி) சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆர். புதுப்பட்டி பேரூராட்சி பகுதியில் திமுக வேட்பாளர் டாக்டர் மா.மதிவேந்தன் திறந்தவெளி வாகனத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார்.

அப்போது அதிமுக ஆட்சிக் காலத்தில் எத்தனை நாளுக்கு ஒருமுறை குடிநீர் வழங்கப்பட்டது என்றும், தற்போது திமுக ஆட்சியில் எத்தனை முறைக்கு ஒருமுறை தண்ணீர் கிடைக்கிறது என்றும் மக்களிடம் கேட்டார்.

இதற்கு பொதுமக்கள் தினமும் சுத்தமான ஆற்றுநீர் கிடைக்கிறது என பதிலளித்தனர்.

இதனை தொடர்ந்து, வரவிருக்கும் தேர்தலில் தங்களுக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்ட அவர், உதய சூரியன் சின்னத்தில், எண் 3-ஐ அழுத்தி வாக்களிக்குமாறு வலியுறுத்தி தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

# தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் சார்பில் வேட்பாளர் பூமிநாதனுக்கு வாக்களிக்க நோட்டீஸ் பிரச்சாரம்

**மதுரை,ஏப்.18:**



தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் மதுரை மாநகர் மாவட்டம் சார்பில் மதுரை தெற்கு தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் பூமிநாதன் அவர்களுக்கு வாக்களிக்கக் கோரி மஹால் மற்றும் பந்தடி வீதிகளில் நோட்டீஸ் கொடுத்து பிரச்சாரம் நடைபெற்றது.


தமுஎகச ஓய்வுதியர்கிளை கிளை சார்பில் பிரச்சாரத்தில் எட்டு பேர் பங்கேற்பு

1) முனைவர் சு கிருஷ்ணன்
2) வெ.சங்கரலிங்கம்
3) என் ஜெயச்சந்திரன்
4) அ.கஜேந்திரன்
5) டி.சோமசேகர்
6) டி.முருகன்
7) சிமியோன் ராஜ்
8) சதாசிவம்

பங்கேற்ற தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்க மாநில தலைவர் என் ஜெயச்சந்திரன் தமுஎகச மாநிலக் குழு உறுப்பினர் சாந்தாராம் மாநில செயற்குழு உறுப்பினர் சிரிரசா மாவட்ட தலைவர் செயலாளர் இதர நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றியும் வாழ்த்தும் தமுஎகச ஓய்வுதியர்கிளை கிளை மதுரை மாநகர் மாவட்டம்




# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## தேர்தல் களப்பணியில்...

### தி.மு.க. கூட்டணி மீண்டும் ஆட்சி அமைக்கும்: தனியார் கருத்துக்கணிப்பில் தகவல்

சென்னைசேப்பாக்கம்பத்திரிகையாளர்மன்றத்தில்இந்திய அரசியல் ஜனநாயக யுக்திகள் (ஐ.பி.டி.எஸ்.) அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திருநாவுக்கரசு நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- தமிழக சட்டமன்றத் தேர்தல் தொடர்பாக மாநிலம் தழுவிய அளவில் மக்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தினோம். எங்களின் 4-வது கட்ட ஆய்வில் 35 ஆயிரத்து 126 பேரிடம் நேரில் சென்று தமிழக சட்டமன்றத் தேர்தல் தொடர்பாக மாநிலம் தழுவிய அளவில் மக்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தினோம்.

எங்களின் 4-வது கட்ட ஆய்வில் 35 ஆயிரத்து 126 பேரிடம் நேரில் சென்று தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அதன்படி, தற்போதைய நிலவரப்படி தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி மீண்டும் ஆட்சியைத் தக்கவைக்கும் எனத் தெரிகிறது. மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் சுமார் 138 இடங்களை தி.மு.க. கூட்டணி கைப்பற்றி மிகப்பெரிய வெற்றியைப் பதிவு செய்யும். அவர்களின் வாக்கு வங்கி 39.80 சதவீதமாக இருக்கும். அதேபோல், அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணி சுமார் 35 சதவீத வாக்குகளைப் பெற்று 70 இடங்கள் வரை வெற்றி பெற வாய்ப்புள்ளது. நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் இந்த தேர்தலில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். அக்கட்சி சுமார் 33 சதவீத வாக்குகளைப் பெற்று 3-வது இடத்தைப் பிடிக்கும். ஆனால் எத்தனை தொகுதிகளில் வெற்றி பெறும் என்பதை கணிக்க முடியவில்லை. சீமானின் நாம் தமிழர் கட்சிக்கு 8.42 சதவீத ஆதரவு இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

### திமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நடிகர் சத்யராஜ் பிரசாரம்

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு வருகிற 23-ந்தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தல் களத்தில் திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, நாம் தமிழர் கட்சி, தவெக என 4 முனை போட்டி நிலவுகிறது. தேர்தலை முன்னிட்டு வேட்பாளர்கள் வீதி வீதியாக சென்று தீவிர வாக்கு வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை ஆதரித்து அந்தந்த கட்சி தலைவர்களும், முக்கிய நிர்வாகிகளும் சூறாவளி பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில், நடிகர் சத்யராஜ் திமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து 18 மற்றும் 19 ஆகிய தேதிகளில் பிரசாரம் மேற்கொள்ள உள்ளார். இது தொடர்பாக திமுக தலைமைச் செயலகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது;-

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து நடிகர் சத்யராஜ்யின் தேர்தல் பிரசாரச் சுற்றுப்பயணம் விவரம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### த.வெ.க.வில் பெண்களுக்கு உரிய மரியாதை இல்லை: அஜிதா ஆக்னல் குற்றச்சாட்டு



தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகியாக இருந்த அஜிதா ஆக்னல், அந்த கட்சியிலிருந்து விலகி அண்மையில் தி.மு.க.வில் இணைந்த நிலையில், நேற்று தமிழக மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனை நேரில் சந்தித்துப் பேசினார்.

கனிமொழி எம்.பி. முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்த அஜிதா ஆக்னல், நேற்று திருச்செந்தூர் அருகே உள்ள தண்டுபத்தில் உள்ள தி.மு.க. அலுவலகத்திற்கு வருகை தந்தார். அங்கு தமிழக அமைச்சரும், திருச்செந்தூர் தொகுதி தி.மு.க. வேட்பாளருமான அனிதா ராதாகிருஷ்ணனை நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றார். அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் அஜிதா ஆக்னல் பேசியதாவது:

கடந்த 25 ஆண்டுகளாக விஜய்யின் மக்கள் இயக்கத்தில் பணியாற்றி வந்தேன். கடந்த 2 ஆண்டுகளாக கட்சிக்காக முழுமையாக உழைத்தேன். ஆனால், விஜய் என்னை ஒருமுறை கூட சந்திக்கவில்லை. த.வெ.க.வில் பெண்களுக்கு உரிய மரியாதை அளிக்கப்படுவதில்லை. தூத்துக்குடி தொகுதியில் போட்டியிட எனக்கு வாய்ப்பு வழங்காமல், விஜய் தனது நண்பரான நடிகர் ஸ்ரீநாத்துக்கு வாய்ப்பு கொடுத்துள்ளார்.

தவறுசெய்துவிட்டுமாற்றுகட்சியிலிருந்துவந்தவர்களுக்கும், குற்றப் பின்னணி உள்ளவர்களுக்கும் மட்டுமே த.வெ.க.வில் சீட் வழங்கப்பட்டுள்ளது. சீட்டுக்காக கெஞ்சிக் கூத்தாடியும் எனக்கு வாய்ப்பு தரவில்லை.

தி.மு.க.வில் பெண்களுக்கு உரிய மரியாதை இருக்கிறது. அதனால் தான் நான் இந்த இயக்கத்தில் இணைந்தேன். பெற்ற பிள்ளைகளுக்கே கடன் கொடுத்தேன் என்று சொல்லும் ஒரே தலைவர் விஜய் தான் என அவர் சாடினார். முன்னாள் மக்கள் இயக்க நிர்வாகி ஒருவரே விஜய்யை கடுமையாக விமர்சித்துப் பேசியிருப்பது அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## கோவையில் இன்று பிரதமர் மோடி, முதல்வர் ஸ்டாலின் பிரச்சாரம்: பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்



கோவையில் இன்று (ஏப்.18) ஒரே நாளில் வெவ்வேறு இடங்களில் பிரதமர் மோடி, முதல்வர் ஸ்டாலின் ஆகியோர் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுகின்றனர். தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரம் களை கட்டியுள்ளது.

வாக்குப்பதிவு தினம் நெருங்குவதைத் தொடர்ந்து, அரசியல் கட்சிகளின் நட்சத்திர பேச்சாளர்கள் கோவையில் அடுத்தடுத்து பிரச்சாரம் செய்ய உள்ளனர்.

**11 தொகுதி வேட்பாளர்கள்**

கோவை மாவட்டத்தில் மொத்தமுள்ள 10 தொகுதிகளில் அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பில், 9-ல் அதிமுக வேட்பாளர்களும், ஒரு தொகுதியில் (கோவை வடக்கு) பாஜக வேட்பாளரும் போட்டியிடுகின்றனர். திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அவிநாசி (தனி) தொகுதியில் பாஜக சார்பில் மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் போட்டியிடுகிறார்.

அவிநாசி தொகுதியின் குறிப்பிட்ட பகுதிகள், கோவை மாவட்டம் அன்னூரில் வருகிறது. எனவே, 11 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கோவை கொடிசியா மைதானத்தில் மாலை 5 மணிக்கு நடைபெறும் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பேசுகிறார்.

**பழனிசாமி பங்கேற்பு**

அவருடன் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி மற்றும் கூட்டணிக் கட்சி தலைவர்களும் பங்கேற்கின்றனர். பிரதமரின் ரோடு ஷோ இதுவரை முடிவு செய்யப்படவில்லை என கோவை பாஜகவினர் தெரிவித்தனர்.

பிரதமரின் வருகையை ஒட்டி, கோவை கொடிசியா மைதானத்தில் பிரம்மாண்ட பந்தல், மேடை, பல ஆயிரம் பேர் அமரும் வகையில் இருக்கைகள், மின்விளக்கு வசதி, குடிநீர் வசதி உள்ளிட்டவை ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மாநகர போலீஸ் உயரதிகாரிகள் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆய்வு செய்துவருகின்றனர்.

**முதல்வர் 2-ம் கட்ட பிரச்சாரம்**

திமுக கூட்டணியில் திமுக 7 தொகுதிகளிலும், காங்கிரஸ் 2, கொமதேக ஒரு தொகுதியிலும் போட்டியிடுகின்றன. முதல் கட்டமாக கடந்த வாரம், கொடிசியா மைதானத்தில் நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

**2-ம் கட்டமாக இன்று மாலை**

7 மணிக்கு மேட்டுப்பாளையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுக்கூட்டத்தில் மேட்டுப்பாளையம், கவுண்டம்பாளையம், தொண்டாமுத்தூர், குன்னூர், கூடலூர், ஊட்டி ஆகிய 6 தொகுதிகளில் போட்டியிடும் திமுக மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து ஸ்டாலின் பிரச்சாரம் செய்கிறார்.

பிரதமர் மோடி, முதல்வர் ஸ்டாலின் ஆகியோர் ஒரே நாளில், கோவையில் பிரச்சாரத்தில் ஈடுபடுவதால், மாநகர காவல் ஆணையர் என்.கண்ணன், மேற்கு மண்டல ஐஜி ரம்யாபாரதி ஆகியோர் தலைமையில் பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

## தமிழிசை சௌந்தரராஜன் சொத்து விவர முரண்பாடு: விசாரணைக்கு உத்தரவிடக் கோரி மனு



மயிலாப்பூர் தொகுதி பாஜக வேட்பாளா் தமிழிசை சௌந்தரராஜன் தாக்கல் செய்த வேட்புமனுவில் உள்ள சொத்து விவர முரண்பாடு குறித்து தோதல் ஆணையம், வருமான வரித் துறை விசாரணைக்கு உத்தரவிடக் கோரி சென்னை உயாநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

மயிலாப்பூர் தொகுதி வேட்பாளரான கௌதம் சிவா என்பவா், சென்னை உயா்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், தமிழக பேரவைத் தோ்தலில் மயிலாப்பூா தொகுதியில் பாஜக சாா்பில் தமிழிசை சௌந்தரராஜன் போட்டியிடுகிறாா். அவா் தாக்கல் செய்துள்ள வேட்புமனுவில் சொத்துகள், முதலீடுகள், கடன்கள் உள்ளிட்ட விவரங்கள் மறைக்கப்பட்டுள்ளன. தமிழிசை சௌந்தரராஜன், அவரது கணவா் மற்றும் மகள் ஆகியோா, கடந்த 2020-ஆம் ஆண்டு முதல் 2023-ஆம் ஆண்டு வரை தாக்கல் செய்த வருமான வரி கணக்கு விவரங்கள் குறித்து, கடந்த 2024-ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தோதலில் தாக்கல் செய்த வேட்புமனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், தற்போது தாக்கல் செய்த வேட்புமனுவில் உள்ள விவரங்கள் ஏற்கெனவே அவா் தாக்கல் செய்திருந்த விவரங்களுக்கு முரணாக உள்ளது. எனவே, இது குறித்து தோ்தல் ஆணையம் மற்றும் வருமான வரித் துறை விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் எனக் கூறியிருந்தாா்.

இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.

## வாக்குப்பதிவு இயந்திரங்களில் 4,023 வேட்பாளர்களின் பெயர், சின்னம் பொருத்தும் பணி தொடக்கம்

சென்னையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர், வண்ணப் புகைப்படம் மற்றும் சின்னம் உள்ளடங்கிய வாக்குச்சீட்டு பொருத்தும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இதுதொடர்பாக சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளான டாக்டர் ராதாகிருஷ்ணன் நகரில் 38 வேட்பாளர்களும், பெரம்பூரில் 47 வேட்பாளர்களும், கொளத்தூரில் 35 வேட்பாளர்களும், வில்லிவாக்கத்தில் 28 வேட்பாளர்களும், திரு.வி.க. நகரில் 23 வேட்பாளர்களும், எழும்பூரில் 18 வேட்பாளர்களும், ராயபுரத்தில் 28 வேட்பாளர்களும், துறைமுகத்தில் 23 வேட்பாளர்களும், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணியில் 26 வேட்பாளர்களும், ஆயிரம் விளக்கில் 18 வேட்பாளர்களும், அண்ணா நகரில் 24 வேட்பாளர்களும், விருகம்பாக்கத்தில் 24 வேட்பாளர்களும், சைதாப்பேட்டையில் 15 வேட்பாளர்களும், தியாகராயநகரில் 26 வேட்பாளர்களும், மயிலாப்பூரில் 19 வேட்பாளர்களும், வேளச்சேரியில் 27 வேட்பாளர்களும் என மொத்தம் 419 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இந்த வேட்பாளர்களின் பெயர், வண்ணப் புகைப்படம் மற்றும் சின்னம் உள்ளடங்கிய வாக்குச்சீட்டுகள் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பொருத்தும் பணி (16.04.2026) தொடங்கி நடைபெறுகிறது.

இதில் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் டாக்டர் பெசன்ட் சாலையில் உள்ள என்.கே. திருமலைச்சாரியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி, பீமன்னா கார்டன் தெருவில் சென்னை மேல்நிலைப்பள்ளி ஆகிய மையங்களில் நடைபெற்ற மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர், வண்ண புகைப்படம் மற்றும் சின்னம் உள்ளடங்கிய வாக்குச்சீட்டு பொருத்தும் பணி நடைபெற்றதை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

## சட்டசபை தேர்தலை முன்னிட்டு, 10,663 பஸ்கள் இயக்க திட்டம்



தமிழக சட்டப்பேரவைத் தோ்தலை முன்னிட்டு வாக்காளா்கள், சொந்த ஊா்களுக்குச் சென்று வாக்களிக்க வசதியாக ஏப்.21, 21, 23 ஆகிய தேதிகளில் 5,574 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என அரசு விரைவு போக்குவரத்துக்கழகம் அறிவித்துள்ளது.

சென்னையில் இருந்து ஏப்.21-ஆம் தேதி தினசரி இயக்கப்படும் 2,092 பேருந்துகளுடன், 1,404 சிறப்பு பேருந்துகளும், ஏப்.22-ஆம் தேதி தினசரி இயக்கப்படும் 2,092 பேருந்துகளுடன், 3570 சிறப்பு பேருந்துகளும், ஏப்.23-ஆம் தேதி தினசரி இயக்கப்படும் 905 பேருந்துகளுடன், 600 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்படும்.

*கிளாம்பாக்கம் புகா் பேருந்து நிலையத்திலிருந்து புதுச்சேரி, கடலூா், சிதம்பரம், திருச்சி, மதுரை, தூத்துக்குடி, செங்கோட்டை, திருநெல்வேலி, சேலம், கோவை, கும்பகோணம், தஞ்சை வழித்தடங்களில் செல்லும் பேருந்துகள் இயக்கப்படும்.

*கிளாம்பாக்கம் மாநகா் பேருந்து நிலையத்திலிருந்து வந்தவாசி, போளூா், திருவண்ணாமலை வழித்தடங்களில் செல்லும் பேருந்துகள் இயக்கப்படும். * கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து கிழக்குகடற்கரை (இசிஆா்), காஞ்சிபுரம், வேலூா், பெங்களூரு, திருத்தணி வழித்தடங்களில் செல்லும் பேருந்துகள் இயக்கப்படும்.

*மாதவரம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து பொன்னேரி, ஊத்துக்கோட்டை வழியாக ஆந்திரம் மாநிலத்துக்கு செல்லும் பேருந்துகளும், வழக்கமாக இயக்கப்படும் திருச்சி, சேலம், கும்பகோணம், திருவண்ணாமலை பேருந்துகளும் இயக்கப்படும்.

முன்பதிவு வசதி: சிறப்பு பேருந்துகளில் பயணிக்கஏற்கெனவே நடைமுறையில் உள்ள ற்ய்ள்ற்ஸ்ரீ எனப்படும் செயலியிலும், ஜ்ஜ்ஜ்.ற்ய்ள்ற்ஸ்ரீ.ண்ய் எனும் இணையதளம் மூலமாகவும் முன்பதிவு செய்து பயணிக்கலாம். இது கடைசி நேர கூட்ட நெரிசலை தவிா்க்க உதவும். 24 மணிநேர கட்டுப்பாட்டு அறை: பயணிகள், பேருந்துகளின் இயக்கம் குறித்து அறிந்து கொள்ளவும், புகாா்கள் ஏதேனும் இருந்தால் தெரிவிக்கவும் வசதியாக 9445014436 எனும் கைப்பேசி எண்ணை தொடா்பு கொள்ளலாம். மேலும், பயணிகளின் நலனை கருத்தில் கொண்டு கோயம்பேடு, கிளாம்பாக்கம் பேருந்து நிலையங்களில் 24 மணி நேரமும் செயல்படும் வகையிலான கட்டுப்பாட்டு அறைகள் திறக்கப்பட்டுள்ளன. பயணிகள் இதை பயன்படுத்திக்கொள்ளலாம். இணைப்பு பேருந்துகள்: பொதுமக்களின் வசதிக்காக கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் மற்றும் புகா் பேருந்து நிலையங்கள், மாதவரம் பேருந்து நிலையத்துக்கு செல்ல ஏதுவாக மாநகா் போக்குவரத்துக்கு கழகம் சாா்பில் இணைப்பு பேருந்துகள் 24 மணி நேரமும் இயக்கப்படும் என அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தின் மேலாண் இயக்குநா் ஆா்.மோகன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நடிகனை பிடித்தால் விசில் அடிக்கலாம்; நாட்டை கொடுக்க முடியுமா? - நடிகர் பிரகாஷ்ராஜ் கேள்வி



திண்டுக்கல் மாவட்டம் பழனியில், தி.மு.க. கூட்டணி சார்பில் போட்டியிடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வேட்பாளர் பாண்டியை ஆதரித்து நடிகர் பிரகாஷ்ராஜ் வாக்கு சேகரித்தார். அப்போது அவர் பேசியதாவது:-

சாமி சிலையை திருடும் கும்பலை பார்த்திருப்போம். ஆனால் சாமியை திருடும் கும்பல் தற்போது வந்துள்ளது. இந்த தேர்தல் மூன்று மாடலுக்கான தேர்தல். ஒன்று திராவிட மாடல், 2-வது அடிமை மாடல், 3-வது சினிமா மாடல். திராவிட மாடல் கல்வியை கொடுத்தது. இந்தியாவிலேயே ஒரு மாநிலம் இப்படி இருக்க வேண்டும் என பெருமையை சேர்த்தது. மொழி மானத்தை காப்பாற்றியது.

தற்போது இன மானத்தை காப்பாற்ற போராடுகிறது. அடிமை மாடல் என்பது நமது தன்மானத்தை, சுயமரியாதையை மோடியிடம் கொடுப்பது. மக்கள்தொகையை வைத்து எம்.பி.க்களை அதிகமாக்கும் திட்டத்தை தேர்தல் நேரத்தில் கொண்டுவரும் நோக்கத்தில் செயல்பட்டு வருகின்றனர். இதை பார்த்து எடப் பாடி பழனிசாமி மற்றும் அவருடைய கூட்டணி கட்சியினர் வாயை மூடிக்கொண்டு இருக்கின்றனர்.

சினிமா மாடல் என்றால் சினிமாவில் டாக்டர் ஆகலாம், என்ஜினீயர் ஆகலாம். ஏன் முதல்-அமைச்சர் கூட ஆகலாம். அரசியலில் வந்த உடனே முதல்-அமைச்சராக முடியுமா? என்னுடைய அளவுக்கு விஜய் அரசியல் பேசி உள்ளாரா?, தமிழக மக்களுக்கு ஏதாவது பிரச்னை வந்தபோது, அவர்களுக்காக நின்றதுண்டா?.

சினிமாவில் திறமையை பார்த்து மக்கள் வைத்துள்ள அன்பை, தற்போது அரசியலுக்கு பயன்படுத்துகிறார். நடிகனை பிடித்தால் விசில் அடிக்கலாம், ஆனால் நாட்டை கொடுக்க முடியுமா. இந்த தேர்தல் ஒற்றுமைக்கும், பிரிவினைக்குமான தேர்தல்.

இவ்வாறு அவர் பேசினார்.

## திருமலையில் 77,077 பக்தர்கள் தரிசனம்



**திருமலை, ஏப்.18:**

திருமலை ஏழுமலையான் கோயிலில் புதன்கிழமை முழுவதும் 77,077 பக்தர்கள் தரிசித்தனர். 27,831 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர்.

கோடை விடுமுறையையொட்டி பக்தர்கள் வருகை அதிகரித்துள்ள நிலையில், வியாழக்கிழமை நிலவரப்படி தா்ம தரிசனத்துக்கு 8 (தரிசன டோக்கன்கள் இல்லாதவர்கள்) மணிநேரமும், ரூ.300 விரைவு தரிசனம், நேரடி இலவச தரிசன டோக்கன்கள் பெற்ற பக்தர்களுக்கும் 3 முதல் 4 மணி நேரம் ஆனது.

இதற்கிடையே புதன்கிழமை முழுவதும் 77, 077 பக்தர்கள் தரிசனம் செய்தனர்; 27,831 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர்.

உண்டியல் காணிக்கையை கணக்கிட்டதில் ரூ.3.47 கோடி வசூலானது என தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

## இருக்கன்குடி மாரியம்மன் கோவிலில் உண்டியல் காணிக்கை ரூ.46 லட்சம்



**சாத்தூர், ஏப்.18:**

இருக்கன்குடி மாரியம்மன் கோயிலில் ரூ.46 லட்சம் உண்டியல் காணிக்கை வசூலாகி இருந்தது. சாத்தூர் அருகே உள்ள இருக்கன்குடி மாரியம்மன் கோவில் தென்தமிழகத்தில் பிரசித்திபெற்றது. இங்கு மாதந்தோறும் உண்டியல் திறக்கப்படுவது வழக்கம். அதன் அடிப்படையில் நேற்று 10 நிரந்தர உண்டியல், ஒரு கோசாலை உண்டியல் மற்றும் அன்னதான உண்டியல்கள் திறக்கப்பட்டன.

விருதுநகர் மாவட்ட இந்து அறநிலைத்துறை உதவி ஆணையர் நாகராஜ், இருக்கன்குடி மாரியம்மன் கோவில் திருக்கோயில் உதவி ஆணையாளர் இளங்கோவன், பரம்பரை அறங்காவலர் குழு தலைவர் ராமமுர்த்தி பூசாரி, ஆணையர் அலுவலக பிரதிநிதி ஜெயசீலன் ஆகியோர் முன்னிலையில் காணிக்கை கணக்கிடப்பட்டது. அதில் ரூ.46,55,266 ரொக்க பணமும், தங்கம் 71.700 கிராம், வெள்ளி 502 கிராம் கிடைத்தது. உண்டியல் காணிக்கை கணக்கிடும் பணியில் மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள், கோவில் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

# மதுரை கள்ளழகர் சித்திரைத் திருவிழா: முகூர்த்தக்கால் நடும் விழா கோலாகலம்!

**மதுரை, ஏப்.18:**

மதுரை கள்ளழகர் திருக்கோயில் சித்திரைத் திருவிழா முகூர்த்தக்கால் நடும் கொட்டகை முகூர்த்தத்துடன் கோலாகலமாகத் தொடங்கியது.



மதுரை கள்ளழகர் திருக்கோயில் சித்திரைத் திருவிழாவின் துவக்க நிகழ்ச்சியாக முகூர்த்தக்கால் நடும் கொட்டகை முகூர்த்த விழா இன்று காலை சிறப்பாக நடைபெற்றது. பக்தர்கள் ஏராளமானோர் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

108 வைணவ தலங்களில் ஒன்றானதும், ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருத்தலமுமான மதுரை கள்ளழகர் திருக்கோயிலில் நடைபெறும் விழாக்களில் சித்திரைத் திருவிழா மிக முக்கியமானதாகும். அந்த வகையில் கள்ளழகர் தங்கக் குதிரை வாகனத்தில் வைகை ஆற்றில் இறங்கும் வைபவத்தில் மட்டும் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்வர்.

சிறப்புப் பெற்ற இவ்விழா வரும் 1-ம் தேதி நடைபெறவுள்ள நிலையில் திருவிழாவின் துவக்க நிகழ்ச்சியாக முகூர்த்தக்கால் ஊன்றும் கொட்டகை முகூர்த்த விழா கள்ளழகர் திருக்கோயிலின் உபகோவிலான மதுரை தல்லாகுளம் பிரசன்ன வெங்கடாசலபதி பெருமாள் திருக்கோயிலில் இன்று காலை சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ஆயிரம் பொன்சப்பரத்தில் பொருத்தப்படும் யாழி முகத்திற்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடத்தப்பட்டது. இதற்காக அழகர் கோயிலில் உள்ள நூபுரகங்கையில் தீர்த்தம் கொண்டு வரப்பட்டுச் சிறப்புப் பூஜைகள் செய்யப்பட்டது. தொடர்ந்து மேளதாளங்கள் முழங்கிட முகூர்த்தக்கால் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டு கோயில் நுழைவு வாயிலில் முகூர்த்தகால் நடப்பட்டது. கள்ளழகர் திருக்கோயில் சித்திரைத் திருவிழாவின் துவக்க நிகழ்ச்சியாக முகூர்த்தக்கால் நடப்பட்டதைத் தொடர்ந்து கள்ளழகர் மதுரை வரும்போது எழுந்தருளும் அனைத்து மண்டகப்படிகளிலும் இன்று முகூர்த்தக்கால் நடப்பட்டது.

இந்த நிலையில் மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில் சித்திரைத் திருவிழா வரும் 19-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. தொடர்ந்து வரும் 27-ம் தேதி மீனாட்சி அம்மனுக்குப் பட்டாபிஷேகமும், 28-ம் தேதி மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணமும், சிகர நிகழ்ச்சியாகத் திருத்தேரோட்டம் வரும் 29-ம் தேதியும் நடைபெறுகிறது. மதுரையில் கள்ளழகர் திருக்கோயில் சித்திரைத் திருவிழா முகூர்த்தக்கால் நடுதலுடன் துவங்கியுள்ள நிலையில் நகரமே விழாக்கோலம் பூணத் துவங்கியுள்ளது.

## மதுரை மீனாட்சி-சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணத்திற்கான டிக்கெட் முன்பதிவு: 19-ந் தேதி தொடங்குகிறது

**மதுரை, ஏப்.18:**

உலக புகழ்பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சித்திரை திருவிழா வருகிற 19-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி 30-ந்தேதி நிறைவு பெறுகிறது. விழாவில் முக்கிய விழாவான மீனாட்சி-சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் வருகிற 28-ந்தேதி கோவிலின் வடக்கு, மேற்கு ஆடி வீதியில் உள்ள திருக்கல்யாண மண்டபத்தில் காலை 8.35 மணிக்கு மேல் 8.59 மணிக்குள் நடைபெற உள்ளது.



திருக்கல்யாணத்தை காண வரும் பக்தர்களின் வசதிக்காக ரூ.200, ரூ.500 கட்டண சீட்டுகள் வைத்திருப்பவர்கள் வடக்கு கோபுரம் வழியாகவும், பக்தர்கள் கட்டணமில்லா தரிசன முறையில் முதலில் வருபவர்களுக்கே அனுமதி என்ற முறையிலும் தெற்குகோபுரம் வழியாகவும் அனுமதிக்கப்பட உள்ளனர்.

திருக்கல்யாணத்திற்கான கட்டணச்சீட்டு முன்பதிவு செய்யும் வசதி கோவில் இணையதளமான *maduraimeenakshi.hrce.tn.gov.in* மற்றும் இந்து சமய அறநிலையத்துறை இணையதளமான *hrce.tn.gov.in* ஆகியவற்றில் வருகிற 19-ந்தேதி முதல் 22-ந்தேதி இரவு 9 மணி வரை ஏற்படுத்தப்பட்டு உள்ளது. ஒரு நபரால் ரூ.500 கட்டண சீட்டு 2 மட்டுமே பெற முடியும். ரூ.200 கட்டண சீட்டை ஒருவர் 3 வரை பெறலாம். ஆனால் ஒரே நபர் ரூ.500, ரூ.200 கட்டண சீட்டை பெற முடியாது. பிறந்த தேதி சரியாக பூர்த்தி செய்து இருக்க வேண்டும். ஒரு பதிவுக்கு ஒரு அலைபேசி எண் மட்டுமே பயன்படுத்த முடியும். பாதுகாப்பு கருதி திருக்கல்யாணத்தன்று குழந்தைளை அழைத்து வருவதை தவிர்க்கவும்.

கோவிலுக்கு சொந்தமான எல்லீஸ்நகரில் அமைந்துள்ள யாத்ரி நிவாஸ் தங்கும் விடுதியில் ரூ.500, ரூ.200 கட்டண சீட்டை 19-ந்தேதியில் இருந்து நேரில் வந்து பதிவு செய்து கொள்ளலாம். ஆதார் நகல், புகைப்படத்துடன்கூடிய அடையாள சான்று, அலைபேசி எண், இ-மெயில் முகவரி அவசியம். கூடுதல் எண்ணிக்கையில் முன்பதிவு செய்திருந்தால் குலுக்கல் முறையில் தேர்வு செய்து அலைபேசி, இ-மெயிலில் 23-ந்தேதி அன்று தகவல் தெரிவிக்கப்படும்.

பக்தர்கள் 24-ந்தேதி முதல் 27-ந்தேதி வரை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை எல்லீஸ் நகரில் அமைந்துள்ள யாத்ரி நிவாஸ் தங்கும் விடுதியில், தங்களுக்கு வந்த எஸ்.எம்.எஸ்., இ-மெயிலை காண்பித்து பணம் செலுத்தி திருக்கல்யாண கட்டணசீட்டை பெறலாம். ரூ.500 மதிப்பிலான கட்டணச்சீட்டு பெற்றவர்கள் வடக்குமொட்டை முனீஸ்வரர் சன்னதி அருகில் உள்ள வழியிலும், ரூ.200 கட்டண சீட்டு பெற்றவர்கள் வடக்கு, கிழக்கு சித்திரை வீதி சந்திப்பு அருகே அமைக்கப்பட்டுள்ள பாதை வழியாகவும் வடக்கு கோபுரம் பகுதியில் அனுமதிக்கப்படுவார்கள்.

திருக்கல்யாண டிக்கெட் பெற்றவர்கள் அன்று காலை 5 மணியில் இருந்து 7 மணிக்குள் அவர்களுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் அமர்ந்து மீனாட்சி-சுந்தரேசுவரர் திருக்கல்யாணத்தை காணலாம். இந்த தகவலை கோவில் இணை கமிஷனர் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

## திருமலை, திருப்பதியில் பாஷ்யகாரரர் உற்சவம் தொடக்கம்

**திருப்பதி, ஏப்.18:**

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் பாஷ்யகாரரர் உற்சவம் 19 நாட்கள் நடைபெறும். 'பாஷ்யகாரரர்' என்பது வைணவ சம்பிரதாயத்தின் மிக முக்கிய ஆச்சாரியரான ராமானுஜரை குறிக்கும் சிறப்புப் பெயராகும். விசிஷ்டாத்வைத தத்துவத்தை நிலைநிறுத்த, பிரம்ம சூத்திரத்துக்கு 'ஸ்ரீபாஷ்யம்' என்னும் விளக்கவுரை எழுதியதால், அவருக்கு இந்தப் பெயர் ஏற்பட்டது. உடையவர், எதிராசர், லட்சுமணமுனி, இளையாழ்வார் போன்ற பல பெயர்களில் ராமானுஜர் போற்றப்படுகிறார். அவருடைய பிறந்த நட்சத்திரமான திருவாதிரையை முன்னிட்டு ஆண்டுதோறும் இந்தச் சாத்துமுறை நடக்கிறது. அவ்வகையில் இந்த ஆண்டின் பாஷ்யகாரரர் உற்சவம் நேற்று முன்தினம் தொடங்கியது. அன்றைய தினம் காலை கோவிலில் முதல் மணி அடித்ததும் உற்சவர் ராமானுஜரை தங்கத்திருச்சி வாகனத்தில் வைத்து கோவிலின் நான்கு மாட வீதிகளில் ஊர்வலமாக எடுத்துச் சென்றனர்.



வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



### நலம் தரும் மருத்துவம்

## மரணத்தை தள்ளிப்போடும் மசாலாவின் மருத்துவ ரகசியங்கள்!

நம் சமையலறையில் எப்போதும் இருக்கும் ஒரு சிறிய மசாலா தான் இலவங்கப்பட்டை. ஆனால் இந்தச் சின்ன துண்டில் இருக்கும் நன்மைகள் பெரியவை. மணமும் சுவையும் தருவதோடு, உடல்நலத்தையும் காக்கும் தன்மை இதற்கு உண்டு.

இயற்கையான மரத்தின் உள் பட்டையிலிருந்து பெறப்படும் இது, பல நூற்றாண்டுகளாக மருத்துவத்திலும் சமையலிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இலவங்கப்பட்டை இரண்டு முக்கிய வகைகளில் கிடைக்கிறது சிலோன் மற்றும் காசியா. இதில் சிலோன் மென்மையான சுவை கொண்டது; காசியா சற்று அதிக காரத்தன்மை கொண்டது. இரண்டும் பயனுள்ளவையே, ஆனால் அளவோடு எடுத்துக்கொள்ள வேண்டும்.

இலவங்கப்பட்டையின் முக்கிய ஆரோக்கிய நன்மைகளைப் பற்றி இந்தப் பதிவில் சுருக்கமாகப் பார்க்கலாம்:

இலவங்கப்பட்டை தொற்றுகளைத் தடுக்கிறது. இதில் உள்ள நுண்ணுயிர் எதிர்ப்பு தன்மை, பாக்டீரியா மற்றும் பூஞ்சைகளை கட்டுப்படுத்த உதவுகிறது. வாய்நலத்தையும் பாதுகாக்கிறது.

கொதிக்க வைத்த இலவங்கப்பட்டை நீர் இரத்தச் சர்க்கரையை கட்டுப்படுத்துகிறது. நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும். இன்சுலின் செயல்பாட்டை மேம்படுத்தி, சர்க்கரை அளவை சீராக வைத்திருக்க உதவுகிறது.

கொதிக்க வைத்த இலவங்கப்பட்டை நீர் கொலஸ்ட்ராலை குறைக்கிறது. கெட்ட கொழுப்பை (LDL) குறைத்து, நல்ல கொழுப்பை (HDL) அதிகரிக்க உதவுகிறது. இதனால் இதய ஆரோக்கியம் மேம்படும்.

கொதிக்க வைத்த இலவங்கப்பட்டை நீர் இதயத்தை பாதுகாக்கிறது. இரத்த ஓட்டத்தை சீராக்கி, இரத்த அழுத்தத்தை குறைக்க உதவுகிறது. இதய நோய் அபாயத்தையும் குறைக்கிறது.

இலவங்கப்பட்டை அழற்சியை குறைக்கிறது. உடலில் ஏற்படும் வீக்கம் மற்றும் அழற்சியை குறைக்க உதவுகிறது. மூட்டுவலி உள்ளவர்களுக்கு இது நிவாரணம் தரலாம்.

இலவங்கப்பட்டை செரிமானத்தை மேம்படுத்துகிறது. குடல் ஆரோக்கியத்தை சீராக்கி, வாயு, வயிற்றுப் பெருக்கு போன்ற பிரச்னைகளை குறைக்கிறது.

இலவங்கப்பட்டை ஆன்டிஆக்ஸிடென்ட்கள் நிறைந்தது. உடலில் உள்ள நச்சுகளை நீக்கி, செல்களை பாதுகாக்கிறது. முதுமையை தாமதப்படுத்த உதவுகிறது.

இலவங்கப்பட்டை, மூளை ஆரோக்கியத்தை காக்கிறது. நினைவாற்றல் மற்றும் நரம்பு செயல்பாட்டை மேம்படுத்த உதவுகிறது என்று ஆய்வுகள் கூறுகின்றன.

# ஸ்மார்ட்போன் இருந்தா போதும்! ஒரிஜினல் வாக்காளர் அட்டையை ஆன்லைனில் டவுன்லோட் செய்வது எப்படி?

தமிழகத்தில் தேர்தல் நடைபெற இன்னும் சில நாள்களே உள்ள நிலையில் உங்களிடம் வாக்காளர் அடையாள அட்டை இல்லையெனில் அதற்காக நீங்கள் அலைய வேண்டாம். வீட்டில் இருந்தபடியே வாக்காளர் அடையாள அட்டையை பதிவிறக்கம் செய்வதற்கான வழியை தெரிந்த கொள்வோம்.

### வாக்காளர் அட்டையை ஆன்லைனில் டவுன்லோட் செய்வது எப்படி?

இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) வாக்காளர்கள் தங்கள் அடையாள அட்டையை எளிதாகப் பெறும் வகையில் E-EPIC (ELECTRONIC ELECTORAL PHOTO IDENTITY CARD) என்ற டிஜிட்டல் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. உங்கள் வாக்காளர் அட்டையை ஆன்லைனில் பதிவிறக்கம் செய்வது எப்படி என்பது குறித்த விரிவாக தெரிந்துகொள்வோம்.

இந்தியாவில் ஜனநாயகம் வலுப்பெற வாக்காளர் அடையாள அட்டை மிக முக்கியமானது. முன்னெல்லாம் வாக்காளர் அட்டை தொலைந்து போனால் அல்லது புதிய அட்டை தேவைப்பட்டால் அரசு அலுவலகங்களுக்கு அலைந்து திரிய வேண்டியிருந்தது. ஆனால், இப்போது உங்கள் கையில் இருக்கும் ஸ்மார்ட்போன் அல்லது கணினி மூலமாகவே ஒரு சில நிமிடங்களில் டிஜிட்டல் வாக்காளர் அட்டையை டவுன்லோட் செய்துகொள்ள முடியும்.

### e-EPIC என்றால் என்ன?

E-EPIC என்பது உங்கள் பிளாஸ்டிக் வாக்காளர் அட்டையின் டிஜிட்டல் பதிப்பாகும். இது PDF வடிவில் இருக்கும். இதில் ஒரு பாதுகாப்பான QR கோடு இருக்கும். இதை நீங்கள் பிரிண்ட் அவுட் எடுத்து லேமினேட் செய்தும் பயன்படுத்தலாம். இது ஒரிஜினல் வாக்காளர் அட்டைக்கு இணையான சட்டப்பூர்வ அங்கீகாரம் கொண்டது.




### தேவையான ஆவணங்கள்

உங்கள் வாக்காளர் அடையாள அட்டை எண் (EPIC NUMBER).

வாக்காளர் அட்டையுடன் இணைக்கப்பட்ட மொபைல் எண், இணைய வசதி கொண்ட கணினி அல்லது ஸ்மார்ட்போன்.

அதிகாரப்பூர்வ இணையதளத்திற்குச் செல்லவும்.

முதலில் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ இணையதளமான VOTERS.ECI.GOV.IN என்ற முகவரிக்குச் செல்லவும். லாகின் அல்லது பதிவு செய்தல் (SIGN IN / REGISTER). உங்களிடம் ஏற்கனவே கணக்கு (ACCOUNT) இருந்தால், உங்கள் மொபைல் எண் மற்றும் பாஸ்வேர்டு கொடுத்து லாகின் செய்யவும். புதிய பயனர் என்றால், 'SIGN UP' ஆப்ஷனை கிளிக் செய்து உங்கள் மொபைல் எண் மூலம் ஒரு புதிய கணக்கை உருவாக்கிக் கொள்ளவும்.

E-EPIC DOWNLOAD ஆப்ஷனைத் தேர்வு செய்யவும்

லாகின் செய்த பிறகு, திரையில் தோன்றும் பல விருப்பங்களில் 'E-EPIC DOWNLOAD' என்ற பட்டனை கிளிக் செய்யவும்.

### பதிவிறக்கம் செய்யும் வழிமுறைகள் :

இப்போது உங்களிடம் இரண்டு விருப்பங்கள் கேட்கப்படும்:

EPIC NUMBER: உங்களிடம் வாக்காளர் அட்டை எண் இருந்தால் அதை உள்ளிடலாம்.

FORM REFERENCE NUMBER: நீங்கள் புதிய வாக்காளர் அட்டைக்கு விண்ணப்பித்திருந்தால், உங்களுக்கு வழங்கப்பட்ட ரெஃபரன்ஸ் எண்ணைப் பயன்படுத்தலாம்.

உங்கள் எண்ணை உள்ளிட்ட பிறகு, மாநிலத்தைத் (TAMILNADU) தேர்ந்தெடுத்து 'SEARCH' என்பதை அழுத்தவும்.

மொபைல் எண் சரிபார்ப்பு (OTP VERIFICATION)

உங்கள் விவரங்கள் திரையில் தோன்றும். அதன் கீழே உள்ள 'SEND OTP' பட்டனை அழுத்தவும். உங்கள் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணிற்கு 6 இலக்க OTP வரும். அதை உள்ளிட்டு சரிபார்க்கவும்.

### பதிவிறக்கம் செய்தல்

வெற்றிகரமாகச் சரிபார்க்கப்பட்ட பிறகு, 'DOWNLOAD E-EPIC' என்ற பட்டன் தோன்றும். அதை கிளிக் செய்தால், உங்கள் வாக்காளர் அட்டை PDF வடிவில் பதிவிறக்கம் செய்யப்படும்.

மொபைல் எண் இணைக்கப்படவில்லை என்றால் என்ன செய்வது?

மொபைல் எண் இணைக்கப்படவில்லை என்றால் என்ன செய்வது?

உங்கள் மொபைல் எண் வாக்காளர் அட்டையுடன் இணைக்கப்படவில்லை என்றால், நீங்கள் முதலில் 'FORM 8' மூலம் மொபைல் எண்ணைப் புதுப்பிக்க வேண்டும். அதன் பிறகே ஆன்லைனில் டவுன்லோட் செய்ய முடியும்.

டிஜிட்டல் வாக்காளர் அட்டை என்பது அவசரத் தேவைகளுக்கும், அடையாளச் சான்றாகவும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தேர்தல் நேரங்களில் பூத் ஸ்லிப் (BOOTH SLIP) கிடைக்காத பட்சத்தில், இந்த டிஜிட்டல் அட்டையை நீங்கள் தாராளமாகப் பயன்படுத்தலாம்.

# "அப்பாவின் நிழல்"




ரவிக்கு சிறு வயதிலிருந்தே ஓவியத்தின் மீது ஆர்வம் அதிகம்.

ஆனால் அவன் அப்பா ”ஓவியத்தை வைத்து வாழ்க்கையை ஓட்ட முடியாது... படிக்கற வேலையை மட்டும் பாரு" என்பார்.
அந்த வார்த்தைகள் ரவியின் ஓவியத் திறமையை உலர்த்தின. ஒரு கட்டத்தில் அவன் வரைவதையே நிறுத்தி விட்டான்.

கல்லூரி வாழ்க்கையில் அவனுடன் வந்தாள் சுதா. ஒருநாள் எதேச்சையாக அவன் பழைய ஓவியங்களைப் பார்த்தவள், "ரவி... இது சாதாரண விஷயமில்லை... பெரிய கலை," என்றாள்.
“அப்பாவுக்குப் பிடிக்காது!" என்றான்.

சுதா சிரித்தாள். "நான் சொல்றேன்... தொடர்ந்து வரை... ஒரு நாள் உலகமே உன்னை விரும்பும்.”
அந்த வார்த்தை ரவியை உசுப்பியது.
மீண்டும் வரைய ஆரம்பித்தான்.
தோல்வி, களைப்பு, எதுவும் அவனை நிறுத்தவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்து... சில ஆண்டுகளில் புகழ் பெற்ற ஓவியனானான் ரவி. அவன் ஓவியங்கள் பெரிய பெரிய கண்காட்சிகளில் இடம் பெற்றன.
அந்த ஆண்டிற்கான "லலித் கலா அகாடமி விருது"க்கு ரவி தேர்வு செய்யப்பட்டான்.

விழா நாள். பெரிய மேடை. ஒளி, கைத்தட்டல், கேமரா.

பரிசு பெற ரவி மேடைக்கு வந்தான்.

தொகுப்பாளர் இடையில் புகுந்து,
“இவரின் வெற்றிக்குப் பின்னால் இருக்கும் தூண்... இவரது தந்தை. அவரையும் மேடைக்கு அழைக்கிறோம்!”

ரவி அதிர்ச்சியடைந்தான்.

அவன் தந்தை மேடையேறினார். மைக்கைப் பிடித்து, உண்மைக்குப் புறம்பாய், "என் மகன் ரவி... சின்ன வயதிலிருந்து ஓவியம் வரைவதில் ஈடுபாட்டோடு இருந்தான்...நான் அவனை ஊக்குவித்தேன்... அவன் இந்த விருது வாங்குவது... எனக்கு பெருமை...” பேசினார்.

கைத்தட்டல் முழங்கியது.

ரவி வேகமாய் வந்து மைக்கைப் பிடுங்கி, ”என் அப்பா சொன்னது... உண்மை இல்லை.... நான் ஓவியம் வரைவதை விட்டதற்கு காரணமே... அவர்தான்... ஆனால் நான் மறுபடியும் வரைந்ததற்கு காரணம்..."
அவன் சுதாவைப் பார்த்தான்.

“இன்று நான் இங்கே நிற்பதற்குக் காரணம், என்னை நம்பிய ஒருத்தி... என்னை மறுத்த ஒருத்தர் அல்ல.”
ரவி சுதாவை மேடைக்கு அழைத்தான்.
சுதா கண்களில் நீருடன் வந்தாள்.
ரவி அவளது கையை பிடித்தான்.
அவையினரின் கைத்தட்டலில் ரவியின் தந்தை கூறிய பொய் ஒலிக்காமல் மங்கியது.



-முகில் தினகரன்,
கோயமுத்தூர்

# வேலைக்காரியா கொக்கா !



“ வணக்கம்மா!”
குரல் கேட்டு சோஃபாவில் ஏதோ யோசனையாக அமர்ந்திருந்த கமலா தலை நிமிர்ந்து பார்த்தாள்.
இருபத்தி நாலு வயதில் ஒட்டுப் போட்டு தைத்து, நைந்து போன உடையில் ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். அநி யாயத்துக்கு மெல்லிய ஈர்க்குச்சி போல ஒடிசலாக இருந்தாள்.

அவளை ஏற இறங்க பார்த்த கமலா, “ யாரும்மா நீ ?.உனக்கு என்ன வேணும் ?”

“ அம்மா, என் பேரு வடிவு. மேல் குப்பத்துல வீடு...வந்து ..உங்க வீட்டுக்கு வேலை செய்ய ஆள் வேணும்னு கேட்டுரு ந்தீங்களாம். அதான் கண்டுக்கிட்டுப் போகலாம்னு வந்தேன். “
“ சரி, என்ன வேலை செய்வே ?”
“ எந்த வேலை கொடுத்தாலும் செய்வே னுங்க!”
“ காலை, மாலை ரெண்டு வேளையும் வீடு பெருக்கணும் . காலையில மாப் போட்டு சுத்தமா துடைக்கணும்...”
“ தெனமுமா மாப் போட்டுத் துடைக்க ணும்?”
“ ஆமாம் , சுத்தமா இருந்தால்தான் என க்குப் பிடிக்கும். “
“ சரிங்க, அப்புறம் ?”
“ காலையில் வாசல்ல ஜலம் தெளிச்சு கோலம் போடணும். அப்புறம், வாஷிங் மெஷின்ல துணி போட்டுத்துவைச்சதும் கொண்டு போய் மாடியிலஉலர்த்தணும். பத்து பாத்திரங்களை நல்லா சுத்தமா கழுவி வைக்கணும் . கடை கண்ணிக் குப் போய் சாமான்கள் வாங்கிவரணும்.. இதெல்லாம் உன் ஒருத்தியால செய்ய முடியுமா?”
சோகையாகச் சிரித்த வடிவு, தலையை சொறிந்தபடி, “ முடியும்ங்க. “ என்றாள்.

“ முக்கியமா அது வாங்கணும்னு இது வாங்கணும்னு அட்வான்ஸ் பணம் கேட்டுத் தொந்தரவு செய்யக் கூடாது.”
“ அய்யய்யோ! அப்படியெல்லாம் கேட்க மாட்டனுங்க!” அவசரமாக இடைமறித் துக் கூறினாள் வடிவு.
“ குட், சம்பளம் எவ்வளவு எதிர்பார்க்கிறே ?”

சில வினாடிகள் யோசனை செய்தாள் வடிவு. பிறகு வாய் திறத்தாள்.
“ அம்மா, வாசல் ஜலம் தெளிச்சு கோலம் போட மட்டுமே ஆயிரம் ரூபா வாங்கு றாங்க. மத்த அயிட்டங்கள சேர்த்தா எப்படியும் அய்யாயிரம் ஆகும்ங்க. நீங்க ஐநூறு கொறைச்சி நாலாயிரத்து ஐநூறு கொடுத்திடுங்க!”

“ வடிவு, நீ கேட்கறது ஜாஸ்தி ! மூவாயிரம் வாங்கிக்க... இதுக்கு முன்னாடி வேலை பார்த்த புனிதா எவ்வளவு வாங்கினாங்க தெரியுமா ? ரெண்டாயிரத்து ஐநூறு ரூபா ! நீ சகட்டு மேனிக்கு கேட் குறே?”
“ அம்மா, நீங்க வார்த்தை மாறி பேசறீங்க !”
கமலா திடுக்கிட்டாள்.
“ என்ன உளர்றே?”
கோபத்துடன் கேட்டாள்

“ ஆமாம்மா, அந்தப் புனிதா ஆண்டி எனக்கு தூரத்து சொந்தம் . உங்க வீட்டுல வேலை பார்த்ததை என் கிட்டச்சொல்லியிருக்காங்க. கடைசியா அவங்க வேலையை விட்டு நிக்கறபோது மூவாயிரத்து ஐநூறு ரூபா வாங்கினதா சொன்னாங்க. நீங்க என்னடான்னா ரெண்டாயிரத்து ஐநூறு வாங்கினதாச் சொல்றீங்க ! ..”

கமலா வேர்த்துப் போனாள். தான் பொய் பேசியதை வடிவு கண்டு பிடித்தது எரிச்சலாக வந்தது !

வடிவு தொடர்ந்தாள். ” அம்மா, முதலா ளிங்க நேர்மையாகவும் நாணயமாக வும் இருந்தால்தான் கீழே வேலை செய்றவங்க ஒழுங்காய் இருக்க முடியும்.
நீங்க புனிதா ஆண்டி வாஙகின சம்ப ளத்த திருச்சிச் சொல்லியிருக்கீங்க!
எதுக்காக என்னை நம்ப வச்சு நீங்க சொல்ற சம்பளத்துக்கு ஒத்துக்கொள் வதுக்காக ! அப்படித்தானே? ஸாரிம்மா,நீங்க பத்தாயிரம் ரூபா கொடுத்தால் கூட உங்கள் கிட்ட வேலை செய்ய நான் விரும்பல்லே. வரேன்.” எனக் கூறி விட்டு நகர்ந்தாள்.

செவிட்டில் அறைந்தாற் போல் வார்த் தைகளைச் சொல்லிவிட்டு அகன்ற வடிவைப் பார்த்து திக் பிரம்மையில் உறைந்து போயிருந்தாள் கமலா.



-வி.கே.லக்ஷ்மிநாராயணன்


# ஔவையின் குறளும் ஆன்மீகப் பதிவும்

அதிகாரம் 3



■Banumathi Nachiyar





## குறள் 3

சென்று றுண்டு வந்து திரிதரு முள்ளுடம்பு
மென்றும் கெடாத திது

விளக்கம்

உள்ளுடம்பானது வெளிப்பட்டு, புசித்து, உண்டு, திரும்பி வந்து திரியும். ஆகையால் அதற்கு எப்பொழுதும் அழிவு கெடாததாகும்.
உள்ளுடம்பு ஸ்தூல உடம்பு இருக்கும் வரையில், உண்டு, வெளிப்பட்டு, அலைந்து திரியும்.
சூட்சம உடம்பு என்பது தத்துவ கூட்டமாகையால் அது ஸ்தூல உடம்பு உள்ள வரைக்கும் இருந்தே ஆக வேண்டும் என்பது கருத்து.

## குறள் 4

வருபய னுண்டு மகிழ்ந்துடனா நிற்கு
பொரு பயனைக் காட்டு முடம்பு

விளக்கம்

ஸ்தூல சரீரத்துடன் கலந்து இருக்கின்ற உள்ளுடம்பானது ஸ்தூல சரீரத்தால் உண்டாகின்ற பயன்களை அனுபவித்து, சந்தோஷத்துப் பின் ஒப்பற்ற பயனை உணர்த்துவிக்கும்.
சூட்சம சரீரமானது ஸ்தூல உடம்பினால் வருகின்ற சகல பயன்களையும் அனுபவித்து, மகிழ்ந்து, அதனால் உண்டாகும் சகல பிரயோஜனங்களையும் ஆன்மாவிற்கு உணர்த்தும்.
சூட்சம சரீரம் ஆனது ஆன்மாவிற்குச் சகல போகங்களையும் உண்டாக்கும் என்பது கருத்து.

## குறள் 5

அல்லற் பிறப்பை யகற்று விக்கு மாய்ந்தா
தொல்லை யுடம்பின் றொடர்பு

விளக்கம்

ஆராய்ந்து உண்டான பழமையாகிய உடம்பினது தொடர்ச்சியானது துன்பத்தை விளைவிக்கின்ற ஜென்மத்தை நீக்கும் என்பது கருத்து.
சூட்சம உடம்பானது பிறவியை ஒழிக்கும் என்பதும் கருத்து. சூட்சம உடம்பானது பிறவியை ஒழிக்கும் அதனை ஔவையாரும் அல்லல் பிறப்பை அகற்றும் ஆய்ந்த ஆய தொல்லை உடம்பின் தொடர்பு என்கிறார்.

(தொடரும்).

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
● சென்னை ● சனிக்கிழமை 18-04-2026

# தீர்த்தங்களை பாதுகாப்போம்!

கோவில்களில் உள்ள குளங்களை தீர்த்தம் என்று சொல்வார்கள்.

இந்த தீர்த்தங்களிலிருந்து தான் சுவாமிக்கு அபிஷேகம் செய்ய தண்ணீர் எடுக்கப்படும். சில கோவில்களில் கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுப்பார்கள்.

தீர்த்தங்களை மூன்று வகையாக பிரிப்பார்கள். அவை பிரம்ம தீர்த்தம், சூரிய தீர்த்தம், மானுட தீர்த்தம் எனப்படும்.



பிரம்ம தீர்த்தம் என்பது கடவுளாலேயே உருவாக்கப்பட்டது. உப்பு நீர் மிக்க கடற்கரை ஸ்தலமான திருச்செந்தூரில், தன் வீரர்களின் தாகம் தீர்ப்பதற்காக நல்ல தண்ணீர் கிடைக்க வேண்டி முருகப்பெருமான், தன் வேலைக் குத்தி உருவாக்கிய தீர்த்தம் நாழிக்கிணறு எனப்படுகிறது.

கும்பகோணத்தில் சிவபெருமான் உருவாக்கிய தீர்த்தம் மகாமக குளம். சூரிய பகவானுக்கு பிடித்த தீர்த்தங்கள் சூரிய தீர்த்தங்கள் எனப்படும். இவை காளஹஸ்தி, காஞ்சிபுரம், ராமேஸ்வரம், சீர்காழி, சிதம்பரம், திருவையாறு கோவில்களில் உள்ளன.

அரசர்களும், சிவ பக்தர்களும் உருவாக்கிய குளங்கள் மானுட தீர்த்தம் எனப்படும். இவைதான் அதிக கோவில்களில் உள்ளன.

திருவாரூர் தியாகராஜர் கோயில் முன்புள்ள பத்ம குளம் இதில் முக்கியமானது. மிகப்பெரிய பரப்பளவு கொண்டது. இதை கமலாலயம் என்பர்.

இன்றைக்கு பல தீர்த்தங்கள் பாழடைந்து கிடக்கின்றன. அவற்றின் அருமை அளப்பரியது. அதன் பெருமை தெரியாமல் பக்தர்களே குப்பைகளை அதனுள் போட்டு பாழ்படுத்துகிறார்கள். இந்த வகை செயல்கள் மிகுந்த மனவேதனை தரக் கூடியவை!

தீர்த்தங்கள் ஆன்மீகத்தின் உயிர்; அவற்றை பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமை.



**ப. கோபிசமுத்து,**
பாரதியார் நகர்,
புதுப்பேட்டை
கிருஷ்ணகிரி - 1

**தினம் ஒரு தலைவர்கள்**

# பி.சத்ய நாராயண் ரெட்டி வரலாறு

ஒடிசா ஆளுநர்
1 ஜூன் 1993 17 ஜூன் 1995 வரை பதவியில் இருந்தார் .
முன்னதாக சையித் நூருல் ஹசன்
வெற்றி பெற்றது கோபால ராமானுஜம்
மேற்கு வங்க ஆளுநர் (கூடுதல் பொறுப்பு)
பதவிக்காலம்
13 ஜூலை 1993 14 ஆகஸ்ட் 1993
முன்னதாக சையித் நூருல் ஹசன்
வெற்றி பெற்றது கே.வி. ரகுநாத ரெட்டி
உத்தர பிரதேச ஆளுநர்
பதவிக்காலம்:
12 பிப்ரவரி 1990 25 மே 1993
முன்னதாக முகமது உஸ்மான் ஆரிஃப்
வெற்றி பெற்றது மோதிலால் வோரா
தனிப்பட்ட விவரங்கள்
பிறந்த
21 ஆகஸ்ட் 1927
மஹ்பூப்நகர் , ஹைதராபாத் மாநிலம் , பிரிட்டிஷ் இந்தியா


இறந்தார் 6 அக்டோபர் 2012 (வயது 85)
ஹைதராபாத் , ஆந்திரப் பிரதேசம், இந்தியா

தொழில்
அரசியல்வாதி
வலைத்தளம்

பி. சத்ய நாராயண் ரெட்டி (21 ஆகஸ்ட் 1927 6 அக்டோபர் 2012) ஒரு சுதந்திரப் போராட்ட வீரர், சோசலிச அரசியல்வாதி மற்றும் உத்தரப் பிரதேசம் , ஒடிசா மற்றும் மேற்கு வங்கத்தின் முன்னாள் ஆளுநர் ஆவார் . ரெட்டி 85 வயதில் 6 அக்டோபர் 2012 அன்று ஹைதராபாத்தில் காலமானார்.

ரெட்டி தெலுங்கானாவின் மெஹ்பூப்நகர் மாவட்டத்தில் உள்ள ஷாத்நகரில் உள்ள அன்னாரம் கிராமத்தைச் சேர்ந்த ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர் . அவர் ஹைதராபாத்தில் உள்ள நிஜாம் கல்லூரியில் கல்வி பயின்றார் மற்றும் உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் சட்டத்தில் பட்டம் பெற்றார் .

அப்போது 14 வயதே ஆன ரெட்டி, 1942 இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்றார் . காந்தியின் கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர் ஊர்வலம் நடத்தியதற்காக அவர் கைது செய்யப்பட்டார். பின்னர் 1947 இல் ஹைதராபாத் மக்கள் இயக்கத்தில் பங்கேற்றார் , அங்கு அவர் நிஜாமின் ஆட்சிக்கு எதிராக சத்தியாகிரக இயக்கத்தை ஏற்பாடு செய்தார், இதற்காக அவர் கைது செய்யப்பட்டு சஞ்சல்குடா சிறையில் 6 மாதங்கள் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்த காலத்தில், அவர் தனது சிறைத் தோழர்களிடையே விநியோகித்த 'பயாம்-இ-நவ்' என்ற வார இதழைத் திருத்தி வெளியிட்டார். ஆச்சார்ய நரேந்திர தேவ் , ஜெய்பிரகாஷ் நாராயண் மற்றும் ராம் மனோகர் லோஹியா ஆகியோரால் ஈர்க்கப்பட்ட ரெட்டி, சோசலிச இயக்கத்தில் இணைந்தார் . அவர் வினோபா பாவேயின் பூதான் இயக்கத்தில் பங்கேற்றார் . காங்கிரஸ் கட்சியில் சேராமல், அவர் சோசலிஸ்ட் கட்சி , ஜனதா கட்சி மற்றும் லோக் தல் ஆகியவற்றுடன் பல்வேறு காலகட்டங்களில் தொடர்பு கொண்டிருந்தார் . ஜனதா கட்சியின் வேட்பாளராக 1978-ல் அவர் ராஜ்யசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். 1983 -ல் அவர் தெலுங்கு தேசம் கட்சியில் சேர்ந்தார் , மேலும் 1984-ல் அதன் வேட்பாளராக ராஜ்யசபைக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ரெட்டி 12 பிப்ரவரி 1990 முதல் 25 மே 1993 வரை உத்தரப் பிரதேச ஆளுநராகவும் , 1 ஜூன் 1993 முதல் 17 ஜூன் 1995 வரை ஒடிசா ஆளுநராகவும் பணியாற்றினார். அவர் 13 ஜூலை 1993 மற்றும் 14 ஆகஸ்ட் 1993 க்கு இடையில் மேற்கு வங்க ஆளுநரின் கூடுதல் பொறுப்பையும் வகித்தார். பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது அவர் உத்தரப் பிரதேச ஆளுநராக இருந்தார் .



உலக அரசியலமைப்பை உருவாக்குவதற்கான மாநாட்டைக் கூட்டுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களில் அவரும் ஒருவர் . இதன் விளைவாக, மனித வரலாற்றில் முதன்முறையாக, பூமி கூட்டமைப்பிற்கான அரசியலமைப்பை வரைந்து ஏற்றுக்கொள்வதற்காக ஒரு உலக அரசியலமைப்பு சபை கூடியது .

# Ajith Billa ரீ-ரிலீஸ் கொண்டாட்டம்



நடிகர் அஜித்குமார் நடிப்பில் வெளியான பிளாக்பஸ்டர் படமான 'பில்லா' (2007), மீண்டும் திரையரங்குகளில் ரீ-ரிலீஸ் செய்யப்பட உள்ளது.

நடிகர் அஜித்தின் பிறந்தநாளை முன்னிட்டு, நவீன 4K தொழில்நுட்பத்தில் மெருகேற்றப்பட்டு மே.1ஆம் தேதி வெளியாக உள்ளது. தமிழ்நாடு முழுவதும் சுமார் 150-க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் இப்படத்தை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

விஷ்ணுவர்தன் இயக்கத்தில் வெளியான இப்படம் பிளாக்பஸ்டர் ஹிட் ஆனது. யுவன் சங்கர் ராஜாவின் இசையில் பாடல்கள் மிகப்பெரிய வரவேற்பை பெற்றன.

இப்படத்தில் அஜித்துக்கு ஜோடியாக நயன்தாரா, நமீதா ஆகியோர் நடித்திருந்தனர். இது ரஜினி படத்தின் ரீமேக்காக இருந்தாலும், அஜித்தின் நடிப்பும், படத்தை ஸ்டைலிஷாக எடுத்திருந்த விதமும் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது.

இப்படம் கடந்த 2021ஆம் ஆண்டும் ரீ-ரலீஸ் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.



தென்னிந்திய அளவில் பிரபலமான இளம் சென்சேஷனல் நடிகைகளில் ஒருவர் அனஸ்வரா ராஜன். இவர் சமீபத்தில் வெளிவந்து மாபெரும் வெற்றியடைந்த வித் லவ் திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்திருந்தார்.

அடுத்ததாக இவர் நடிப்பில் 7ஜி ரெயின்போ காலனி 2 திரைப்படம் உருவாகி வருகிறது. இந்த நிலையில், இளைஞர்களின் மனம் கவர்ந்த நாயகியாக வலம் வரும் நடிகை அனஸ்வரா ராஜனின் லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

# கொரியன் ஃபேமிலி பாடல் டிரெண்டிங்

அறிமுக இயக்குநர் ஹரிஷ் துரைராஜ் இயக்கத்தில் அர்ஜுன் தாஸ் மற்றும் அன்னா பென் ஆகியோர் முதன்மை வேடங்களில் நடித்துள்ளப் படம் கான் சிட்டி. இவர்களுடன் யோகி பாபு, வடிவுக்கரசி மற்றும் குழந்தை நட்சத்திரம் அகிலன் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இப்படத்திற்கு சீன் ரோல்டன் இசையமைத்துள்ளார். பவர் ஹவுஸ் பிக்சர்ஸ் நிறுவனம் இந்தப் படத்தைத் தயாரித்துள்ளது. கடந்த மாதம் இப்படத்தின் டீசர் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இந்நிலையில் இப்படத்தின் முதல் பாடலான கொரியன் ஃபேமிலி வெளியாகி உள்ளது.

வெளியான ஒருமணிநேரத்திலேயே ரசிகர்களிடையே இப்பாடல் நல்ல வரவேற்பை பெற்றுவரும் நிலையில், அடுத்த ஒருவாரத்திற்கு இப்பாடல்தான் இன்ஸ்டா டிரெண்ட் எனவும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.




# தமன்னா இழப்பீடு வழக்கு தள்ளுபடி



புதுச்சேரியைச் சேர்ந்த பவர் சோப்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் விளம்பரத் தூதராக இருந்த ஒப்பந்தம் காலாவதியான பின்னரும், சோப்பு உறைகள் மற்றும் விளம்பரப் பொருட்களில் தனது புகைப்படங்களைத் தொடர்ந்து பயன்படுத்தி வந்ததாகக் கூறி,

அந்நிறுவனத்திடம் இருந்து ரூ.1 கோடி இழப்பீடு கோரி திரைப்பட நடிகை தமன்னா சந்தோஷ் பாட்டியா தாக்கல் செய்திருந்த வழக்கை, சென்னை உயர் நீதிமன்றம் வியாழக்கிழமை (ஏப்ரல் 16) தள்ளுபடி செய்தது.

கடந்த 2008-ஆம் ஆண்டு பவர் சோப் நிறுவனத்துடன் விளம்பர ஒப்பந்தம் செய்திருந்த தமன்னா, ஒப்பந்த காலம் (2009 அக்டோபர்) முடிந்த பின்னரும் தனது புகைப்படங்களை அந்த நிறுவனம் விளம்பரங்களுக்குப் பயன்படுத்துவதாகக் கூறி, ரூ.1 கோடி நஷ்டஈடு கோரி 2011-ல் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற தனிநீதிபதி, தமன்னா தாக்கல் செய்த ஆதாரங்கள் நம்பகத்தன்மையற்றவை எனக் கூறி 2017-ல் வழக்கை தள்ளுபடி செய்தார்.

தனிநீதிபதி உத்தரவை எதிர்த்து தமன்னா தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனு, நீதிபதிகள் பி. வேல்முருகன் மற்றும் கே. கோவிந்தராஜன் திலகவதி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு இன்று விசாரணைக்கு வந்தது.

இந்நிலையில் தனி நீதிபதி உத்தரவில் தலையிட விரும்பவில்லை எனக்கூறி மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# யூத் உலகளவில் ரூ.82 கோடி வசூல்





'அசுரன்', 'விடுதலை 2' திரைப்படங்களின் மூலம் தமிழ் சினிமாவில் நடிகராக அறிமுகமானவர் கென் கருணாஸ். நடிப்பை கடந்து கென் கருணாஸ் "யூத்" திரைப்படம் மூலம் இயக்குநராக அறிமுகமானார். இந்தப் படம் கடந்த மார்ச் 19-ஆம் தேதி வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

யூத் திரைப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைத்த நிலையில், பார்வதா என்டர்மெய்ன்மெண்ட் நிறுவனம் சார்பில் கருப்பையா சி. ராம் தயாரித்தனர். இந்தப் படத்தில் தேவதர்ஷினி மற்றும் சுராஜ் வெஞ்சாரமூடு ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தனர்.

பள்ளிக்கூட பின்னணியில் உருவான இந்தப் படம் உலகளவில் ரூ.82 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. சிறிய பட்ஜெட்டில் உருவான நிலையில், இந்தப் படம் வர்த்தக ரீதியிலும் பெரும் வெற்றி பெற்றுள்ளது.

# ரூ.200 கோடி மோசடி வழக்கில் அப்ரூவராக மாற விருப்பம்



தொழிலதிபர் சுகேஷ் சந்திரசேகர் சம்பந்தப்பட்ட ரூ.200 கோடி பணமோசடி வழக்கில், நடிகை ஜாக்குலின் ஃபெர்னாண்டஸ் அப்ரூவராக (சாட்சியாக) மாற விருப்பம் தெரிவித்துள்ளார்.இதுதொடர்பாக அவர் டெல்லி நீதிமன்றத்தில் தனது விருப்பத்தை தெரிவிக்க, நீதிமன்றம், அமலாக்கத்துறைக்கு முறைப்படி கோரிக்கை விடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளது.

பின்னர் அமலாக்கத்துறை அவரது வாக்குமூலத்தைப் பதிவுசெய்து, அவரை அரசுத் தரப்பு சாட்சியாளராக ஆக்குவதற்காக நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வதா, வேண்டாமா என முடிவு செய்யும். இந்த வழக்கில் ஜாக்குலினுக்கு எதிரான குற்றவியல் நடவடிக்கைகளை ரத்து செய்ய உச்ச நீதிமன்றம் மறுத்த நிலையில், ஜாக்குலினின் இந்த மனமாற்றம் நிகழ்ந்துள்ளது.

நடிகை ஜாக்குலினின் காதலர் எனக்கூறப்படும் தொழிலதிபர் சுகேஷ் சந்திரசேகர், டெல்லி தொழிலதிபர் ஷிவிந்தர் மோகன் சிங்கின் மனைவி அதிதி சிங்கிடம் இருந்து, அரசு உயர் அதிகாரிகளைப் போல ஆள்மாறாட்டம் செய்து சுமார் ரூ.200 கோடிக்கும் அதிகமான பணத்தை மிரட்டிப் பறித்ததாக அவர் மீது அமலாக்கத்துறை மற்றும் டெல்லி போலீஸாரால் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் தற்போது அவர் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளார். இதனிடையே இந்த பணமோசடி வழக்கில் ஜாக்குலின் ஃபெர்ணான்டஸ் கூட்டாளியாகச் சேர்க்கப்பட்டிருந்தார். சுகேஷ் தனக்கு பல கோடி ரூபாய் மதிப்பிலான விலையுயர்ந்த பரிசுகளை வழங்கியதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில், தற்போது அவர் அரசு தரப்பு சாட்சியாக மாற முன்வந்துள்ளார். இந்த வழக்கில் ஜாக்குலின் அப்ரூவராக மாறுவது, சிறையில் இருக்கும் சுகேஷ் சந்திரசேகருக்கு பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது.



நடிகை ஜான்வி கபூர் வளர்ந்து வரும் முக்கிய கதாநாயகிகளில் ஒருவர். இவர் நடிப்பில் அடுத்ததாக பெத்தி எனும் திரைப்படம் வெளிவரவுள்ளது. இப்படத்தில் ராம் சரணுடன் இணைந்து முதல் முறையாக நடித்துள்ளார். பாலிவுட்டில் என்ட்ரி கொடுத்து இன்று தெலுங்கு சினிமாவில் கவனம் செலுத்தி வரும் ஜான்வி, விரைவில் தமிழில் என்ட்ரி கொடுப்பார் என ரசிகர்களால் எதிர்பார்க்கப்படுகிறது.

இன்ஸ்டாகிராமில் தனது போட்டோஷூட் புகைப்படங்களை பதிவிடுவதை நடிகை ஜான்வி கபூர் வழக்கமாக வைத்துள்ளார். இதன்மூலம் ரசிகர்களின் கவனத்தையும் அவர் ஈர்த்து வருகிறார். இந்த நிலையில், தற்போது அசத்தலான மாடர்ன் லுக்கில் எடுத்துக்கொண்ட போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டாவில் பதிவிட்டுள்ளார்.

# Mr X Movie விமர்சனம்

மிஸ்டர் எக்ஸ் விமர்சனம்(3 / 5)

இந்தியாவின் ரா உளவு அமைப்பில் பணியாற்றும் சரத்குமார், அணு ஆயுதத்திற்கு தேவையான முக்கிய மூலப்பொருளை பல ஆண்டுகளாக பாதுகாத்து வருகிறார். ரஷிய ராணுவத்தால் கைது செய்யப்படும் அவர், அந்த மூலப்பொருளும் அவர்களிடம் சென்று, அதை பாகிஸ்தானுக்கு அனுப்பும் திட்டம் உருவாகிறது.

இந்த திட்டத்தை முறியடிக்க, ரா அதிகாரியான மஞ்சு வாரியர் தலைமையில் ஒரு குழு செயல்படுகிறது. அந்த முயற்சி தோல்வியடைந்த நிலையில், மஞ்சு வாரியர் மீண்டும் மற்றொரு உளவாளியான ஆர்யாவுடன் சேர்ந்து சரத்குமாரை மீட்டு, அந்த ஆபத்தான மூலப்பொருளை இந்தியாவுக்கு கொண்டு வர முயற்சி செய்கிறார்.

இறுதியில் இந்த முயற்சியில் வெற்றி பெற்றார்களா? அந்த சதித் திட்டம் தடுக்கப்பட்டதா? என்பதே படத்தின் மீதிக்கதை.

நடிகர்கள்ப டத்தில் நாயகனாக நடித்து இருக்கும் ஆர்யா, கம்பீரமான தோற்றத்தால் ரசிகர்களை கவர்ந்து இருக்கிறார். ஆக்ஷன் காட்சிகளில் தனது உடல் மொழியால் ரசிக்க வைத்து இருக்கிறார். சரத்குமார் நடித்த மிஸ்டர் எக்ஸ் கதாபாத்திரம் வித்தியாசமாக அமைக்கப்பட்டிருந்தாலும், எதிர்பார்த்த அளவுக்கு பலம் இல்லை.




கௌதம் கார்த்திக் தனது கதாபாத்திரத்திற்கு நியாயம் செய்ய முயற்சி செய்துள்ளார். ஸ்டைலிஷ் வில்லனாக நடிக்க முயற்சி செய்து இருக்கிறார். மஞ்சு வாரியர் ஆக்ஷன் காட்சிகளில் மிரட்டி இருக்கிறார். அதுல்யா ரவி, அனகா, ரைசா ஆகியோரின் நடிப்பு படத்திற்கு பலம் சேர்த்து இருக்கிறது.

**GREEN HOUSING & PROPERTIES**

மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI

OFFER PRICE
ரூபாய் ₹ 1.80 லட்சம்

800 SQFT

1. முன்பணம் ₹ 1,00,000/-
2. 50% பணம் செலுத்தினால் பத்திரப்பதிவு செய்யப்படும்.
3. மாதம் குறைந்தபட்சம் ₹ 2500/- முதல் செலுத்தலாம்
4. முழு தொகையும் செலுத்திய பின்பு உரியநபரிடம் பத்திரம் ஒப்படைக்கப்படும்.
5. பத்திரப்பதிவு
6. பட்டா COPY

FREE FREE!!!
10 கிராம் GOLD COIN சேமியுங்கள்

அரக்கோணம் பாராஞ்சி
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118

---

# WANTED

**Work From Home Opportunity**

Telecallers Required | Also Hiring for IT Jobs

- ✔ Salary: ₹10,000 – ₹15,000
- ✔ Attractive Incentives
- ✔ Flexible Work From Home Option

Freshers & Experienced Both Can Apply

Contact Now:
**9566072935**

---

# ATTENTION

## ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு

10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.

---

# WANTED

IMMEDIATE OPENINGS AVAILABLE!

- HOUSEKEEPING STAFF (Male & Female)
- MARKETING EXECUTIVE – ELECTRICAL FIELD (Male & Female)
- ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
- ELECTRICAL SUB-CONTRACTOR
- DRIVER

GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING

CONTACT NOW: **9363133253**

HURRY! LIMITED VACANCIES AVAILABLE!

---

# WANTED

## ஆட்கள் தேவை

சமையல் | வீட்டுவேலை
குழந்தை | நோயாளி
தங்கி | தங்காமல்

சென்னையில் தங்கி / தங்காமல் வேலை செய்யலாம்

தொடர்புக்கு 8148215778 / 8248610592

A trustworthy help service for Chennai families

---

**SHRI RAGHAVENDRA SCAN CENTRE**

We Are **HIRING**

**PRO**
PUBLIC RELATION OFFICER
DIAGNOSTIC ULTRASOUND & COLOUR DOPPLER STUDIES
TIMING : 9AM-8PM
Attractive salary package

@TONDIARPET

+91 8189997221
+91 9094337745

ADDRESS:THAI APARTMENTS 618 T.H.ROAD (NEAR) TONDIARPET METRO STATION CHENNAI-81

---

குன்னத்தோழும்

## உடனடி வேலைவாய்ப்பு

# WANTED

**டெல்டா டைமண்ட் டூல்ஸ்**
சென்னை - குன்றத்தூர்

| உதவியாளர் (HELPER) | டர்னர் (TURNER) |
|---|---|
| அடிப்படை அறிவு, உடல் தகுதி, அனுபவம் தேவையில்லை | டர்னர் தொழில்முறை அனுபவம் தேவை, வரைபடங்கள் படித்தல் |

தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்

தெனிமுக்கு வுரன்

தொடர்புக்கு / For Details:
**pH: 9841738379**

---

**Manjal Mart**
YOUR DESIRE WE DELIVER

SOMETHING FOR EVERY FAMILY

எந்தவித கலப்படமும் இல்லாத தரமான மஞ்சள், குங்குமம், விபூதி, சந்தனம், ஜவ்வாது, விற்பனைக்கு உள்ளது

www.manjalmart.com

---

Sanjay
Cell: 90032 64920

**Real Choice**

Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection

#361, Mint Street, (Opp. New Jain Temple) Sowcarpet, Chennai-600 079.

YouTube Real Choice Chennal | Facebook Real Choice Chennal | Instagram Real Choice Chennal

---

# ADVERTISE WITH US

7789941009

---

THANIGAI

# WANTED

ISO

## REAL ESTATE MARKETING

### PART TIME & FULL TIME

- ☑ Flexible work
- ☑ No Age Limit / No Investment
- ☑ No Experience/No Qualification
- ☑ No Risk / No Target

Simple work – just refer customers only

Office Location : Near Perambur Railway Station

K. Ramakrishnareddy / **90879 55111**

---

## திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை

சிறந்த முதலீட்டு வாய்ப்பு

### PREMIUM PLOT SALE

Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site

**VGP THIRU NAGAR, PHASE-1**

- Location: (Nr Mylapore Jn)
- Direction: N/ Face
- Total Area: 2400 sft
- Price: RS.650/sft

LIMITED PLOTS AVAILABLE!

Contact Us: 9445315510 / 9283257193

VGP Developers - Your Trusted Partner
www.vgpdevelopers.com

---

**Special Invitation**

To Retired Senior Housewives Businessmen Bankers CAs NRIs Age.30 to 70.Qualification. SSLC/Graduate

★ To Restart Your Second Innings With A Career Business Opportunity

- Flexible Timing Unlimited Incentive.
- No Target Work From Home Training Provided
- For Successful Business.

Contact Mr.Irudaya Raj
**Ph.9486634780**






## திருச்சி மலைக்கோட்டை!

கோட்டையம்மா கோட்டை.. திருச்சி மலைக்கோட்டை.!
உச்சியிலே பிள்ளையாரு அமர்ந்திருக்கும் கோட்டை.!
உலகம் புகழும் கோட்டை.!

கொள்ளிடமும் காவிரியும் சூழ்ந்து நிற்கும் கோட்டை.!
தாயுமான ஆண்டவராம் சிவனின் அழகு கோட்டை.!
ஸ்ரீரங்கநாதர் காணும் திருச்சிமலைக் கோட்டை!

தெப்பக்குளம் சுற்றி வந்தா சாரதாஸு கோட்டை.!
அப்துல் கலாம் தங்கிப்படித்த சென்ஜோசப் கோட்டை.!
தூய லூர்து அன்னையவள் அருள் பொழியும் கோட்டை.!

சின்க்கடை வீதியுண்டு வியாப்ரக் கோட்டை..
பக்கத்திலே பாலக்கரை காந்தி மார்கெட் கோட்டை!
ஆண்டாலு வீதியிலோ காய்கறிகள் கோட்டை..
மெயின்கார்டு கேட்டுக்குள்ளே.. சிந்தாமணிக் கோட்டை!

பழனியப்பா அகஸ்த்தியரு பதிப்பகத்துக் கோட்டை!
பக்கமெல்லாம் பழையப் புத்தகக் குவியலான கோட்டை!
திப்புச்சுல்த்தான் தொழுதுநின்ற தர்க்கா இருக்கும் கோட்டை!
எப்போதுமே திருச்சி ஜன்சன் மக்கள் கூடும் கோட்டை!

தமிழகத்தின் மய்யமான திருச்சிநகர் கோட்டை!

தேன்தமிழின் எழுத்தாளர் வாழ்ந்திருக்கும் கோட்டை!
பல்வேறு பண்பாடு ஒன்று சேர்ந்த கோட்டை.!
பழமையிலும் பழமையான திருச்சி மலைக்கோட்டை!

**வே.கல்யாண்குமார்**

---

நான் எப்போதும்
கேட்பதுப்போலத்தான்
அன்றும் என்
உரிமைக் கனிகளைக்
கொய்துக்கொண்டு துள்ளி
விளையாடி ஓடோடி
வந்தேன்.

உன் பதில்
நம் கனிகளைக்
கனியவிடாமல்
கருக்கிச் சாம்பலாக்கி
விட்டதையும் நம்
மணல் வீட்டை தகர்த்து
தரைமட்டமாக்கி
விட்டதையும் உணராத
அடுத்த நொடியே
"யேன் இப்படி மொகத்த
உர்ண்ணு வச்சிருக்க"
என்கிறாய்.

எப்போதும் கேட்பதுதானே
என்று சாதரணமாக
இருந்துவிட்டேன். எல்லாரும்
எப்போதும் ஒரே மாதிரி
இருப்பது இல்லை தானே.
ஆனால், அது எல்லாரும்
தானே? நீயும் எல்லாரும்
ஒன்றில்லையே?
புரியவில்லை கண்மணி
எனக்கு உன் பதில்
அதிசுத்தமாகப் புரியவில்லை.

"இப்ப உங்களுக்கு என்ன
வேணும்?" நீ கேட்கும்
கேள்வியின் பதிலாக
நீ இருந்தாய். நீயே
இருந்தாய். உன் பதில்
பலகேள்வியின் சேகரமாக
என்னை அச்சுறுத்தி
நான் யாராக எந்த உறவாக
இருக்கிறேனென்று

என்னையே
கேட்க
வைக்கிறது.

**துங்கன்.**
கோயம்புத்தூர்

---

## ஆதங்கம்

உன் மனம் புரிந்து இனியும்
கவனமாக இருக்க
வேண்டுமே என

எதிர்பார்பு என்பது எல்லா
உயிர்களுக்கும் உண்டு
எனக்கும் உண்டு ண்டு
வேதனைகள் எனக்கும்
உண்டு பிரச்சனைகள்
எனக்கும் உண்டு

என்னை புரிந்து கொண்டு நீ
ஒருமுறையாவது இருந்தாயா
–இல்லை உனக்கு
உன்னை பற்றிய சித்தனை
மட்டுமே– உனக்கென்ன
கவலை உன்னை புரிந்து
கொண்ட நண்பன் தான்
நான் இருக்கிறேனே!
ஒருமுறையாவது என்னை
போல் எனக்கு நண்பனாய் நீ

இருப்பாயா?
இது
குற்றச்சாட்டு
இல்லை என்
இதயத்தின்
ஆதங்கம்!

**மோகன்**
சென்னை

---



எங்கோ ஓரிடத்தில் எதிர்
பாராது எதிர் படும்
உன்னை...

நீயென்று அறிவதற்குள்
மறைந்து போகிறாய்...

பெரிய இடைவெளிகள்..
சிறிதேனும் தாக்கத்தை
ஏற்படுத்தவே செய்து
விடுகின்றன...

எத்தனை
பேரன்பிற்குள்ளும்....

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

---



## ஏழ்மையின் எதிர்பார்ப்பு:

வாழ்க்கையிலே
அமர்தற்குச் சிறிய வீடு
வயிறெரிக்கும் பசிதணிக்கக்
கொஞ்சம் சோறு
தாழ்ந்திடாமல் மானத்தைக் காப்ப தற்குத்
தகுவுடலை மறைப்பதற்குக் கீழ்மேல் ஆடை
வீழ்ந்திடாமல் தலைநிமிர்ந்து நிற்ப தற்கு
விளங்குகின்ற அடிப்படையாம் இந்த மூன்றே
ஏழ்மையிலே தவிக்கின்ற மக்கள் எங்கள்
எதிர்பார்ப்பாம் இவைகிடைத்தால் வாழ்வோம் நாங்கள் !

பிச்சையாக இலவசங்கள் தேவை யில்லை
பிறக்கின்ற கருணையதும் தேவை யில்லை
முச்சந்தி தனில்நின்று கையை ஏந்தி
மூச்சுவிடும் வாழ்க்கையினை விரும்ப வில்லை
கச்சிதமாய் மதிப்பளித்துப் பணிகொ டுத்துக்
கரங்களிலே உழைப்பதற்கு வழியை செய்தால்
நிச்சயமாய் ஏழ்மையினை ஓட வைத்து
நிறைவாழ்வு வாழ்ந்திடுவோம் வாய்ப்ப ளிப்பீர் !



மாளிகையின் வசதிகளைக் கேட்க வில்லை
மகிழுந்து சொகுசுதனைக் கேட்க வில்லை
கேளிக்கைப் பொழுதுபோக்கைக் கேட்க வில்லை
கேள்விக்கு விடைதேடும் எங்க ளுக்கு
வாலியினை மறைந்திருந்து கொன்ற போல
வளங்களினை சுருட்டுகின்ற கரமி ருந்து
கூலிக்காய் உழைக்குமெங்கள் உழைப்பிற் கேற்ற
கூலிதந்தால் போதுமெங்கள் ஏக்கம் தீரும் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

---

## "ஆசைக்கதவு."

திறக்க முயன்றான் அவனுக்கான ஆசைக் கதவினை.
நியாயமான ஆசைகளுக்கு மட்டும் திறக்கும் அதிசயக் கதவு அது.

ஒன்று கிடைத்ததும் ஒன்பதுக்காக ஏங்கும் அற்ப ஆசைக்காரனை அது அவ்வப்பொழுது விரட்டி அடிக்கும்.

"அலிபாபாவும் நாற்பது திருடர்கள்" திரைப்படத்தில் வரும் பேராசைக்காரனைப் போல "ஒருமுறை எனக்காகத் திறந்திடு; எனது ஆசைக்கதவே" என்றான் அவன்.



அப்பொழுது அது சொன்னது இப்படி..!
உனக்கான அதிர்ஷ்ட வாய்ப்பு நேரம்
நிறைவடைந்து விட்டது என்று..!

நிறைவேறாத அரை மனத்துடன் அவ்விடத்தை
விட்டு அகன்றான். அப்பேராசைக்காரன்..!

**கவிச்சாரல் கொள்ளிடம் காமராஜ்,**
திருச்சிராப்பள்ளி

---



## உடற்பயிற்சி !

இன்று பெரும்பாலும்
இளம்பெண்கள் வெகு
ஸ்லிம்மாய் இருப்பதன் முதன்
முழு காரணமும்
கைப்பேசியையே சாரும்....

"போன்ல பேசுறாங்களோ
இல்லையோ...அத காதுல
அழுத்தி வச்சுக்கிட்டு
எவ்வளவு நேரம் அங்கிட்டும்
இங்கிட்டுமா நடக்குறாங்க !

இதுல
இடையில
சிரிப்பு பயிற்சி
வேற !

**எம்.பி. தினேஷ்.**
கோவை

---

## திகைப்பு

பாத்தி கட்டிய பயிர்கள்
காத்திருந்த மழை
வாராததால் வாட,
பார்த்திருக்கும்
உடைமரங்கள்
பரிகாசமாய் சிரித்தன
பார், எப்படி வேனிலிலும்
வேரூன்றி நிற்கிறேன் என்று!

சூழ்ந்திருந்த நெகிழிக்
குப்பைகளோ பார், எப்படி
வேரூன்றாமலேயே
வியாபித்து நிற்கிறேன்

என்று!

திகைத்து
நின்றது
இயற்கை.

**கே. பி. ஜனார்த்தனன்**

---

# நூல் விமர்சனம்

"திருக்குறள் காட்டும் இனிய இல்லறம்"
நூல் விபரம் பின்வரும்
அட்டவணை நூலின் முக்கிய
வெளியீட்டு விவரங்களை
வழங்குகிறது:

| விபரம் | தகவல் |
|---|---|
| நூலின் பெயர் | "திருக்குறள் காட்டும் இனிய இல்லறம்" |
| ஆசிரியர் | வே. தபசுக்குமார் |
| மொழி | தமிழ் |
| நூல்வகை | |
| ISBN எண் | 978–93–47930–18–8 |
| பக்கங்கள் | 128 |
| விலை | ரூ. 200 |
| பதிப்பகம் | PANDIAN PUBLICATION, CHENNAI 600 037 |


நூலை பற்றி...


"திருவள்ளுவர் காட்டும் இனிய இல்லறம்" என்ற இந்த நூல், காமத்துப்பாலையும் இல்லறவியலையும் இணைத்து கதை வடிவில் சொல்கிறது. காதல் கொண்ட தலைவன், தலைவியின் உரையாடலை, உணர்ச்சிப்பூர்வமாக வெளிப்படுத்துகின்றது.

இது இல்லற வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கும் இனிய புதுமணத் தம்பதியருக்கு பரிசாக வழங்குவதற்கு ஏற்ற நூல். மணமுறிவுகள் சாதாரணமாக நடைபெறும் இந்தக் காலக்கட்டத்தில், இருமனங்களையும் இணைத்து இல்லறவாழ்வை இனிதாக நடத்த, அவர்களுக்கு ஆலோசனை வழங்கும் நூல்.

திருவள்ளுவர் காமத்துப்பாலில், நெருஞ்சிப் பழத்தையும், காழில்கனி என்று விதையில்லாப் பழத்தையும் கூறியது ஏன் என்பதற்கு தகுந்த மருத்துவக் குணங்களை விவரிக்கும் நூல். பாலொடு தேன் கலந்தற்றே, என்று திருவள்ளுவர் கூறியது, பாலின் சுவையைக் குறிப்பிடுகிறதா?அல்லது பாலின் நிறத்தைச் சொல்கின்றதா? என்பதை ஆய்வுக் கண்ணோட்டத்தோடு தெரியப்படுத்தும் நூல்.

இந்நூல், பெண்களின் ஊடலுக்குள் மறைந்திருக்கும் உண்மைக் காரணங்களை அழகுபடச் சொல்கிறது. மொத்தத்தில் இனிமையாக இல்லறத்தை நடத்த இளம் தம்பதியருக்கு வழிகாட்டும் அருமையான நூல்.

பாண்டியன் பப்ளிகேஷன் ₹ 200
pandianpublication@gmail.com
89397 10500




வே. தபசுக்குமார் எழுதிய "திருக்குறள் காட்டும் இனிய இல்லறம்" என்ற நூல், வள்ளுவர் படைத்த காமத்துப்பாலின் மேன்மையை விளக்குகிறது. இன்பத்துப்பாலில் உள்ள பாடல்கள் வெறும் சிற்றின்பத்தை மட்டும் குறிக்காமல், தூய்மையான காதல் உணர்வுகளையும் வாழ்வியல் நெறிகளையும் கொண்டிருப்பதை ஆசிரியர் இதில் தெளிவுபடுத்துகிறார். தலைவன் மற்றும் தலைவியின் உரையாடல்கள் வழியாக, அவர்களின் உளவியல் மாற்றங்கள், காதல் பிணக்குகள் மற்றும் கூடல் ஆகியவற்றை எளிய கதை வடிவில் இப்புத்தகம் விவரிக்கிறது. குறிப்பாக, காமத்துப்பாலில் வரும் உவமைகளைச் சங்க இலக்கியத் தரவுகளுடன் ஒப்பிட்டு, பெண்களின் இயற்கை மணம் மற்றும் அழகு குறித்த ஆழமான ஆய்வுகளை ஆசிரியர் முன்வைக்கிறார். இக்கால மக்கள் காமத்துப்பாலையும் வாழ்வின் அங்கமாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே இந்நூலின் முக்கிய நோக்கமாகும்.

*1. காமத்துப்பாலின் முக்கியத்துவம் மற்றும் சமூகப் பார்வை*

திருக்குறளின் அறத்துப்பால் மற்றும் பொருட்பாலைப் போற்றும் மக்கள், காமத்துப்பாலை வாழ்வின் ஒரு அங்கமாக உணரத் தவறி விடுகின்றனர்.

தவறான புரிதல்: காமத்துப்பால் என்பது ஆபாசமானது அல்லது தவிர்க்கப்பட வேண்டியது என்ற எண்ணம் பரவலாக உள்ளது.

ஆசிரியரின் வாதம்: காமத்துப்பாலில் ஆபாசம் இல்லை; மாறாக, காதல் உணர்வே மேலோங்கி நிற்கிறது. இது வாழ்விற்கு வழிகாட்டும் புனிதமான வழிகாட்டியாகும்.

ஆய்வு அணுகுமுறை: வெறும் இலக்கியப் பாடல்களாகப் பார்க்காமல், இல்லறவியலோடு இணைத்து ஒரு கதை வடிவில் காதலை ஆசிரியர் விளக்குகிறார்.

பெண்ணின் ஏழு பருவங்கள்: இலக்கியங்கள் பெண்ணின் வயதிற்கேற்ப ஏழு பருவங்களாகப் பிரிக்கின்றன. 'மாதர்' என்ற சொல் இப்பருவங்களில் எதைக் குறிக்கிறது என்பதை நூல் பின்வருமாறு விளக்குகிறது:

காமத்துப்பால் காட்டும் காதல் காட்சிகள்: காமத்துப்பாலில் வள்ளுவர் காமத்தை ஆபாசமாகச் சித்தரிக்காமல், மென்மையான காதல் உணர்வுகளாகவும் கவித்துவமாகவும் வர்ணிக்கிறார்.

முதற்பார்வை (இயற்கைப் புணர்ச்சி): ஒரு போர் வீரன் சோலையில் ஒரு நங்கையைச் சந்திக்கிறான். அவளது அழகைக் கண்டு அவள் தேவதையோ அல்லது மயிலோ என ஐயுறுகிறான். ஆனால், அவளது இமைக்கும் கண்கள், வாடிய மாலை மற்றும் நிலத்தில் தோயும் பாதங்களைக் கண்டு அவள் ஒரு மானிடப் பெண் என்பதை உறுதி செய்கிறான்.

கண்களின் மொழி: காதலர்கள் சந்தித்துக் கொள்ளும் போது சொற்களுக்கு வேலையில்லை; கண்களே பேசிக் கொள்கின்றன. அவளது ஒரு பார்வை நோயைத் தருகிறது, மற்றொரு பார்வை அந்த நோய்க்கு மருந்தாகிறது. அவள் சிரிக்கும் போது அவளது பற்களின் வரிசை, பாலில் தேன் கலந்தது போன்ற இனிமையை அவனுக்குத் தருகிறது.

பிரிவுத் துயரம்: தலைவன் போர் நிமித்தமாகப் பிரியும் போது, தலைவி பெரும் துயரம் அடைகிறாள். இரவு நேரமும், நிலவும் அவளுக்கு நெருப்பாய் சுடுகின்றன. காதலனைப் பிரிந்த ஏக்கத்தில் அவளது மேனி பசலை நிறம் (பச்சை கலந்த மஞ்சள் நிறம்) கொள்கிறது; மெலிந்த அவளது தோள்களில் இருந்து வளையல்கள் கழன்று விழுகின்றன.

கனவும் நினைவும்: தலைவி தன் காதலனை நனவில் காண முடியாவிட்டாலும், கனவில் கண்டு மகிழ்கிறாள். "நனவு என்று ஒன்று இல்லையென்றால், கனவில் என் காதலன் என்னை விட்டுப் பிரியாமல் எப்போதும் என்னுடனேயே இருப்பான்" என்று அவள் ஏங்குகிறாள்.

ஊடல் (பிணக்கு): காதலில் ஏற்படும் ஊடல் என்பது உணவில் சேர்க்கும் உப்பு போன்றது. அது அளவாக இருந்தால் காதலுக்குச் சுவை கூட்டும்; அளவு கடந்தால் சுவையைக் கெடுத்துவிடும். இறுதியில் இந்த ஊடல் நீங்கி இருவரும் கூடி மகிழ்வதே காமத்தின் உச்சகட்ட இன்பமாகும்.

இவ்வாறு திருவள்ளுவர் இல்லற வாழ்க்கையை அறநெறியோடும், காதல் வாழ்க்கையைத் தூய்மையான உணர்வுகளோடும் இணைத்துத் தனது குறள் வழி விளக்குகிறார்.

உருவகங்களும் நுட்பமான விளக்கங்களும்

வள்ளுவர் பயன்படுத்திய சொற்கள் மற்றும் உவமைகள் பின்வரும் ஆழமான அர்த்தங்களைக் கொண்டுள்ளது:

அ. கடாஅக் களிற்றின் மேற் கண்படாம் (யானை உவமை)

காதலியின் மேலாடையை (துகில்), மதம்பிடித்த ஆண் யானையின் முகத்தை மறைக்கும் 'கண்படாம்' அல்லது 'கட்டுப்படாம்' உடன் வள்ளுவர் ஒப்பிடுகிறார்.

காரணம்: ஆண் யானைக்கு மதம் பிடிக்கும் காலத்தில், அதன் கண்களுக்கும் காதுகளுக்கும் இடையில் இருக்கும் சுரப்பியில் இருந்து மதநீர் சுரக்கும். இது தேனீக்களைக் கவரும். தேனீக்களின் தொந்தரவால் யானை மேலும் சினமடையாமல் இருக்க, அந்தச் சுரப்பியை (மதநீர் கண்ணை) மறைக்கக் கட்டுப்படலாம்.

ஆ. பெண்ணின் மேனிக்கு இயற்கை மணம் உண்டா?

பெண்களின் கூந்தலுக்கு இயற்கை மணம் இல்லை என்று நக்கீரர் வாதிட்டாலும், வள்ளுவர் "வெறிநாற்றம்" (இயற்கை மணம்) இருப்பதாகக் குறிப்பிடுகிறார். குறிப்பாக, பருவமடைந்த பெண்களின் மேனியில் 'மாம்பூ' போன்ற வாசம் வீசும் என்பதைச் சங்க இலக்கியங்கள் (ஐங்குறுநூறு) உறுதிப்படுத்துகின்றன.

இ. நெருஞ்சிப் பழம் – ஒரு மருத்துவ அதிசயம்

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம்" என்ற குறளில் வள்ளுவர் நெருஞ்சி முல்லைக் குறிப்பிடாமல் 'பழத்தை'க் குறிப்பிட்டுள்ளார்.

ஆய்வு: நெருஞ்சிப் பழம் காய்ந்துதான் முள்ளாகிறது. நெருஞ்சிப் பழம் உண்மையில் மென்மையானது மற்றும் முள் குறைவாகத் தெரிவது. காதலியின் பாதம் அனிச்ச மலரை விட மென்மையானது என்பதால், அதற்கு நெருஞ்சிப் பழமே முள்ளாகத் தோன்றும் என்கிறார் வள்ளுவர்.

மருத்துவப் பயன்: நெருஞ்சிப் பழம் ஆண்மை பெருக்கியாகவும்,



பெண்களுக்குக் மகப்பேறு அளிக்கும் மருந்தாகவும் சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது.

பிரிவும் காம நோயின் தாக்கமும்: தலைவன் போருக்குச் சென்றபோது, தலைவி அனுபவிக்கும் துன்பங்கள் மற்றும் அவள் அடையும் மாற்றங்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

பசலை நோய்: தலைவன் பிரிந்தவுடன் தலைவியின் மேனியில் 'பசலை' எனும் நிற மாற்றம் (பசுமை நிறம்) படர்கிறது. இது அவள் கொண்ட காதலின் ஆழத்தைக் காட்டுகிறது.

கண்களின் துயரம்: தலைவனை முதலில் காட்டியது இக்கண்களே, எனவே இப்போது அவனைக் காணாது அழுவதிலும் நியாயம் உண்டு எனத் தலைவி தன் கண்களை நொந்து கொள்கிறாள்.

மாலையின் கொடுமை: கூடி இருந்தபோது இன்பம் தந்த மாலைப் பொழுது, பிரிவின் போது உயிரை வாங்கும் கொலையாளியைப் போல் இருப்பதாகத் தலைவி வருந்துகிறாள்.

கனவும் நினைவும்

தலைவன் நேரில் வராதபோது, தலைவி கனவில் அவனைக் கண்டு ஆறுதல் அடைகிறாள்.

கனவின் சிறப்பு: "நனவினால் நல்காரை நினவினால் காண்பேன்" என்று தலைவி கூறுகிறாள். கனவில் தலைவன் அவளைத் தழுவி இன்பம் தருகிறான். ஆனால் விழித்தவுடன் அவன் மறைந்து விடுவதை எண்ணி ஏங்குகிறாள்.

காதலின் உன்னதம்:

'காயில் கனி' (விதை இல்லா பழம்) கூடல் இன்பத்தைத் திருவள்ளுவர் 'காயில் கனி' (விதை இல்லாத பழம்) என்று குறிப்பிடுகிறார் (குறள் 1101).

விளக்கம்: விதையுள்ள பழத்தைச் சாப்பிடும்போது விதைகள் இடையூறாக இருக்கும். ஆனால், விதை இல்லாத பழத்தை (உதாரணமாக வாழைப்பழம்) எந்தத் தடையுமின்றிச் சுவைக்கலாம்.

வாழைப்பழ வரலாறு: அலெக்சாண்டர் இந்தியா வந்தபோது வாழைப்பழத்தின் சுவையில் மயங்கி அதன் கன்றுகளைத் தன் நாட்டுக்குக் கொண்டு சென்றார்.

உவமை: தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் விரும்பி இணையும்போது காம இன்பம், எந்தத் தடையுமற்ற விதை இல்லா பழத்தின் சுவையைப் போன்றது.

வே. தபசுக்குமார் ன் இந்த ஆய்வு : திருக்குறளின் காமத்துப்பாலை ஒரு அழகான காதல் காவியமாகச் சித்தரிக்கிறது. சங்க காலத் தமிழர்களின் கலாச்சாரம், ஆடை முறைகள் மற்றும் பெண்களின் உணர்வுகளை வள்ளுவர் எவ்வாறு நுட்பமாகப் பதிவு செய்துள்ளார் என்பதை விளக்குகிறது. காதலில் ஏற்படும் ஊடல், கூடல், பிரிவு என அனைத்தும் ஒரு இல்லற வாழ்வின் இனிய அங்கங்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது.

**என்றும்நல்வாழ்த்துகளுடன்**
**கோ. சுரேஷ்குமார்,**
**கோவில்பட்டி.**
**அலைபேசி 9443620932**

---

## பாடம்பல கிடைக்கும்...

எல்லாம் முடியும்
என்பவனே...
என்னினிய இளைஞனே!
பாதி கனிந்த பக்குவத்தில்
பரவசம் அள்ளும்
பாண்டித்தியமே
பரிபூரணம் என்று
பகுத்தறிவு சொல்லும்
புரியாதவை யெல்லாம்
பிழையானவை என்று
வெல்லும் மோகத்தில்
வெறியாய் கொள்ளும்
அகிலத்தின் விரிவில்
அனைத்தும் ஒன்றென்று
அற்புதமாய் போதித்த
அத்வைதத்தையும்
அந்நியமாய் தள்ளும்
அடங்கா வீரியத்தில்
ஆட்டிப் படைக்கும்
அலைபாயும் உள்ளம்
ஆனந்தத்தை மெலிதாய்க்
கொல்லும்... என்னினிய
இளைஞனே...எதார்த்த
வாழ்வில் நீகடந்து போகும்
ஏற்றம் இறக்கம்
இரண்டினையும்
பேதம் பிரித்துப் பார்த்து
பிழையாகி விடாதே....
இறக்கம் தோல்வி
ஏற்றம் வெற்றி யெல்லாம்
இதயத்தில் கல் வெட்டாய்ப்
பதிந்துகாலம் முழுவதும்
கற்றுத் தந்து கொண்டே
இருக்கும்... ஆற்றல்
திறத்தில்அருங்கனியாகி
அகிலத்தில் ஜொலிக்க
ஆண்டுகள்கணக்கில்லை...
அதுவே காரணியும்
இல்லை...அயராத தேடலும்
அலுக்காத மனமும்
உன்னை நாலெட்டு
வயதிலும் நாலும் தெளிந்த
நல்லவராக்கும்...
நானிலமே திரண்டு
வந்து நாளும் தொழுது
கைகூப்பும்.முதுமை
தொட்டும் முதுர்ச்சி
துளிர்க்காதவிளைச்சல்
இல்லா வெற்று மனிதரையும்
வெறுப்பாய் பார்க்காதே...

விருப்பாய்
எதிர்கொள்...
எதிர்மறையே
ஆனாலும்
பற்றிக்
கொண்டு
படர
பாடம்பல கிடைக்கும்.

**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்




## ரௌத்திரம் பழகு

ரௌத்திரம் பழகு பெண்ணே.. ரௌத்திரம் பழகு!

அடங்கி கிடந்தால் ஆமை யென்பார்!
அயர்ந்து கிடந்தால் ஊமை என்பார்!
குனிந்து நடந்தால் கோழை யென்பார்.! கொஞ்சம் நிமிரடி..
ரௌத்திரம் பழகடி.. அதுதான் உனக்கு நல்லது!

வாசலைத் தாண்டினால் ஒடுகாளி யென்பார்.. வாய்கொஞ்சம்
திறந்தால்.. மூடுயென்பார்! கைவீசி நடந்தால்.. அகங்காரி
யென்பார்..! கண்கொண்டு பாரடியோ செல்லப் பெண்ணே!
கண்களை துடைத்தெறி ரௌத்திரம் பழகடி..
ஞானப்பெண்ணே.!

ஆசையுடன் படித்தாலோ அடங்கடி யென்பார்! அறிவொளி
ஏற்றிடாமல் அடுப்படி போ என்பார்! வேலைக்கு போனாலோ
வீம்புக்காரி யென்பார்! வேறென்ன சொல்லுவேன்
ஞானப் பெண்ணே! வீரநடை போடடியோ..
ரௌத்திரம் பழகடியோ ஞானப் பெண்ணே!

## ஆண்டிப் பண்டாரம் பாட்டு.!

திருவோடு ஏந்துகின்ற ஆண்டி.. அவன் தெருவோரம்
இருக்கிறவன் தாண்டி.! ஒரு ஜானு வயிற்றுக்கே வேண்டி..
பாடுறானே பட்டிணத்து ஆண்டி.!

கந்தனுக்கு முன்நின்று வேண்டி.. அவன் கண்டதையே
பாடுகின்ற ஆண்டி.. சொந்தமில்லை பந்தமில்லை ஏன்டி? அவன்
சொல்லுறதை கேட்டுத்தான் பாரேன்டி!

ஊர்குடியை ஏய்க்கவில்லை சுரண்டி! அவன் ஊர்ஊராய்
அலைகின்ற ஆண்டி.! பேருபுகழ் கிடைப்பதற்க்கு வேண்டி..
அவன் பித்தலாட்டம் செய்யாத ஆண்டி!

சிந்தனை வனத்திலோர் ஆண்டி.. அவன் சிந்தையெல்லாம்
சமத்துவமே தாண்டி.. பொருளாசை பொன்னாசை
ஏதுமில்லா ஆண்டி.. அவன் போறவழி
தெருவெங்கும் தேவன் வருவான்டி.!

**வே.கல்யாண்குமார்.**

ஏனிந்த இழி நிலை மொழிமறந்தான் இனம்மறந்தான்
தன்னை ஏத்தி மொழிவோரின் சொல்லுக்கே செவிகொடுத்தான்
வழிவழியாய் வந்திட்டப் பண்பை ஞாலம்
வணங்குகின்ற இலக்கியத்தின் மதிப்ப ழித்தான்
குழிவெட்டித் தன்னினத்தைத் தானே மாய்த்தான்
குமுறுகின்ற உடன்பிறந்தார் குரலைக்கேளான்
வழிமறந்தே பிறருக்கே அடிமையானான்
வளமான வாழ்விழந்தே இழிவு கொண்டான் !

பிறநாட்டில் மாய்கின்றான் தமிழன் என்றால்
பிறந்திட்ட நாட்டிலேயே அகதி யானான்
முறத்தாலே புலிதன்னை அடித்த பெண்ணை
முச்சந்தி வீதியிலே அடிக்கின்றார்கள்
புறமுதுகு காட்டாத தமிழர் தம்மைப்
புறமெல்லாம் குருதியிலே குளிக்க வைத்து
விறகாக்கி எரிக்கின்ற இழிவு எல்லாம்
விளங்கிருந்த மொழியுணர்வை விட்ட தாலே !

ஏனிந்த அவலங்கள் எண்ணிப் பார்ப்பீர்
எவ்வினமும் பட்டிடாத துயர்கள் பெற்று
கூனிப்போய் வாழ்கின்ற நிலைதான் ஏனோ
கூலிக்காய் சென்றதாலோ அன்றி தானே
ஏணியாகிப் பிறரேறக் குனிந்ததாலோ
ஏளனத்தின் காரணந்தான் என்னே நாளும்
பேணிவரும் தன்னலந்தான் ! மான வாழ்வைப்
பெறுதற்தே ஒற்றுமையின் உணர்வு கொள்வோம்!

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



'என்ன வேண்டிப்பே'

பதில் சொல்லாமல் கண்சிமிட்டி
சிரிக்கும் ஜ்வல்யாவின்
பிரார்த்தனைகளில்
கடவுள் மிரள்கிறார்..



அவளுடன் வந்து
அவரும் அமர்ந்து
விடுகிறார்
கூடவே.. !

**ரிஷபன்**



## தட்சணை

தட்சணை வாங்கிய பின்
தலையணை தேடி வரும் தரம்
கெட்ட மனிதனே, நீ

தாரம் கேட்க வரும்போதே
கையில் தாளம் போட்டபடி
தட்சனை கேட்டாயே

நாளை உனக்கும்
பிள்ளை வரும்;
அதில் பல தொல்லை
வரும் என்பதை
மறந்தாயே மனிதா

சூடுகண்ட பூனை
போல உன் சுயரூபம்
கண்டு வேதனை கொண்டு
வேண்டிக்கொண்டேன்
கடவுளிடம்

ஆயிரம் பிள்ளை வேண்டும்
அத்தனையும் பெண்ணாய்
வேண்டும் என் அன்புக்
கணவன் அலற வேண்டும்



ஆனைமுகக் கடவுளிடம்
ஆசையுடன் ஒப்பந்தம்
போட்டுக் கொண்டேன் நூறு
தேங்காய் தட்சனை என!

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சி கோட்டை

## ஹைக்கூகள்

நின்று விடுகின்றன/
பிள்ளைகளுக்கு வயதாக..
ஆக../ ரெயிலுடன் ஓடிவந்த
மரங்கள்./

விரக்தியுடன் திரும்புகிறது/
பலரை நனைக்க இயலாத/
பருவ மழை./

நேற்றும் பெய்த மழைக்கு/
இன்று புதுப்–பெயர்
சூட்டப்படும் / 'முதல் மழை'
என்று /

"முதல் சூரியோதயம்
எப்போது?"/ பன்னிரண்டு
பௌர்ணமிகளை உதிர்த்த
காத்திருக்கும் நடப்பு ஆண்டு./

மீண்டும் ஓய்வெடுக்கலாம்/
இளைப்பாறியவன் சென்றதும்/
அம்மர நிழல்./

முகிலுக்குள் மறைகிறது/
சில்வண்டுகளின்
தொந்தரவைப்/
பொருட்படுத்தாத பிறை நிலா/

திருப்பாவைப் பாராயணம் /
தலையசைத்து ரசிக்கின்றன/
ஜனவரியில் பூத்த டிசம்பர்–
பூக்கள்/

போர்வை நீக்கிய வாகனம்
நகர/ உடனே விடைக்
கொடுக்கிறது/ மழை
நனைக்காத கட்டாந்தரை./

"வெகுதூரம் வந்து விட்டோம்/



கால் வலிக்கிறதா....
தாத்தா?"/ இதயம் பூவானது./

நீ பூக்கும் வரையிலா?/
குறிஞ்சி மலரும் வரையிலா?/
எதுவரை என்னாயுள்,
பேத்தியே?/

திறந்துப் பார்க்காதீர்/
இருட்டாகி விடப் போகிறது/
மூடி வைத்தப் பகல்./

வெளிச்சத்தை இருட்டடிப்புச்
செய்து/ கதைகளை கசிய
விடுகின்றன )
திரையரங்குகள்./

வேகமாய் விழித்தெழுங்கள் /
இன்றைய வைகறைக்குள் /
ஒரு பூகம்பம் நிகழலாம்./

இரு கைகளால்
துதிக்கிறான்/
இறைவனுக்கு எத்தனைக்
கரங்கள்/ என்பதை
நிர்ணயித்த சிற்பி./
தொடர் வண்டியிலேயே/
விட்டு வந்து விட்டேன்/பிறந்த
புத்தாண்டை./

ஆன்மாவை
அனுப்பி விட்டு/
தேகத்தை சுடுவதை
பொறுக்காமல் /பொழியும்
மழை./

நிழல்களை சுமந்தவாறே /
எதிரும் புதிருமாய்ஓடுகின்றன/
மரக்கிளை அணில்கள்./

பாதுகாப்பாக அனுப்புகிறான்
கதிரவன்/ தெருநாய்களால்
சீர்குலைக்கப்பட்ட/
நேற்றிரவை./

ஒவ்வொரு இலையின்
நுனியும்/ வெவ்வேறு விதமாய்
பறைசாற்றுகிறது /
பெய்த மழையை./

பிறந்தநாளைக்
கொண்டாடுகிறான்/
சென்ற ஆண்டு
பிறந்த வயதின்/
இறந்த நாளில்./



**முனைவர்**
**வே. புகழேந்தி,**
பெங்களூரு



கண்ணெதிரே
கடவுள் தோன்றி
என்ன வேண்டுமென்றான்?
ஏழு ஜென்மத்துக்கும்
நீ மட்டுமே போதுமென்றேன்!

உன் குழந்தை முகம்
காணும் போதெல்லாம்
காணாமல் போய்கிறது
கவலைகள்!

உன்னோடு ஓர் இரவு
நிலவோடு ஒரு உறவு
சூடான தேநீர்
சில்லென்ற காற்று
ஓயாத அலைகள் சத்தம்
நம்மிடைய நெருக்கத்தின்
நிசப்தம் இப்படி அமைகின்ற
பொன்னிரவு பொழுதுகளை

இறைவன் அமைப்பானா என
ஏங்கித் தவித்தே
கனவுகள் விடிந்து
தொலைகிறது!

என்னை பிடிக்குமா என
கேள்வி கேட்கிறாய்?
உன்னைத் தவிர
வேறென்ன பிடித்து விட
போகிறது!

அருகே வராதே
அந்த ஆபத்தான
காதல்
நமக்குள்ளும்
வந்து விட போகிறது!

சிந்தி விடும் சின்ன
பார்வையில் கூட

சிதைந்து தான் போகிறேன்!

உன் சிரிப்பினை
என்னிடம் கொடு
சிம்பொனியாக்குகிறேன்!

எது வந்தாலும் ஏற்றுக்கொள்
உன் இன்பத்துக்கு
எல்லையில்லாமல் போகும்!

அதிகம் சிந்திக்காதே
அடி முட்டாளாய் இருப்பது
கூட நாம் வாழும்
வாழ்க்கையை
ஆனந்தமாக்கலாம்!

தனிமை மட்டுமே
கடைசி வரை
இனிமை தரும்!

ஏமாற்றங்கள் இல்லாத வாழ்வு
கொடுமையான
நரக தனிமை மட்டுமே!

சிறைகளை எந்த
பறவைகளுமே
விரும்புவதில்லை
சுதந்திரம் நீ தருவது அல்ல
இயற்கையாய் பிறப்பது!
அமைதியாய் இரு
அடுத்த நிமிடம்
நிச்சயமில்லாத வாழ்க்கை
அதிகம் ஆடாதே–எப்படியும்
அடங்கி விடுவாய்
ஆறடிக்குள்!



கருநாக பாம்பு விஷத்தின்
ஒருதுளி மாதிரியோ –உன்
ஓரக்கடைப் பார்வை ?!!

**நௌஷாத் கான் .லி**

## வாழ்ந்தவனே.. அழித்தான்

வான் மேகம் கருவுற்றதால்
மழை பிறந்தது..
மலைமேல் மரம்
வளர்ந்தததால் அதை
அறுவடை செய்தது...

பாறை கொஞ்சம் விலகி
இருந்ததால் அருவி
பிறந்தது...
அருவி நீர் புரண்டு ஓடியதால்
நதியும், ஆறும் வழி விட்டது...

நதி நீர் தேங்கி நிற்க
குளமும், ஏரியும் பிறந்தது..
சேமித்த நீரால் விவசாயம்
செழித்து வளர்ந்தது...

விவசாயத்தால் மனித உயிர்
வாழ்ந்தது...
இந்த மனித இனத்தால்
மேலே சொன்ன
அனைத்தும்
அழிக்கப்
பட்டது.....!!



**பொன். கருணா**
நவி மும்பை



## தீரன் சின்னமலை!

விடுதலைப் போராட்ட வீரர்
வீறுடன் சீரான தீரர்
கெடுதலை ஒட்டிய வீரர்
கேண்மையை விரும்பிய.
தீரன்!

ஓடாநிலைக் கோட்டை
ஆண்டு
ஒண்மையாய் வீரம் ஈண்டு
பாடாகப் படுத்தும்
வெள்ளையைப்
பறந்திடச் செல்ல வைத்தார்!

வில்பயிற்சி வாளில் பயிற்சி
வீரமாய்க் காட்டும் தீரன்
சொல்லிடும் வண்ணம் தீரம்
சோம்பலே இல்லா சூரம்!

சூழ்ச்சியால்
வெள்ளைய ராலே
தூக்கிலே இடப்பட் டாரே
ஆட்சியை விடாப்பிடி யாக
ஆங்கவர் கண்டார்
சின்னமலை!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**



## துளிப்பா படைப்போம்!

தமிழின் புதுவடிவம்
தக்க அதிரசமே
கமழும் குறுவடிவம்
காட்டும் நலக்கருத்தே!
முதலில் இருசீரே
மேன்மை முச்சீரே



நடுவில் தானஃதே
நயன்மை இறுதியே"
(எ.டு)
மழைப் பெண்ணாள்
உடுத்திய வண்ண
ஆடை
வானவில்!
( இராம.வேதா)



## சக்தியொடு வாழ்வமே சார்ந்து!

நேரிசை வெண்பா!


சிவத்துடன் சக்தியும்
செம்மாந்து நின்றே

உவகையே காண்பர்
உலகில்.
எவருமே பக்தியொடு
வாழ்ந்து பணிந்திட

பண்புடன் சக்தியோடு
வாழ்வமே சார்ந்து!

சக்தியே மூலமன்றோ
சக்தியே கோலமன்றோ
சக்தியே.. முக்தியளி
பக்கபலம் காட்டிப்
பளிங்காய்த் துணைபுரியும்
சக்தியோடு வாழ்வமே
சார்ந்து!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**



## எழுத்து விதைகள்!

பேனா முனையில்
புது சரித்திரம்
படைத்தோர்
ஏராளமேராளம்!
எத்தனையெத்தனையோ
எழுத்து விதைகளை
விருட்சமாக்கும்!
இந்தப் பேனா முனையும்
ஏர்முனையேயாகும்!!!!

**கோவைக்கவி புவனா**
கோயமுத்தூர்



## மாயை, மாயை எல்லாம் மாயை

உலகம் ஒரு கானல்
நீர்; காண்பது யாவும்
நிலையில்லாதது!

உள்ளிருக்கும் உண்மையை
உணர்வதே தெளிவு!

கண்ணால் காண்பது யாவும்
ஒரு கணம் தோன்றி மறையும்
நிழலாட்டம்! எனது என்று
நாம் பிடித்து வைத்திருக்கும்
உறவுகளும் உடமைகளும்
மணல்வீடுகள் போன்றது!

வெளியே தேடுவதை
நிறுத்திவிட்டு
உற்றுநோக்கினால்
தெரிவது ஒன்றுதான்!

மாறாதது ஒன்றே ஒன்று, அது
உனக்குள் இருக்கும் ஆன்மா!

மற்றவை யாவும் வெறும்
வேடம்! விழி திறந்தால்
ஆட்டம் –கணம்; விழி
மூடினால் ஓட்டம்!

நிழலை நிஜம் என்று நம்பி–
மனம் நித்தம் ஆடும் வேடம் !

கயிற்றை பாம்பாய் காணும்
மயக்கம்; தெளிவு பிறந்து
அங்கே அமைதி பிறக்கும்!

அலைகடல் நுரையில்
மாளிகை கட்டி
ஆயுள் முழுதும் வாழ
நினைக்கிறோம்!

காணல் நீரின் தாகம்
தீர்க்க
கவலை கொண்டு
ஓடுகிறோம்!
பேரும் புகழும் பெரும் மாயை
இங்கே பிடிக்கும் பிடிக்குள்
எதுவும் இல்லை;

அறிவைக் கடந்து அமைதி
கொண்டால் அறுந்து போகும்
மாயைச்சுழல்!

ஆயிரம் ஜன்னல் வைத்த
மாளிகை இந்த உலகம்!

ஒவ்வொரு ஜன்னலிலும் ஒரு
விதமான மயக்கம்!

பந்தம் என்று நீ
சூடிக்கொண்ட மாலைகள்
வாடும் போது பெரும்
சுமையாய் மாறுகின்றது!

உன் நிழலே வெளிச்சம்
உள்ளவரை தான்
துணையாகும்!

இருள் சூழ்ந்தால்
உன்னிடமிருந்து அதுவும்
பிரியும் !

மண்ணால் செய்த
மண்பாண்டம் இந்த மேனி !

உடைந்து போனால்
ஒட்டுவதற்கு ஏது ஏணி?



ஓடு நதி ஒரே இடத்தில்
இருப்பதில்லை
ஆனால் அது எங்கே
இருப்பதாகவே
எண்ணுகிறோம் !

**பெ.திருமுகம்**
மணமேல்குடி

## WANTED
**MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED**

**Managers:** Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000

**Telecaller** -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer Knoweldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000

Call/wapp: 9438610756

---

## ADVERTISE WITH US
CONTACT US
9438610756

---

## WANTED: FEMALE ANCHORS
- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000

Call / Whatsapp:
7789941009
9337501889

---

## ! WANTED !
**Muslim Lady Accounts Assistant**

**Qualification:** B.Com / Tally Knowledge Required
**Company:** Perfume Manufacturing Company
**Location:** Chrompet



Contact: 99401 46318

---

உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு

உங்கள் ஜோதிடர் 9940374962
## D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்

கைரேகை ஜோதிடம் (ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு (ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)

வீடு மனை வாங்க விற்க அணுகவும்

நல்ல நேரங்கள் கணிப்பு
ராகு காலங்கள் பற்றிய தெளிவு

இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962

**கவனத்தில் கொள்க:**
- குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
- இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
- எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.

---

## Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

---

## keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre

**INTERNSHIP & JOB OPPORTUNITIES**
MSW & M.Sc Psychology - Freshers

Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

---

## WANTED
## JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599

Head office
NO :1, அம்பாள் அவின்யூ, வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97

---

## ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி சென்னை
Contact
9790979539

---

## WANTED
FEMALE TELECALLER

EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI

FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp 94386 10756

---

## WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
- வானகரம் பைபாஸ் ரோடு
- முகப்பேர்
- அம்பத்தூர்
- பட்ரவாக்கம்
- பெரம்பூர்
- மாதவரம்
- திருமுல்லைவாயல்

Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.
APPLY NOW

---

## SEVEN STARS LOGISTICS PVT.LTD.
We Build Perfection
we simplify shipping for your business

Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.

# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

---

## just499®
## MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

---

## Manjal Mart
YOUR DESIRE WE DELIVER
20% OFF
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

---

THE BEST CENTRE OF CAR WASH
SADHANA DEVI.K
## SUPREME
Car Wash & Detailing
- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

---


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
## ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com

---

அருள்தரும்
## தெய்வம்
தமிழ் மாதமிருமுறை இதழ்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

---

## WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872


SMART PROMOTERS
BUSINESS VIDEOS
IN ALL INDIAN LANGUAGES
SUCCESS
GROWTH
MULTIPLE LANGUAGES
PROMOTE WITH US
PROMOTE YOUR BUSINESS THROUGH OUR CHANNEL
1. Promote your Business
2. In Multiple Languages
3. We Promote in Social Media
4. Find Innovation & New Techniques
5. With Less Budget
HIGHLY PROFESSIONAL & ATTRACTIVE CONTENT
ENGLISH TAMIL TELUGU HINDI ODIA BENGALI KANNADA
CALL NOW: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Low Cost Matrimony Website
MATRIMONY
WEBSITE
RS.15000
Call/Whatsapp - +91 97155 39521


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


தெய்வம்
விளம்பர முகவர்கள் &
விற்பனை பிரதிநிதிகள் தேவை
• அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
• பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
• கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
• மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு
CALL / WHATSAPP: 7789941009
இன்றே இணையுங்கள்!


WANTED
— MARKETING EXECUTIVES —
We are hiring Marketing Executives (Male/Female) for immediate openings.
Full-Time / Part-Time
Salary: ₹30,000 - ₹50,000
Open to all, including Retired / VRS candidates and Job Seekers.
Location: All Over Tamil Nadu
Contact: 7789941009


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
TV NEWS
பேப்பர்பாய்
8122664699


TAMIL
TELECALLER
JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009


உ
ஸ்ரீ வாசவி சகாயம்
கரூர் ஸ்ரீ வாசவி
கன்னிகாபரமேஸ்வரி அம்மன்
ஜெயந்தி தின விழா
அழைப்பிதழ்
26.04.2026 ஞாயிற்றுக்கிழமை
(15.04.2026 முதல் 27.04.2026 முடிய)


முனீஸ்வர் துணை
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI
ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அனுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


DIGITAL MARKETING SOLUTIONS
smartpromoters.com


THE BEST CENTRE OF
CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


ஸர்வேஜநா சுகிநோபவந்து
அஜந்தா
பாக்கு
சம்பிரதாய தாம்பூல பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
అజంతా
వక్క పలుకులు
సంప్రదాయ తాంబూళ వక్కపలుకులు
RAVIKUMAR AND COMPANY
சம்பிரதாய
தாம்பூல பாக்கு!
பூஜைக்கு
உகந்த பாக்கு
21, North Mada Street, Viilivakkam, Chennai - 600 049 PH: 044 26171341 | emalir ajanthasupari@hotmail.com


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


PR
TRANSPORT
9677174691
9176232026
NO.1-B, parivallai street, Murugappa nagar,
Manali high road, Ernavoor,Chennai-57


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com


உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த
பாஸ்கர்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com


வாரம் தோறும்
பல்சுவை செய்திகளை
தரும் தரமான
வார இதழ்
வைகறையில்
பேப்பர்பாய்
www.Paperboy.com



# பல்சுவை களஞ்சியம்



# இதை சாப்பிட்ட ஒரே வாரத்தில் கொழுப்பு குறையும்.!

தாமரை விதை (makhana) மூலம் எப்படி உடல் எடையை குறைப்பது என்பதை கொடுத்துள்ளோம். தாமரை விதை என்று அழைக்கப்படும் மக்கானாவில் குறைந்த அளவே கலோரி உள்ளது. மக்கானா கொழுப்பின் அளவை உறுதிப்படுத்தவும் இரத்த குளுக்கோஸ் அளவைக் குறைக்கவும் உதவுகிறது. எனவே, நீங்கள் உங்கள் எடையை குறைக்க விரும்பினால் மக்கானவை உங்கள் உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

ஆனால், எப்படி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை தெரிந்துகொண்டு அதன் பிறகு உட்கொள்வது நல்லது. உடல் எடையை குறைபவர்கள் மக்கானாவில் சாட், கறி, மசாலா, கீர் போன்றவை செய்து சாப்பிடலாம்.

**ரெசிபி 1**

நான்-ஸ்டிக் பாத்திரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அதில், 1 கப் மக்கானாவை சேர்த்து அதனுடன் 1 ஸ்பூன் எண்ணெய் சேர்த்து வறுத்து கொள்ளுங்கள்.

வறுத்த மக்கானாவை ஒரு கிண்ணத்தில் சேர்த்து, அதனுடன் வேகவைத்த சர்க்கரைவள்ளிக் கிழங்கு 1, நறுக்கிய வெங்காயம் சிறியளவு, நறுக்கிய தக்காளி சிறிதளவு, 2 டேபிள் ஸ்பூன் வறுத்த வேர்க்கடலை, உப்பு, மிளகு, மிளகாய் தூள் 1/2 ஸ்பூன், 2 டேபிள் ஸ்பூன் தயிர், 1 டேபிள் ஸ்பூன் எலுமிச்சை சாறு, 2 டேபிள் ஸ்பூன் கொத்தமல்லி இலைகள் சேர்த்து கலந்து சாப்பிட்டு வந்தால் உடல் எடை எளிதில் குறையும். இதனை மக்கானா சாட் என்று கூறுவார்கள்.

**ரெசிபி 2**

ஒரு பாத்திரத்தில் 1 ஸ்பூன் நெய் சேர்த்து, 1 கப் அளவிற்கு மக்கானாவை சேர்த்து வைத்து எடுத்துக்கொள்ளுங்கள். அடுத்து, 2 கப் அளவிற்கு பால் எடுத்து, பாலினை கொதிக்கவைத்து 2 டீஸ்பூன் வெல்லம் சேர்த்து நன்றாக கலந்து விடுங்கள்.



அதன் பிறகு, வறுத்து வைத்துள்ள மக்கானவை சேர்த்து 10 முதல் 15 நிமிடம் வரை கொதிக்க விடவும். இந்நிலையில் அடுப்பை மிதமான தீயில் வைக்க வேண்டும். பால் கெட்டியான தன்மைக்கு வந்ததும், அதில் பொடியாக நறுக்கிய உலர் பழங்கள் மற்றும் உலர் பருப்புகளை சேர்த்து இறக்கினால் சுவையான மகானா கீர் தயார். இதனை உடல் எடையை குறைக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் அடிக்கடி எடுத்து வரலாம். இதனை குடித்த ஒரே வாரத்தில் உங்களுக்கு நல்ல ரிசல்ட் கிடைக்கும்.

**ரெசிபி 3**

ஒரு பாத்திரத்தில் 1 ஸ்பூன் நெய் சேர்த்து, 1 கப் அளவிற்கு மக்கானாவை சேர்த்து வைத்து எடுத்துக்கொள்ளுங்கள்.

அதன் பிறகு, தேவையான அளவு தயிர் எடுத்து, அதில் சுவைக்கேற்ப வெல்லம் சேர்த்து வறுத்து மக்கானவை சேர்த்து நன்றாக கலந்து குடிக்கலாம்.

நீங்கள் இனிப்பிற்கு பதிலாக காரமாக சாப்பிட விரும்பினால், வெல்லத்திற்கு பதிலாக மிளகு தூள் மற்றும் சிறிதளவு உப்பு சேர்த்து, கலந்து குடித்து வரலாம்.

உடல் எடையை குறைக்க நினைப்பவர்கள், இந்த ரெசிபியை செய்து மதிய உணவாக உட்கொண்டு வரலாம்.

# மீம்ஸ்













## விடுகதை

| | |
|---|---|
| ஓடெடுப்பான் பிச்சை ஒரு நாளும் கண்டறியான் காடுறைவான் தீர்த்தக் கரைசேர்வான்- தேட நடக்குங்கால் நாலுண்டு நல்தலை ஒன்றுண்டு! படுக்கும்போது அவையில்லை பார்! அது என்ன? | ஆமை |
| எங்க அக்கா சிவப்பு, குளித்தால் கருப்பு அது என்ன ? | அடுப்புக்கரி |
| உங்களுக்கு சொந்தமானத ஒன்று ஆனால் உங்களை விட மற்றவர்களே அதிகம் உபயோகிப்பார்கள்? | பெயர் |
| யாரும் செய்யாத கதவு தானே திறக்கும் தானே மூடும். அது என்ன? | இமை |
| வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ. அது என்ன? | சிரிப்பு |
| வீட்டில் வளரும் என்னை திருடனுக்கு பிடிக்காது அது என்ன? | நாய் |

# கோடையில் சருமத்தை எப்படி பாதுகாக்கலாம்?

கோடைகாலம் வந்தாச்சு இனி இந்த வெயில் காலத்தில் வெளியில் சென்றால் முகம் கருப்பாக மாறும் அதிகம் சோர்வு வரும் என்பதால் மட்டும் சிலர் வெளியில் செல்லாமல் இருப்பார்கள். இன்னும் சிலருக்கு அலைச்சலால் சோர்ந்து போகுவார்கள். இனி அதனை பற்றி கவலை வேண்டாம். உங்களுக்காக பொதுநலம்.காம் பதிவில் அக்கறை கொண்டு பின் வரும் பதிவை வெளியிட்டு உள்ளது. அதனை வரும் நாட்களில் செய்து வந்தால் நீங்கள் எப்போதும் போல் சாதாரணமாக வெளியில் செல்லாம்.

கருப்பு என்றால் அழகுதான். ஆனால் முகம் கருப்பாக இருந்தாலும் அதனுடன் சோர்ந்து காணப்படுவதால் முகம் பளிச்சுனு இருப்பதில்லை. அதனால் இந்த மாதிரியான இயற்கை டிப்ஸை செய்து பாருங்கள். ஒரு எலுமிச்சை பழத்தில் முகம் அழகாக தெரியும் அதனை எப்படி செய்ய வேண்டும் என்பதை பின் வரும் டிப்ஸை பார்த்து செய்து பாருங்கள்.



வெயிலில் வெளியில் சென்று வீட்டுக்கு வந்த பிறகு ஒரு ஐந்து நிமிடம் எலுமிச்சை சாறை எடுத்து சிறிது தண்ணீர் சேர்த்து முகத்தில் தடவி ஐந்து அல்லது பத்து நிமிடம் தடவி வந்தால் முகம் பொலிவாக இருக்கும்.

ஒரு எலுமிச்சை பழத்தில் பாதியாக வெட்டி அதில் சீனி சேர்த்து மெருதுவாக முகத்தில் தடவி வந்தால் முகம் கருமை நீங்கி வெண்மையான முகமாக இருக்கும்.

எலுமிச்சை சாறு அதனுடன் பாதாம் எண்ணெய் சேர்த்து முகத்தில் தடவி வந்தால் முகம் சுருங்காமல் இளமை தோற்றத்தில் காட்டும். இதனை வாரத்தில் மூன்று நாட்கள் செய்து வந்தால் கோடைகாலத்தில் சரியான தீர்வு கிடைக்கும்.



# ஜோக்ஸ்

**கணவன் :** வொய்ஃபுக்கு(wife) அர்த்தம் தெரியுமா? வித்அவுட் இன்பர்மேஷன் ஃபைட்டிங் எவ்ரிதிங் ( without information fighting everthing)


**மனைவி :** அதுக்கு அர்த்தம் அப்படி இல்லைங்க ! வித் இடியட் ஃபார் எவர் ( with idiot for ever)

**கணவன் :** தேவைதான்டி எனக்கு !

==============================

**கணவர்:** இது மாதிரி என்கிட்டே தொடர்ந்து சண்டை போட்டுக்கிட்டே இருந்தா ஒரு நாள் மிருகமா மாறிடுவேன் ஜாக்கிரதை !

**மனைவி:** அட நீங்க வேற எலியைப் பார்த்தெல்லாம் நான் பயப்பட மாட்டேன்!



==============================

**மனைவி :** என்னை, பெண் பார்க்க வந்தன்னிக்கு, நீங்க டிபனை தொடவே இல்லையே ஏன்?”

**கணவன் :** ரெண்டாவது ‘ஷாக்’ எதுக்குன்னு, தான்..!

==============================

“தரகரே... நீங்க ஒரு பெரிய விஷயத்தை மறைச்சிட்டீங்க.”

“என்ன சொல்றீங்க?”

“பெண் அஞ்சடி உயரம்னு சொன்ன நீங்க, மூணு அடி அகலம் இருப்பாள்னு சொல்லவே இல்லையே...”

==============================

“டாக்டர் பத்து நாளா ஒரே கனவா வருது!”

“கனவு தானே வருது... அதனாலென்ன?”

“இல்ல டாக்டர். இடை இடையே இந்தக் கனவை உங்களுக்காக வழங்குபவர்கள்னு விளம்பரம் வேற வருதே!”

==============================

“பாடம் எல்லாம் முடிஞ்சிப் பேச்சு.. ஏதாவது சந்தேகம் இருந்தா கேளுங்க.. எதுவா இருந்தாலும் தயங்காமக் கேளுங்க..” “சார் உங்க பெண்ணு பேரு என்ன சார்?”

# வாழ்வு தரும் ஆரோக்கியம்



## இளநீர் குடிப்பதால் உடலுக்கு கிடைக்கும் அசுர நன்மைகள்



பழங்களைவிட இளநீரில் அதிக சத்துக்கள் உள்ளன. அவசர சிகிச்சையில் ஒருவருக்கு செலுத்தப்படும் குளுக்கோஸ் திரவத்தை விட அதிகமான சத்துக்கள் இளநீரில் காணப்படுவதாக மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

தென்னை மரத்தின் வேர்களானது மண்ணில் இருந்து தண்ணீரையும் ஊட்டச்சத்துக்களையும் உறிஞ்சி, சைலம் மற்றும் புளோயம் என்ற நரம்புகள் வழியாக பூக்கள் மற்றும் இளம் காய்களுக்கு கொண்டு செல்கின்றன. இவ்வாறு கொண்டு செல்லப்படும் திரவத்தில் இயற்கை சர்க்கரை, எலக்ட்ரோலைட்டுகள் என்ற தாது உப்புக்கள் மற்றும் அமினோ அமிலங்கள் நிரம்பி உள்ளன. இவை ஒன்றிணைந்து இளநீராக மாறுகிறது.

பொதுவாக, இளநீர் உருவாகும் தொடக்க நிலையில், குரும்பை என்ற காய் பச்சை தோலுடன் மென்மையாக இருக்கும். இது மேலும் வளரும்போது உள்புறத்தில் நீர் குறைந்து, வெள்ளை கூழ் போன்ற தேங்காய் உருவாகும். இந்த செயல்முறை அதிகரிக்கும்போது, அது எந்த பருவத்தில் வெட்டி எடுக்கப்படுகிறது என்பதை பொறுத்து அது இளநீர் அல்லது தேங்காய் என்று பெயர் பெறுகிறது.

* கோடையில், உடலானது ஆற்றலை இழக்காமல் இருக்க இளநீர், ஒரு இயற்கை பானமாகும்.
* இளநீரில் நிறைய எலக்ட்ரோலைட்கள் உள்ளதால், உடல் நீர்ச்சத்தை சரியாக வைத்திருக்க உதவும். இளநீர் வெயிலில் களைப்பை குறைக்கும். இளநீரில் உள்ள எலக்ட்ரோலைட்கள் சிறுநீரகச் செயல்பாடுகளுக்கு உதவுகிறது. இளநீர் குடிப்பதால் நீர்ச்சத்து அதிகரிக்கும்.
* இளநீருடன் மஞ்சள், சந்தனம் கலந்து முகத்தில் போடுவதால் முகம் பொலிவாக தோற்றமளிக்கும்.
* இளநீரில் பொட்டாசியம் அதிகம் இருப்பதால், ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்த உதவுகிறது.
* இளநீரில் கலோரி குறைவாகவும், கொழுப்பு இல்லாததாலும், உடல் எடையை குறைக்க உதவும்.
* இளநீர் குடிப்பதால் செரிமானம் சீராகும், அமிலத்தன்மை குறையும்.
* இளநீர் சிறுநீரை சீராக வெளியேற்ற உதவுகிறது

## நீடித்த ஆற்றலுக்கு எது சிறந்தது?





வாழைப்பழங்களில் கார்போஹைட்ரேட்டுகள் நிறைந்துள்ளன. ஒரு வாழைப்பழம் சுமார் 100 கலோரிகளை வழங்கும். அதனுடன் பொட்டாசியம், வைட்டமின் பி6 மற்றும் வைட்டமின் சி ஆகியவையும் உள்ளடங்கியுள்ளன.


பேரீச்சம் பழத்தை பொறுத்தவரை அதிக கலோரிகளை கொண்டது. 3-4 பேரீச்சம் பழங்கள் சுமார் 90 முதல் 120 கலோரிகளை கொண்டிருக்கும். அத்துடன் இயற்கையான சர்க்கரைகள், நார்ச்சத்து, இரும்புச்சத்து மற்றும் மெக்னீசியம் ஆகியவை நிறைந்திருக்கும்.

வாழைப்பழங்கள் எளிதில் ஜீரணமாகும் கார்போஹைட்ரேட்டுகளைக் கொண்டிருப்பதால், உடலுக்கு உடனடி ஆற்றலை வழங்குகின்றன. அவற்றில் நார்ச்சத்தும் இருக்கிறது. அது சர்க்கரை உறிஞ்சப்படுவதை சற்றே தாமதப்படுத்த உதவும். இதனால் மிதமான உடல் செயல்பாடுகளின்போது நீடித்த ஆற்றலை தக்கவைக்க வாழைப்பழம் ஏற்றதாக இருக்கும். பேரீச்சம் பழங்கள் அதிக அளவு இயற்கையான சர்க்கரையைக் கொண்டிருப்பதால் வேகமான மற்றும் தீவிரமான ஆற்றலை அளிக்கின்றன. இதனால் உடற்பயிற்சிக்குப் பிறகோ அல்லது விரதத்தின்போதோ ஏற்படும் சோர்வில் இருந்து விரைவாக மீண்டுவர பேரீச்சம் பழங்கள் சிறந்த தேர்வாக அமைகின்றன.

வாழைப்பழங்கள் சற்று பழுத்த நிலையில் இருக்கும்போது, மிதமான கிளைசெமிக் குறியீட்டை கொண்டுள்ளன. திடீர் சர்க்கரை ஏற்ற இறக்கங்களை தவிர்க்க உதவும். பேரீச்சம்பழங்களை அதிக அளவில் உட்கொள்ளும்போது அதிக கிளைசெமிக் குறியீட்டுக்கு மாறி ரத்த சர்க்கரை அளவை விரைவாக உயர்த்தக்கூடும். இருப்பினும், மிதமாக உண்ணும்போது, அதிலிருக்கும் நார்ச்சத்து கிளைசெமிக் குறியீட்டு வீரியத்தை குறைக்க உதவும்.வாழைப்பழத்தில் இருக்கும் பொட்டாசியம் சத்து தசை செயல்பாட்டிற்கு ஆதரவளிக்கும். குறிப்பாக தசைப்பிடிப்பைத் தடுக்கும். செரிமானத்திற்கும் இதய ஆரோக்கியத்திற்கும் உதவும். பேரீச்சம் பழம் உடலுக்கு உடனடி ஆற்றலையும், வளர்சிதை மாற்றத்திற்கு தேவையான இரும்புச்சத்தையும், தசை மீட்சிக்கு தேவையான மெக்னீசியத்தையும். ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கு ஆதரவளிக்கும் ஆன்டி ஆக்சிடென்டையும் வழங்கும்.

உடலுக்கு நிலையான, நீடித்த ஆற்றல் தேவைப்பட்டால் வாழைப்பழங்கள் சிறந்த தேர்வாகும். உடலுக்கு உடனடியாக ஆற்றல் தேவைப்பட்டால் பேரீச்சம் பழங்கள் பயனுள்ளதாக இருக்கும்.

## மாம்பழ வகைகள் மற்றும் ஆரோக்கிய நன்மைகள்



பங்கனபள்ளி மற்றும் ருமானி, இமாம் பசந்த், செந்தூரா வகை மாம்பழங்கள் ருசிக்காக மிகவும் பிரபலமானவை. இதில் இமாம் பசந்த் மணமும், இனிப்பும், மென்மையும் கொண்டது. பங்கனபள்ளி அளவில் பெரிய பழம், மெல்லிய சதை, சாப்பிட எளிது. செந்தூரா பழங்கள் நல்ல மணம், அழகான நிறம், இனிப்பு சமநிலை உள்ளது.

இவை தவிர மல்கோவா, கறி அல்போன்சா, நீலம் போன்ற பழங்களும் பரவலாக விரும்பி உண்ணப்படுகிறது.

மாம்பழத்தில் உள்ள வைட்டமின்-சி உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. வைட்டமின்-ஏ பார்வை தெளிவு பெற உதவுகிறது. நார்ச்சத்து அதிகம் இருப்பதால் மலச்சிக்கல் குறைய உதவும்.

## காதில் சீழ் வடிவதற்கு என்ன தீர்வு?

காதில் அடிக்கடி சீழ் வடிவதற்கு நடுக்காதில் ஏற்படும் நீண்டகாலத் தொற்று, மாஸ்டாய்டு பகுதியில் ஏற்படும் வீக்கம் மற்றும் தொற்று காரணமாகும் (Chronic Suppurative Otitis Media CSOM). காதில் இருந்து குறைந்தது ஆறு வாரங்களுக்கு மேலாகச் சீழ் வந்து கொண்டிருக்கும்.


நீங்கள், நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தும்போது தற்காலிகமாகச் சீழ் நிற்கும். பிறகு மீண்டும் ஏற்படும். நாள்பட்ட தொற்று, வீக்கம், காது நரம்பு பாதிப்பு, காது சவ்வில் ஏற்படும் துளை ஆகியவை காது இரைச்சலை ஏற்படுத்தலாம்.

நாள்பட்ட தொற்று எதனால் ஏற்படுகிறது?

ஸ்டெஃபிளோகோகஸ் ஆரியஸ், சூடோமோனாஸ் போன்ற பாக்டீரியாக்கள் இந்தத் தொற்றுக்கு முக்கியக் காரணங்களாகும்.



## குழந்தைக்கு மலச்சிக்கல்



நாள்தோறும் மலம் கழித்தாலும், அது கடினமாக இருப்பதால் இது கவனிக்கப்பட வேண்டும். 11 வயதான சிறுவனுக்கு மலச்சிக்கல் ஏற்படுவதற்கு உளவியல் தொடர்பான காரணங்கள்தான் முக்கியப் பங்கு வகிக்கின்றன. சுமார் 85 - 95% சிறுவர்களுக்கு இதுதான் முக்கியக் காரணம்.

மீதமுள்ள சிறுவர்கள்தான் உடல், குடல் பிரச்சினைகளால் மலச்சிக்கலுக்கு ஆட்படுகிறார்கள். சிறுவர்களின் வாழ்க்கை இன்று வெகுவாக மாறிவிட்டது.

மாறிப் போன வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள் இவர்களிடம் மலச்சிக்கலை ஏற்படுத்து கின்றன. பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்வதால், குழந்தையின் உணவுப் பழக்கத்தைச் சரிவரக் கவனிக்க முடியாமை தொடர்கிறது.

நார்ச்சத்து இல்லாத பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள், சக்கை உணவு, மைதா, துரித உணவு வகைகளை அதிகமாக உட்கொள்வது, குறைவாக நீர் அருந்துவது மலத்தைக் கடினமாக்குகிறது.

பள்ளி, தேர்வு மன அழுத்தம், பள்ளி கழிப்பறைகளைப் பயன்படுத்த முடியாமல் அல்லது முன்பு மலம் கழித்தபோது வலி ஏற்பட்ட பயத்தில் மலத்தை அடக்கி வைப்பது, உடற்பயிற்சி இல்லாமல் நீண்ட நேரம் அமர்ந்து திறன்பேசியில் மூழ்கி விடுதல் ஆகிய அனைத்துமே சிறுவர்களுக்கு மலச்சிக்கல் ஏற்படக் காரணமாக இருக்கின்றன.

## குழந்தைகள் ஏன் திறன்பேசிக்கு அடிமையாகிறார்கள்?

தனது ஆறு வயது மகன் அதிக நேரம் திறன்பேசியைப் பார்க்கிறான் எனக் கவலை கொண்டனர் ஒரு பெற்றோர். அவனது திறன்பேசியைத் திறன்பேசி மென்பொருள் நிபுணரிடம் கொடுத்து அதை எளிதில் திறக்க முடியாத வகையில் செயலி ஒன்றை நிறுவச் சொன்னார்களாம். அந்த நிபுணர் கடை உள்ளே திரும்பி "ராஜா, உன்னால்தான் இவங்க சொல்ற மாதிரி பண்ண முடியும்.

வந்து போட்டுக்கொடு" என்று சொல்ல உள்ளிருந்து வந்த ராஜா அவருடைய ஐந்து வயது மகன்! பொதுவாகத் திறன்பேசிகளை அதீதமாகப் பயன்படுத்துவது நமக்கு எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்து கின்றன என்பதையெல்லாம் பார்த்தோம். அவை சிறார்களிடம் ஏற்படுத்தும் பாதிப்புகளை அறிந்து கொள்வது குழந்தை வளர்ப்புக்கு உதவக்கூடும்.



அதிர்ச்சி தரும் ஆய்வு முடிவுகள்

அமெரிக்காவில் எட்டு வயதுக்கு முன்பே தனக்கெனத் தனியாகத் திறன் பேசி அல்லது டேப்லட் (ஐ பாட்) உள்ள சிறார்களின் எண்ணிக்கை 51% என 2026இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்று சொல்கிறது. எட்டு வயதுக்குக் கீழே உள்ள குழந்தைகள் சராசரியாக நாளொன்றுக்கு இரண்டு மணி நேரம் திறன்பேசியில் செலவிடுகின்றனராம்.

இதுவே ட்வீனேஜர் (Tweenager) எனப்படும் 8-12 வயதினர் ஒரு நாளைக்கு ஐந்து மணிநேரத்துக்கும் அதிகமாகத் திறன்பேசிகளைப் பார்க்கின்றனர். பதின்ம வயதினரில் 90%க்கும் அதிகமானோரிடம் திறன்பேசிகள் இருக்கின்றன.


இந்த பகுதியில்
உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699



திருவதிகை ஸ்ரீசரநாராயணப் பெருமாள் சித்திரை அமாவாசை கண்ணாடியறை சேவை.



உத்திரமேரூர் ஸ்ரீ ஆனந்தவல்லி தாயார் வெள்ளிக்கிழமை முத்தங்கி சேவை.



ஸ்ரீ உடையவர் உத்ஸவம் நான்காம் திருநாள் -ஸ்ரீ கூடலழகர் திருக்கோயில்.

## போளூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் முரசு சின்னத்தில் வாக்குகள் சேகரிப்பு





திருவண்ணாமலை மாவட்டம் போளூர் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் திரு சரவணன் அவர்களை ஆதரித்து சேத்துப்பட்டு மேற்கு ஒன்றியம் கரிகாத்தூர் ஊராட்சி கிராம பொதுமக்களிடம் திரு. எ.வ.வே. கம்பன் அவர்கள் போளூர் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் திரு. சரவணன் அவர்களை ஆதரித்து முரசு சின்னத்தில் வாக்குகளை சேகரித்தார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை




# 100% வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி தேர்தல் விழிப்புணர்வு



திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் அரசு ,ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தேர்தல் விழிப்புணர்வு 100% அவசியத்தை வலியுறுத்தி அரசு மேல்நிலைப் பள்ளியின் சார்பாக தலைமை ஆசிரியர் முனைவர் திரு. எம்.பிரசன்னா அவர்கள் தலைமையில் தேர்தல் நடத்தும் அலுவலர் செந்தில்குமார், உதவித் தேர்தல் அலுவலர் ராஜேந்திரன் , சமூக நலப் பாதுகாப்பு தாசில்தார் வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் பள்ளி ஆசிரியர் பெருமக்கள் ஒருங்கிணைப்புடன் இந்திய தேர்தல் ஆணையத்தின் சின்னம் மாதிரியில் 400 க்கும் மேற்பட்ட மாணவர்களை அமர வைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். உதவித் தலைமை ஆசிரியர் கேசவன் உடற்கல்வி இயக்குனர் முகமது நபி அவர்கள் வழிமுறைகளோடு இந்நிகழ்ச்சியை ஆசிரியர் பெருமக்கள் ஒருங்கிணைத்து நடத்தினர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# கே. வி. குப்பம் தனி தொகுதி புரட்சி பாரதம் வேட்பாளர் ஜெகன் மூர்த்தியை ஆதரித்து பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் பிரச்சாரம்!

**வேலூர், ஏப்.18:**

வேலூர் மாவட்டத்தில் 5 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. இதில் குடியாத்தம் மற்றும் கே. வி .குப்பம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகள் தனித் தொகுதிகளாகும். இந்நிலையில் வரும் 23ஆம் தேதி தமிழக சட்டசபைக்கு தேர்தல் நடைபெற உள்ளது.

இந்நிலையில் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கே. வி. குப்பம் தனி தொகுதியில் புரட்சி பாரதம் கட்சியின் வேட்பாளர் ஜெகன் மூர்த்தியை ஆதரித்து பிரச்சாரம் செய்ய வருகை தந்தார். அவர் வருகை தந்த தகவல் அறிந்து



வேலூர் புறநகர் மாவட்ட அதிமுக செயலாளர் மற்றும் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் வேலழகன், காட்பாடி தொகுதி அதிமுக வேட்பாளரும், அதிமுக மாநில அமைப்பு செயலாளருமான ராமு ஆகியோர் கே. வி. குப்பத்துக்கு விரைந்து சென்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸை சந்தித்து ஆசி பெற்றனர். இதையடுத்து இருவரும் தங்களது தொகுதிகளான அணைக்கட்டு (வேலழகன்) காட்பாடி (ராமு) ஆகியோர் அவர்களது சொந்த தொகுதிகளுக்கு திரும்பி வந்து தொடர் பிரச்சாரத்தை தீவிரமாக மேற்கொண்டனர். இந்த சந்திப்பின்போது அதிமுக கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# இந்திய பல் மருத்துவக் கழக மயிலாடுதுறை மாவட்ட மருத்துவர்கள் கூட்டம்

**மயிலாடுதுறை , ஏப் , 18 :**

இந்திய பல் மருத்துவக் கழக தமிழ்நாடு கிளையின் மயிலாடுதுறை மாவட்ட பல் மருத்துவர்கள் சங்க கூட்டம் யூனியன் கிளப் அரங்கில் நடைபெற்றது. மயிலாடுதுறை மாவட்ட தலைவர் டாக்டர் இராஜசிம்மன் தலைமை வகித்தார். செயலாளர் டாக்டர் ரமாபிரபா, பொருளாளர் டாக்டர் மலர்விழி முன்னிலை வகித்தனர். இந்த கூட்டத்தில், நவீன தொழில்நுட்ப முறைகள் மூலம் பல் மருத்துவ சிகிச்சைக்கான அளவீடுகள் எடுப்பது குறித்து டாக்டர் மதன் பயிற்சி அளித்தார். இதே போல டாக்டர் அப்துல்காதர் பல் மருத்துவ சிகிச்சைக்கு தேவைப்படும் சிடி ஸ்கேன் நவீன முறைகள் குறித்து விளக்கினார். இந்திய பல் மருத்துவக் கழக தமிழ்நாடு கிளையின் நலத்திட்டங்கள் பிரிவு மாநில செயலாளர் டாக்டர் அருண் வர்கீஸ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பல்




மருத்துவர்களுக்கான குடும்பப் பாதுகாப்பு நிதியுதவி திட்டம் குறித்து விளக்கி, தேசிய மற்றும் மாநில சங்க செயல்பாடுகள் குறித்து பேசினார். மேலும், கூட்டத்தில் பல் மருத்துவ சிகிச்சைக்கான நவீன தொழில்நுட்ப முறைகள் மற்றும் மயிலாடுதுறை சுற்று வட்டார பகுதிகளில் இலவச மருத்துவ முகாம் நடத்துதல் போன்ற பல்வேறு செயல் திட்டங்கள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. இதில் மயிலாடுதுறை மாவட்ட சிடிஇ செயலாளர் டாக்டர் இர்ஷாத்அஹமது, முகாம் திட்ட செயலாளர் டாக்டர் அக்ஷயா மற்றும் நலத்திட்டங்கள் பிரிவு செயலாளர் டாக்டர் கணேஷ் குமார், மூத்த பல் மருத்துவர்கள் வெங்கடேஷ், அன்வர், இளமதி வேந்தன், வேதகிரி, அண்ணாமலை, ரம்யா, பெனாசீர் பாத்திமா, அனிதா மற்றும் மயிலாடுதுறை மாவட்ட பல் மருத்துவக் கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அலங்காநல்லூரில் தீரன் சின்னமலைக்கு முழு உருவ வெங்கல சிலை - அதிமுக வேட்பாளர் மாணிக்கம் உறுதி

**வாடிப்பட்டி, ஏப்.18:**

சுதந்திரப் போராட்ட வீரர், மாவீரன் தீரன் சின்னமலை பிறந்தநாளையொட்டி அலங்காநல்லூர் ஏ.எம்.எம் கவுண்டர் பள்ளி வளாகத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அதிமுக சார்பில் சோழவந்தான் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் முன்னாள் எம்.எல்.ஏ மாணிக்கம், ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன்நகர செயலாளர் அழகராசாவ.உ.சிதம்பரனாருக்குமாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் ராஜேஷ் கண்ணா பேரூராட்சி கவுன்சிலர் நாட்டாமை சுந்தர் அம்மா பேரவை மாவட்ட துணை செயலாளஆர்.பி.குமார்.மனோகரன்-முத்துகிருஷ்ணன்' கவுதம். ஜெயச்சந்திர மணியம் |காமாட்சி ..பிரவீன் .கௌதம் தவமணி-ராகுல். புலியம்மா.மற்றும் கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். பாஜக, அ,ம.மு"க, 'ஒன்றிய செயலாளர்கள் வக்கில். கோடிஸ்வரன்.ரகு. உள்ளிட்ட தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து



கொண்டனர். பின்னர் அதிமுக வேட்பாளர் மாணிக்கம் பேசுகையில். விரைவில் அதிமுக ஆட்சி அமைந்த உடன் தீரன் சின்னமலை முழு உருவ வெங்கல சிலை நிறுவப்படும் எனவும் அதனை கழக பொதுசெயலாளர் எடப்பாடியார் திறந்து வைப்பார் எனவும், இதேபோன்று சோழவந்தானில் வ.உ.சிதம்பரனாருக்கு முழு உருவ வெண்கலச் சிலை அமைக்கப்படும் எனவும் அவர் உறுதிப்பட தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் கவுண்டர் மகாஜன சங்க நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீ செல்வ மங்கள விநாயகர் ஆலயத்தில் கர்நாடக இசை நிகழ்ச்சி

**கோவை, ஏப்.18:**

தமிழ் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு, சூரியோதய ஸ்மைல் ஃபவுண்டேஷன் மற்றும் *My Trip Times* இணைந்து கோயம்புத்தூர் கணபதி வெங்கடசாமி நகர் ஸ்ரீ செல்வ மங்கள விநாயகர் ஆலயத்தில் கர்நாடக இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.


இந்நிகழ்ச்சியில் யாமினி பிரபா, கல்யா, சாய் அகஸ்திகா, அன்விகா, ஸ்ரீநிகா, தக்ஷா , சாய் மகிழினி ஆகிய பள்ளி மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பாக பாடல் வழங்கினர். அனைத்து மாணவிகளும் மிக அழகாக தங்களது திறமையை வெளிப்படுத்தினர்.


இந்த நிகழ்ச்சிக்கு ஆலயத்தின் சார்பில்



மேடை அமைப்பு, சிறப்பான ஏற்பாடுகள் மற்றும் தரிசன வசதிகள் வழங்கப்பட்டன. இதற்கு திரு. தண்டபாணி, திரு. ராஜப்பன் மற்றும் திருமதி தனலட்சுமி அவர்கள் சிறப்பான ஒத்துழைப்பை வழங்கினர்.

# அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் சித்திரை வசந்த உற்சவம்







**திருவண்ணாமலை ஏப்.18:**

அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் சித்திரை வசந்த உற்சவம் ஸ்ரீபராபவ வருடம் சித்திரை மாதம் 8-ஆம் தேதி (21.04.2026) செவ்வாய்க்கிழமை முதல் 10 நாட்கள் வசந்த உற்சவம் நடைபெறவுள்ளது. அதனை முன்னிட்டு சித்திரை மாதம் 7-ஆம் தேதி (20.04.2026) திங்கட்கிழமை சுக்லசதுர்த்தி திதி. ரோஹிணி நட்சத்திரம், மாலை 4. 30 மணிக்கு மேல் 5.30 மணிக்குள் கன்னியா லக்னத்தில் பந்தக்கால் முகூர்த்தம் அருள்மிகு சம்பந்த விநாயகர் சன்னதி எதிரில் நடைபெற வுள்ளது. கோவில் நிர்வாகம் அறிவிப்பு. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## அறிவிப்பு

இந்தியாவின் நம்பிக்கை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல் காந்தி அவர்கள் பொன்னேரி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் திரு.துரை சந்திரசேகர் அவர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள நாளை 18/04/2026 பொன்னேரி பெருஞ்சேரிக்கு வருகை தர இருக்கிறார்.

எனவே ராயபுரம், ஆர்.கே.நகர், திருவொற்றியூர் தொகுதிக்கு உட்பட்ட அனைத்து நிலை காங்கிரஸ் பேரியக்க நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு: நேரம் மற்றும் இடத்தினை பின்னர் அறிவிக்கப்படும்.

மதாரம்மா கனி பாருக் B.A., மாவட்ட தலைவர் வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி

## கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகள் சேகரிப்பு





திருவண்ணாமலை மாவட்டம் வேட்டவலம் பேரூராட்சி பகுதியில் அதிமுக வேட்பாளர் S.ராமச்சந்திரன் அவர்கள் வீதி வீதியாக, வீடு வீடாகச் சென்று இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். உடன் கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் வாக்குகளை சேகரித்தார்கள் . தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## வந்தவாசியில் சர்வதேச ஹைக்கூ கவிதை தினம்..!

**வந்தவாசி, ஏப் 18:**



சர்வதேச ஹைக்கூ கவிதைதினத்தையொட்டி வந்தவாசி ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையத்தில்'வாசிப்போம் ஹைக்கூ' நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்வில் வழக்கறிஞரும், கவிஞருமான சா.இரா. மணி பங்கேற்று, ஹைக்கூ உருவான விதம் பற்றியும், மறைந்த கவிக்கோ அப்துல் ரகுமான் பற்றிய ஹைக்கூ கவிதைகளை வாசித்து காட்டினார். மேலும் இந்த நிகழ்வில் கவிஞர்கள் ஜா.தமீம், பா.சீனிவாசன், கேப்டன் பிரபாகரன், மலர் சாதிக், இரா.பாஸ்கரன், மனோஜ் குமார் உள்ளிட்டோர் பங்கேற்று ஹைக்கூ கவிதைகளை வாசித்தனர். மேலும் கவிதை பற்றிய கருத்துரைகளை வழங்கியவர்களுக்கு கவிதை நூல் பரிசாக வழங்கப்பட்டது. இறுதியில் ஆசிரியர் மகாவீர் நன்றி கூறினார்

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

# கடலோரப் பள்ளி சின்னப்பாலத்தில் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம்



பாம்பன் சின்னப் பாலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் கல்வியாண்டின் நிறைவு பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் நடைபெற்றது.

பள்ளி தலைமையாசிரியை செல்லம்மாள் தலைமை வகித்தார். பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் முருகேசன், பள்ளி மேலாண்மை குழு தலைவர் வனிதா, முன்னாள் வார்டு உறுப்பினர் பாண்டியம்மாள் முன்னிலை வகித்தனர். ஆசிரியை ஞானசௌந்தரி வரவேற்றுப் பேசினார். ஆண்டு விழா வரவு செலவு கணக்குகள் ஒப்படைக்கப்பட்டது. பள்ளி வளர்ச்சிக்கான கூடுதல் நிலம் வாங்குவது குறித்து விவாதிக்கப்பட்டது. பள்ளி வயது மாணவர்களை உடனடியாக பள்ளியில் சேர்க்க அறிவுறுத்தப்பட்டது.நிறைவாக, ஆசிரியர் ஜெ.ஜே.லியோன் நன்றி கூறினார்.

நிகழ்விற்கான ஏற்பாடுகளை ஆசிரியர்கள் நிஷா, மிக்கேல் ராணி, சந்திரமதி, லாரன்ஸ் எமல்டா, அமுதவள்ளி, பிரிஸ்கிலா, நான்சி, சிலோக்சனா போன்றோர் செய்திருந்தனர்



திருவள்ளூர் ஸ்ரீ வைத்திய வீரராகவ பெருமாள் கோவில் தாயார் கடை வெள்ளிக் கிழமை கண்ணாடி அறை சேவை

## ஓட்டு போடுவதை பற்றி விழிப்புணர்வு



திருவண்ணாமலை மாவட்டம்கீழ்பென்னாத்தூரில் தமிழக பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு தேர்தல் அதிகாரிகள் கடைகளுக்கு சென்று தட்டில் பத்திரிக்கை பூ, பழம், வெற்றிலை, பாக்கு வைத்து ஓட்டு போடுவதை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## கி. வீரமணிக்கு வரவேற்பு



**திருவண்ணாமலை ஏப்.18:**

திருவண்ணாமலைக்கு வருகை புரிந்த திராவிடர் கழக தலைமை ஆசிரியர் உயர்திரு.கி. வீரமணி அவர்களை திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் எ வ. வேலு அவர்கள், எ. வ. வே. குமரன் அவர்கள் உயர்திரு.கி.வீரமணி தலைமை ஆசிரியர் அவர்களை வரவேற்றார்கள். உடன் கழகத் தோழர்கள் அனைவரும் உடன் இருந்தார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை



கடலூர் மாவட்டம் மேல் புவனகிரி அருள்மிகு மீனாட்சி உடனுறை வேதபுரீஸ்வரர் திருக்கோவிலில் சித்திரை மாதம் அமாவாசை முன்னிட்டு அருள்மிகு வேதபுரீஸ்வரருக்கு சிறப்பு அபிஷேகம், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகாதீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் வேதபுரீஸ்வரரை வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை





திருவண்ணாமலை மாவட்டம்கலசப்பாக்கம் ஒன்றியத்தை சேர்ந்த எலத்தூர் ஊராட்சியில் கலசபாக்கம் தொகுதி வேட்பாளர் அக்ரி S. S. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வீடு வீடாகச் சென்று இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். உடன் கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் சென்று வாக்குகளை சேகரித்தார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை


# சுற்றுலா: மசினகுடி என்னும் அழகான மலை கிராமத்தில் 2 நாட்கள்!

வார இறுதியில் சுற்றுலா செல்வதற்காக திட்டமிட்டு சென்னையிலிருந்து காவேரி எக்ஸ்பிரஸில் இரவு 9.15க்கு கிளம்பி காலை ஏழரை மணிக்கு மைசூர் வந்தோம். அங்கிருந்து கர்நாடகா பஸ்ஸில் 2 மணிநேரம் பயணம் செய்து மசினகுடிக்கு வந்தோம்.

வார இறுதி நாட்களை செலவிட சிறந்த இடம் இது. அங்கு ஏற்கனவே தங்குவதற்கு ஆன்லைனில் இரண்டு நாட்களுக்கு புக் செய்து இருந்தோம் ரொம்ப அழகான ஹோம்லி லுக்கில் இருந்தது

மசினகுடி என்னும் அழகான மலை கிராமம். நீலகிரியில் இப்படி ஒரு ஊர் இருக்கா என ஆச்சரியப்படுவீர்கள். ஊட்டிபோல் இங்கு கடினமான கடுமையான குளிர் கிடையாது. இதமான வெப்பநிலை மற்றும் குளிர்ச்சியான இடம். அடர்ந்த காட்டிற்குள் அழகாய் அமைதியாய் இருக்கும் கிராமம். ஊட்டியில் இருந்து 30 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

கர்நாடகா, கேரளாவில் இருந்தும் நேரடியாக செல்வதற்கு போக்குவரத்து வசதி உள்ளது. முதுமலையிலிருந்து 75 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.



**தெப்பக்காடு யானைகள் முகாம்:**

மசினகுடியில் இருக்கும் தெப்பக்காடு யானைகள் முகாம் மிகவும் முக்கியமான ஸ்பாட். இங்கு யானைகளுக்கு உணவுகள் தயாரித்துவைக்கும்இடம்உள்ளது. அங்கிருந்து யானைகளுக்கு உணவுகளை (பெரிய பெரிய உருண்டைகளாக) எடுத்துச் சென்று கொடுப்பதை அழகாக பார்த்தோம். யானைகள் அழகாக வரிசை கட்டி நின்றிருந்தது. அதை குளிப்பாட்டுவதும், சாப்பாடு கொடுப்பதும் பார்க்க ரொம்ப சுவாரசியமாக இருந்தது.

**போக்குவரத்து:**

மசினக்குடியில் வசித்து வரும் மக்களின் பிரதான தொழில் சுற்றுலாவும், கால்நடை மேய்ப்பும்தான். மசனகுடிக்கு ஊட்டியில் இருந்தும் கூடலூரில் இருந்தும் குறைந்த அளவில்தான் பேருந்து வசதிகள் உள்ளன. இங்குள்ள மக்கள் போக்குவரத்திற்கு ஜீப்புகளையே பெரிதும் நம்பி உள்ளனர். சுற்றி 14 குக்கிராமங்கள் உள்ளன என்றும், இந்த கிராம மக்களும் ஜீப்களைத்தான் நம்பியுள்ளனர் என்றும் கூறுகிறார்கள்.

**உணவு மற்றும் தங்கும் வசதிகள்:**

இங்கு தங்குவதற்கு ரிசார்ட்கள் உள்ளன. உணவைப் பொறுத்தவரை கேரளமாநிலத்தின் எல்லையில் அமைந்துள்ளதால் இங்கு தமிழகம் மட்டுமல்லாது கேரள உணவுகளும் கிடைக்கிறது.

மைசூர் மற்றும் ஊட்டியை இணைக்கும் சாலையில் அமைந்துள்ள முதுமலை தேசிய பூங்காவின் ஒரு பகுதிதான் மசினகுடி. ஏராளமான வனவிலங்குகள், பறவைகள், இயற்கை சூழல் நிறைந்த காட்சிகள் நம் கண்களை கவர்கின்றது. யானைகள், கரடிகள், மான், சோலை மந்தி, காட்டுப்பன்றி, பறக்கும் பல்லி போன்ற ஏராளமான உயிரினங்கள் இங்கு உள்ளன. இவற்றைக் காணவேண்டும் என்றால் ஜீப் சபாரியில் சென்று காணலாம்.

**மசினகுடி...**

தேயிலை தோட்டங்கள், ரப்பர் தோட்டங்கள், முதுமலை வனவிலங்கு சரணாலயம், பறவைகள் சரணாலயம் போன்ற இடங்கள் பார்க்க வேண்டியவை. காலை 6:30 முதல் 8 வரை மாலை 3 முதல் 6 மணி வரை சபாரி செய்யலாம். புள்ளி மான்கள், சிங்கவால் குரங்குகள் போன்றவற்றை கண்டுகளிக்கலாம்.

மசினகுடிக்கு வரும் வழியில் வனவிலங்குகளின் நடமாட்டத்தை நம்மால் காணமுடிகிறது.

எளிதில் மறக்க முடியாத இன்பமான சுற்றுலா பயணமாக அமையும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### முதுகலை பட்டதாரிகளுக்கு ப்ராஜெக்ட் அசோசியேட் வேலை!

சென்னைபல்கலைக்கழகத்தில்டிபிடி-யின்நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும், “குழந்தைகளுக்கான அரிய மரபணு நோய்கள் குறித்த சிறப்புத் திட்டம்” (Mission Program on Pediatric Rare Genetic Disorders) எனும் திட்டத்தில், முற்றிலும் தற்காலிக அடிப்படையில் நிரப்பப்பட உள்ள ‘ப்ராஜெக்ட் அசோசியேட்-I’பணியிடத்திற்குத் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இது பற்றிய விவரம் வருமாறு:

பணி: Project Associate - 1

சம்பளம்: மாதம் ரூ.31,000 +24% எச்ஆர்ஏ

தகுதி: உயிர் மருத்துவ மரபியல்(Bio Medical Genetics) பாடத்தில் எம்.எஸ்சி முடித்திருக்க வேண்டும்.

வயது வரம்பு: 27-க்குள் இருக்கவேண்டும். எஸ்சி, எஸ்டி, மாற்றுத்திறனாளி பிரிவினர்கள், பெண்களுக்கு 5 ஆண்டுகளும், ஓபிசி பிரிவினருக்கு 3 ஆண்டுகளும் வயது வரம்பில் சலுகை வழங்கப்படும்.

தேர்வு செய்யப்படும் முறை: நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தகுதியானவர்கள் பணிக்கு தேர்வு செய்யப்படுவர். நேர்முகத் தேர்வு குறித்த விபரம் தகுதியானவர்களுக்கு மின்னஞ்சல் மூலமாக தெரிவிக்கப்படும். நேர்முகத் தேர்விற்கு வரும்போது தேவையான அனைத்துஅசல்சான்றிதழ்களையும்கொண்டு வர வேண்டும். பணிக்கு தேர்வு செய்யப்படுபவர்கள் சென்னை பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்படும் “Mission Program on Pediatric RareGenetic Disorders” Project பணியில் ஈடுபடுத்தப்படுவர்.

விண்ணப்பிக்கும் முறை: www.unom.ac.in என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து தேவையான சான்றுகளின் நகல்களை இணைத்து “Dr. A.K. Munirajan, Professor and Head Department of Genetics, Dr. ALM PG Institute of Basic Medical Sciences, University of Madras, Taramani Campus, Chennai - 600113” என்ற அஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர கடைசி நாள்: 25.4.2026

விண்ணப்பிப்போரின் கூடுதல் விபரங்களுக்கு www.unom.ac.in இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்பை பார்த்து படித்து தெரிந்துகொள்ளவும்.

## காதல் கொலைகளை தடுக்க சிறப்பு சட்டம் நிறைவேற்ற அரசுக்கு உத்தரவிட முடியாது: ஐகோர்ட் உத்தரவு

**மதுரை, ஏப். 18:**

‘காதல் விவகார படுகொலைகளை தடுக்க சிறப்புச் சட்டம் நிறைவேற்ற அரசுக்கு உத்தரவிட முடியாது’ என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.



தூத்துக்குடியைச் சேர்ந்த பொன் காந்திமதிநாதன் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், “நெல்லையில் மென்பொருள் பொறியாளர் கவின், காதல் விவகாரத்தில் படுகொலை செய்யப்பட்டார்.

தமிழகத்தில் காதல் விவகார கொலைகள் அதிகளவில் நடைபெற்று வருகின்றன. இதைத் தடுக்க தனிச்சட்டம் இல்லை. எனவே காதல் விவகார கொலைகளை தடுக்க சிறப்புச் சட்டம் நிறைவேற்ற அரசுக்கு உத்தரவிட வேண்டும்” என கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் சுரேஷ்குமார், வடமலை அமர்வில் விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில், “நெல்லை கவின் கொலை வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விசாரணை நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கிறது.

கவின் குடும்பத்துக்கு வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் உரிய இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. காதல் விவகார கொலைகளை தடுக்க சிறப்புச் சட்டம் நிறைவேற்றுவது தொடர்பாக ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் ஆய்வுக்குழு அமைக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது” என கூறப்பட்டது.

இதையடுத்து, “சிறப்புச் சட்டம் இயற்ற அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட முடியாது. மனுமுடித்து வைக்கப்படுகிறது” என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## ஜனநாயகன் திரைப்படம் இணையத்தில் வெளியான விவகாரம்: சினிமா உதவி எடிட்டர் உட்பட 3 பேர் கைது

**சென்னை, ஏப்.18:**

ஜனநாயகன் திரைப்படம் இணையதளங்களில் சட்ட விரோதமாக வெளியாகக் காரணமாக இருந்ததாக சினிமா உதவி எடிட்டர் உள்ளிட்ட மேலும் 3 பேரை சைபர் க்ரைம் போலீஸார் கைது செய்துள்ளனர்.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் நடிகர் விஜய் நடிப்பில், இயக்குநர் ஹெச்.வினோத் இயக்கத்தில் உருவான திரைப்படம் ஜனநாயகன்.

விஜய்யின் திரைப்பயணத்தில் இது கடைசிப் படம் என்பதால், அவரது ரசிகர்கள் மத்தியில் இப்படத்துக்கு பெரும் எதிர்பார்ப்பு நிலவியது.

கடந்த ஜனவரி மாதம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெளியாக வேண்டிய இப்படம், தணிக்கை சிக்கல்களால் தள்ளிப்போனது.

நீண்ட போராட்டத்துக்குப் பிறகு, கடந்த மாதம் மறு தணிக்கைக் குழு படத்தை ஆய்வு செய்தது. விரைவில் தணிக்கைச் சான்றிதழ் பெற்று படம் திரையரங்குகளில் வெளியாகும் என ரசிகர்கள் ஆவலோடு காத்திருந்த நிலையில், ஜனநாயகன் திரைப்படத்தின் முழுப்பதிப்பும் இணையதளங்களில் சட்ட விரோதமாகக் கசிந்தது.



இது படக்குழுவினர் மட்டுமின்றி, சினிமா துறையையே அதிர்ச்சி அடையச் செய்தது. இந்த விவகாரம் தொடர்பாக டிஜிபி அலுவலகத்தில் அளிக்கப்பட்ட புகாரின்பேரில், மாநில சைபர் க்ரைம் போலீஸார் விசாரணை நடத்தினர்.

முதல்கட்டமாக படம் வெளியான அனைத்து இணையதள முகவரிகளையும் கண்டறிந்து, அவற்றை சைபர் க்ரைம் போலீஸார் முடக்கினர். மேலும் படங்களை நண்பர்களுக்கு பகிர்ந்த 6 பேரை அடுத்தடுத்து கைது செய்தனர்.

மேலும் திரைப்படம் கசிய மூளையாகச் செயல்பட்டது யார் என தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டது. இந்நிலையில் ஜனநாயகன் திரைப்படத்துக்கான எடிட்டிங் ஸ்டூடியோவில் உதவி எடிட்டராக பணிபுரிந்தவர் கைது செய்யப்பட்டார்.

இவர்தான் திரைப்படத்தின் ரீல்களை திருடிச்சென்று அதை இணையதளத்தில் கசியவிட்டுள்ளார். இவருக்கு உதவியாக இருந்த மேலும் 2 பேரையும் போலீஸார் கைது செய்தனர்.

இவர்கள் 3 பேரும் சென்னையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பணத்துக்காக இதுபோன்ற செயலில் ஈடுபட்டார்களா? அல்லது வேறு ஏதேனும் பின்னணி உள்ளதா? என சைபர் க்ரைம் போலீஸார் தொடர்ந்து விசாரிக்கின்றனர்.

## சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி மதுக்கடைகள், பார்கள் 4 நாட்கள் மூடல்

**சென்னை, ஏப்.18:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வரும் 23-ம் தேதி நடைபெறுகிறது. தேர்தல் நாளான ஏப்.23-ம் தேதி, வாக்குப்பதிவு நிறைவடையும் அன்று மாலை 6 மணிக்கு முந்தைய 48 மணி நேரத்தை அமைதி நேரமாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதனால் மாநிலத்தில் அமைதியை கடைபிடிக்கும் நோக்கில் மதுக்கடைகளை மூட தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி இருந்தது. அதன்படி தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களும், மதுக்கடைகளை மூடுவது தொடர்பாக செய்திக் குறிப்புகளை வெளியிட்டுள்ளனர்.

அதன் விவரம்: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு அனைத்து மாவட்டங்களிலும், தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும், அமைதியாகவும், சுமுகமாகவும் நடைபெறுவதை உறுதி செய்யும் நோக்கில், தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் பார்கள்) விதிகள் 2003, விதி 12(2)படி உரிமம் பெற்று இயங்கி வரும் இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் (IMFL) சில்லறை விற்பனை கடைகள், அவற்றுடன் இணைந்த பார்கள் உள்ளிட்ட அனைத்தும் ஏப். 21-ம் தேதி காலை 10 மணி முதல், வாக்குப்பதிவு நாளான 23-ம் தேதி நள்ளிரவு 12 மணி வரையும், வாக்கு எண்ணிக்கை நாளான மே 4-ம் தேதி என 4 நாட்களுக்கு மூடப்பட்டிருக்கும். மேற்குறிப்பிட்ட நாட்களில் மதுபானங்கள் விற்பனை செய்யப்பட மாட்டாது. அன்றைய தினங்களில் விதிகளுக்கு மாறாக மது விற்பனை ஏதும் செய்யப்பட்டால் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு செய்திக்குறிப்புகளில் கூறப்பட்டுள்ளது..

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu” என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

## திருவள்ளூர்: ஜூன் 14-வரை மீன் பிடிக்கத் தடை

**திருவள்ளூர், ஏப்.18:**

திருவள்ளூர் மாவட்டத்தில் ஏப்.15 முதல் ஜூன்-14 வரை 61 நாள்களுக்கு மீன்பிடி விசைப் படகுகள் மற்றும் இழுவலைப் படகுகள் மூலமாக கடலில் மீன்பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியா் மு.பிரதாப் தெரிவித்துள்ளாா்.

தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறைபடுத்தும் சட்டம் 1983-இன் கீழ் தமிழகத்தின் கிழக்கு கடல் பகுதியில் மீன் இனப்பெருக்க காலத்தைக் கணக்கில் கொண்டும், மீன்வளத்தைப்பாதுகாக்கஏதுவாக ஏப்.15 முதல் ஜூன்-14 வரையிலும் 61 நாள்களுக்கு மீன்பிடி விசை படகுகள் மற்றும் இழுவலை படகுகள் மூலமாக கடலில் மீன்பிடிப்பதற்கு ஆண்டுதோறும் தடைவிதித்து அரசு உத்தரவிட்டு வருகிறது.



அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்தில் மீன்பிடி தடைகாலத்தில் இயந்திரம் பொருத்தப்பட்ட அனைத்து வகை மீன்பிடி கலன்கள் கடலில் மீன்பிடிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகள் ஆந்திர மாநில கடல்பகுதிக்கு கட்டாயம் செல்லக்கூடாது. இதுகுறித்து அனைத்து மீனவா் கூட்டுறவு நலசங்கங்கள் மூலமாகவும் தகவல் தெரிவிக்க வேண்டும்.


எனவே தடையை மீறி மீன்பிடிப்பில் ஈடுபட்டு அதனால் சட்டம் ஒழுங்கு பிரச்னை ஏற்பட்டால் அதற்கு சம்பந்தப்பட்ட மீனவா் கூட்டுறவு சங்கங்களே பொறுப்பேற்க நேரிடும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்படி, திருவள்ளூா் மாவட்டம் கிழக்கு கடற்கரை மீன்பிடி தடைக்காலம் அமலுக்கு வரும் முன்னா செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12-மணிக்குள் கடலுக்கு சென்ற மீன்பிடி விசைப்படகுகள் அனைத்தும் கட்டாயம் கரைக்கு திரும்ப வேண் மீனவா்களை அவா் கேட்டுக் கொண்டுள்ளாா்.

இந்த விசாரணை அக்டோபர் மாதம் 6 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுவதாகவும், அதற்குள் நிலுவையில் உள்ள மனுக்கள் குறித்து விளக்கமளிக்கவும் உத்தரவிட்டுள்ளது.

## “அன்புமணிக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை” - ராமதாஸ்

**சென்னை, ஏப்.18:**



பாமக நிறுவனர் ராமதாஸ் மற்றும் அவருடைய மகன் அன்புமணி இருவருக்கும் நீண்ட நாட்களாக வார்த்தை போர் நிலவி வருகிறது. வருகிற சட்டமன்ற தேர்தலில் ராமதாஸ் சசிகலாவுடன் கூட்டணி அமைத்து போட்டியிடுகிறார். அன்புமணி ராமதாஸ் அதிமுக கூட்டணியில் இணைந்து தேர்தலை சந்திக்கிறார். இந்நிலையில் இன்று ராமதாஸ் புதிதாக ஒரு வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

சட்டத்திற்கு விரோதமாக அன்புமணி பாமக தலைவராக நீடித்து வருகிறார். தேர்தல் பிரசாரத்தில் தன்னுடைய புகைப்படத்தை பயன்படுத்த தடைவிதிக்க வேண்டும். அன்புமணிக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை எனவும் அவர் அளித்த புகாரில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இது குறித்து பதிலளிக்க அன்புமணி ராமதாசின் சார்பில் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட 18 பேருக்கு நோட்டீஸ் அனுப்ப நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணையை வருகிற 21-ந் தேதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

# தூத்துக்குடி மாவட்டத்தில் 2,795 தபால் வாக்குகள் பதிவு: கலெக்டர் தகவல்



**தூத்துக்குடி, ஏப்.18:**

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்- 2026-ஐ முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்டத்தில் தேர்தல் பணிகளில் ஈடுபடவுள்ள வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள் 1, 2, 3 ஆகியோருக்கான இரண்டாம் கட்டப் பயிற்சி வகுப்புகள் 15.4.2026 அன்று நடைபெற்றன. இந்தப் பயிற்சி மையங்களில் தேர்தல் பணியில் உள்ள அலுவலர்களுக்காக தபால் வாக்கு வசதி மையங்கள் அமைக்கப்பட்டு, வாக்குகள் பெறப்பட்டன.

இதுகுறித்து தூத்துக்குடி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் விஷ்ணு மகாஜன் தெரிவித்துள்ள விவரங்கள் பின்வருமாறு:

தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள 6 சட்டமன்ற தொகுதிகளுக்கும் தனித்தனியாகப் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. விளாத்திகுளம் தொகுதிக்கு பயிற்சி மையமாக குமாரகிரி சி.கே.டி. மெட்ரிகுலேஷன் மேல்நிலை பள்ளியும், தூத்துக்குடி தொகுதிக்கு காமராஜ் கல்லூரியும் ஒதுக்கப்பட்டிருந்தன. திருச்செந்தூர் தொகுதிக்கு ஆதித்தனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், ஸ்ரீவைகுண்டம் தொகுதிக்கு நாசரேத் மர்காசியஸ் கல்லூரியிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஒட்டப்பிடாரம் தொகுதிக்கு ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரியும், கோவில்பட்டி தொகுதிக்கு நாடார் மேல்நிலைப்பள்ளியும் பயிற்சி மையங்களாக செயல்பட்டன. இந்த மையங்களில் முறையே விளாத்திகுளம் மற்றும் ஸ்ரீவைகுண்டம் தொகுதிகளுக்கு தலா 3 வசதி மையங்களும், தூத்துக்குடி மற்றும் கோவில்பட்டி தொகுதிகளுக்கு தலா 2 வசதி மையங்களும், திருச்செந்தூர் மற்றும் ஒட்டப்பிடாரம் தொகுதிகளுக்கு தலா ஒரு வசதி மையமும் அமைக்கப்பட்டிருந்தன.

இந்த வசதி மையங்களில் 15.4.2026 அன்று பதிவான தபால் வாக்குகளின் அடிப்படையில், ஒட்டப்பிடாரம் தொகுதியில் அதிகபட்சமாக 685 வாக்குகளும், ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் 514 வாக்குகளும் பதிவாகியுள்ளன. விளாத்திகுளம் தொகுதியில் 487 வாக்குகளும், கோவில்பட்டி தொகுதியில் 462 வாக்குகளும், திருச்செந்தூர் தொகுதியில் 344 வாக்குகளும் பதிவாகின. தூத்துக்குடி தொகுதியில் மொத்தம் 303 வாக்குகள் பெறப்பட்டன.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## க்ரைம் கார்னர்

### நெல்லையில் செம்மண் திருடியவர் கைது; லாரி பறிமுதல்

**நெல்லை, ஏப்.18:**

திருநெல்வேலி மாநகரம் தச்சநல்லூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தேனீர்குளம் வாட்டர் டேங்க் அருகில் காவல்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்த வழியே வந்த டிப்பர் லாரியை நிறுத்தி போலீசார் சோதனை செய்ததில் எவ்வித அரசு அனுமதியின்றி லாபம் ஈட்டும் நோக்கத்துடன் விற்பனைக்காக திருட்டுத்தனமாக செம்மண் எடுத்து சென்ற தூத்துக்குடி மாவட்டம் நாணல்காடு பகுதியை சேர்ந்த முத்துக்குமார் (வயது42) என்பவரிடமிருந்து லாரியை பறிமுதல் செய்தனர்.

இதுகுறித்து தச்சநல்லூர் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, மேற்சொன்ன நபரை போலீசார் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

### சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் தொழிலாளிக்கு சாகும் வரை ஆயுள் தண்டனை

**தூத்துக்குடி, ஏப்.18:**

தூத்துக்குடி மாவட்டம் ஏரல் பகுதியைச் சேர்ந்தவர் மகாராஜன் (42), தொழிலாளியான இவர், கடந்த 2020-ம் ஆண்டு அதே பகுதியை சேர்ந்த 14 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்ததுடன், கொலை மிரட்டலும் விடுத்துள்ளார்.

இதுகுறித்த புகாரின் பேரில், ஸ்ரீவைகுண்டம் மகளிர் போலீஸார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குபதிவு செய்து, மகாராஜனை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை தூத்துக்குடி போக்சோ நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

குற்றம்சாட்டப்பட்ட மகாராஜனுக்கு, இயற்கை மரணம் வரும் வரை ஆயுள் தண்டனை மற்றும் ரூ.12,500 அபராதம் விதித்து நீதிபதி பிரீத்தா தீர்ப்பளித்தார். மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு அரசு நிவாரண நிதியிலிருந்து ரூ.5 லட்சம் வழங்கவும் உத்தரவிட்டார். இவ்வழக்கின் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத் தந்த ஸ்ரீவைகுண்டம் டிஎஸ்பி நிரேஷ் மற்றும் வழக்கை திறம்பட புலனாய்வு செய்த அப்போதைய காவல் ஆய்வாளர் லெட்சுமி பிரபா, சிறப்பாக வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் ஜூடு ஏஞ்சலோ, தலைமை காவலர் அரிராணி ஆகியோரை எஸ்.பி. மதன் பாராட்டினார்.

### கல்லூரி மாணவி கத்தியால் வெட்டப்பட்ட வழக்கில் கஞ்சா போதை இளைஞர்கள் 4 பேர் சிறையிலடைப்பு

**பொன்னேரி, ஏப்.18:**

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் அருகே வல்லூர் பகுதியை சேர்ந்த மாணவி, சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள கல்லூரியில் பி.காம் 2-ம் ஆண்டு படிக்கிறார். தற்போது பருவத் தேர்வு நடைபெற்று வருவதால், கடந்த 14-ம் தேதி இரவு வீட்டின் முதல் மாடியில் படித்துக் கொண்டிருந்தார். அப்போது, கஞ்சா போதையில் இருந்த இளைஞர்கள் 4 பேர், மாணவியின் வீட்டு முதல் மாடிக்கு தாவி அங்குள்ள பொருட்களை திருட முயன்றதாக கூறப்படுகிறது. அவர்களை கண்டதும் மாணவி கூச்சலிட்டதால், இளைஞர்கள் மாணவியை கத்தியால் வெட்டிவிட்டு தப்பினர். இதில் பலத்த காயமடைந்த மாணவியின் அலறல் கேட்டு முதல் மாடிக்கு சென்ற அவரது பெற்றோர், சகோதரர், அக்கம் பக்கத்தினர் தப்பி ஓடிய இளைஞர்களை பிடிக்க விரட்டினர்.

இதில், 3 பேர் தப்பிய நிலையில், வல்லூரை அடுத்த அத்திப்பட்டு பகுதியை சேர்ந்த டில்லிபாபு என்ற ரோலக்ஸ் (23) பிடிபட்டார். மீஞ்சூர் போலீஸாரிடம் பொதுமக்கள் அவரை ஒப்படைத்தனர். தாக்குதலுக்குள்ளான மாணவி மீஞ்சூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்து தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். இதுகுறித்து வழக்குப் பதிவு செய்து விசாரித்த மீஞ்சூர் போலீஸார், டில்லிபாபுவை கைது செய்தனர். தொடர்ந்து, தனிப்படை போலீஸார், தப்பியோடி தலைமறைவாக இருந்த வல்லூர் பகுதியை சேர்ந்த சித்திக் (19), லோகேஷ் (22), அத்திப்பட்டு, பாலமேடு பகுதியை சேர்ந்த முத்தமிழ்செல்வன் (24) ஆகிய 3 பேரையும் இரவு கைது செய்தனர்.

நால்வரும் பொன்னேரி ஜே.எம்-1 நீதிமன்ற நீதிபதி முன்பு ஆஜர்படுத்தப்பட்டு சென்னை, புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

## விளையாட்டு செய்திகள்

### 2-வது சுற்றில் ஜோஷ்னா சின்னப்பா

**ஹம்பர்க், ஏப்.18:**

ஜெர்மனியின் ஹம்பர்க் நகரில் ஹம்பர்க் ஓபன் ஸ்குவாஷ் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் ஆட்டத்தில் இந்தியாவின் ஜோஷ்னா சின்னப்பா 11-4, 11-5, 11-4 என்ற செட் கணக்கில் ஜெர்மனியின் சாஸ்கியா பெயின்ஹார்டை வீழ்த்தினார். மற்றொரு இந்திய வீராங்கனையான தன்வி கன்னா 5-11, 7-11, 11-13 என்ற கணக்கில் அயர்லாந்தின் ஹன்னா கிரெய்க்கிடம் தோல்வி அடைந்தார். ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் வீர் சோட்ரானி 11-8, 11-9, 11-8 என்ற செட் கணக்கில் ஸ்பெயினின் இவான் பெரேஸை வீழ்த்தி 2-வது சுற்றுக்கு முன்னேறினார். அதேவேளையில் மற்றொரு இந்திய வீரரான வேலவன் செந்தில்குமார் 4-11, 9-11, 12-14 என்ற கணக்கில் ஜப்பானின் சுகியிடம் தோல்வி அடைந்தார்.

### குயின்டன் டி காக் சதம் வீண்: மும்பையை வீழ்த்தி பஞ்சாப் முதலிடம்

**மும்பை, ஏப்.18:**

ஐபிஎல் 2026 தொடரின் 24-வது லீக் ஆட்டத்தில், மும்பை இந்தியன்ஸ் அணியை 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி பஞ்சாப் கிங்ஸ் அபார வெற்றி பெற்றுள்ளது. குயின்டன் டி காக் அடித்த சதம் வீணானது. இந்தத் தோல்வியின் மூலம் மும்பை அணி தனது 4-வது தொடர் தோல்வியைச் சந்தித்துள்ளது. மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில், டாஸ் வென்ற பஞ்சாப் கேப்டன் ஸ்ரேயாஸ் ஐயர் முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்தார். ரோஹித் சர்மா காயம் காரணமாக விளையாடாத நிலையில், தொடக்க வீரராகக் களம் இறங்கிய குயின்டன் டி காக் அதிரடியாக விளையாடி 60 பந்துகளில் 112 ரன்கள் (8 பவுண்டரிகள், 7 சிக்ஸர்கள்) குவித்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

அவருக்குத் துணையாக நமன் திர் 50 ரன்கள் சேர்த்து வலுவான அடித்தளம் அமைத்தார். இருப்பினும், மற்ற வீரர்கள் சோபிக்கத் தவறியதால், மும்பை அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 195 ரன்கள் மட்டுமே எடுத்தது. பஞ்சாப் தரப்பில் அர்ஷ்தீப் சிங் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். 196 ரன்கள் என்ற இலக்கை நோக்கி ஆடிய பஞ்சாப் அணிக்கு, தொடக்க வீரர்கள் பிரியான்ஷ் ஆர்யா (15) மற்றும் கூப்பர் கான்னொலி (17) ஏமாற்றம் அளித்தாலும், அதன்பின் ஜோடி சேர்ந்த பிரப்சிம்ரன் சிங் மற்றும் கேப்டன் ஸ்ரேயாஸ் ஐயர் மும்பை பந்துவீச்சைச் சிதறடித்தனர். பிரப்சிம்ரன் சிங் வெறும் 39 பந்துகளில் 2 சிக்ஸர்கள் மற்றும் 11 பவுண்டரிகளுடன் 80 ரன்கள் குவித்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். அவருக்கு ஈடுகொடுத்து ஆடிய ஸ்ரேயாஸ் ஐயர் 35 பந்துகளில் 66 ரன்கள் விளாசினார்.

பஞ்சாப் அணி 16.3 ஓவர்களிலேயே 3 விக்கெட் இழப்பிற்கு 198 ரன்கள் எடுத்து இலக்கை எட்டியது. மும்பை தரப்பில் நட்சத்திர பந்துவீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா விக்கெட் ஏதுமின்றி 41 ரன்களை வாரி வழங்கினார். இம்பாக்ட் பிளேயராக வந்த அல்லாஹ் கஜன்பர் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் பஞ்சாப் கிங்ஸ் புள்ளிப்பட்டியலில் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது. 3 விக்கெட்டுகளை வீழ்த்திய அர்ஷ்தீப் சிங் ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.

# ஆர்.டி.ஓ. செல்லான் ஆப் பணமோசடி மெசேஜ்களை பொதுமக்கள் நம்ப வேண்டாம்: நெல்லை காவல்துறை எச்சரிக்கை




**திருநெல்வேலி, ஏப்.18:**

திருநெல்வேலி மாவட்ட காவல்துறைவெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

தற்போது RTO CHALLAN APP (ஆர்.டி.ஓ. செல்லான் ஆப்) என்ற பெயரில் வாட்ஸ் ஆப் (WHATSAPP) மூலமாக பண மோசடி நடைபெற்று வருகிறது. வாட்ஸ்ஆப் செயலி வாயிலாக அறிமுகமில்லாத எண்ணிலோ (அ) குழுக்களில் (GROUP) உள்ள நபர்களின் எண்கள் மூலமாகவோ RTO CHALLAN APP-ஐ APK FILE மூலம் உங்கள் வாகனத்திற்கு அபராததொகை (FINE AMOUNT) உடனே செலுத்த வேண்டும் என MESSAGE வரும். அதை UPDATE செய்யவில்லை என்றால் உங்களது வாகனத்தின் ஆர்.சி. (R.C.) முடக்கப்பட்டுவிடும் என செய்தி இருக்கும்.

அதை உண்மையென நம்பி கிளிக் செய்துவிட்டால் உங்கள் வாட்ஸ்ஆப் ஆனது உடனே HACK செய்யப்படும் மற்றும் உங்களது வங்கி கணக்கிலிருந்து பணம் மோசடியாக எடுக்கப்பட்டுவிடும். மேலும், இந்த ஆர்.டி.ஓ. செல்லான் ஆப் APK FILE மெசேஜ் தானாகவே உங்கள் வாட்ஸ்ஆப் குரூப்களில் உள்ள அனைத்து நபர்களுக்கும் உங்களது மொபைல் எண்ணில் இருந்தே அனுப்பப்பட்டதாக உங்களுக்கு தெரியாமலே பகிரப்படும். இந்த ஆர்.டி.ஓ. செல்லான் ஆப்-ஐ டவுன்லோடு செய்தாலோ அல்லது கிளிக் செய்தாலோ வாட்ஸ்ஆப் நம்பரும் தொடர்ச்சியாக HACK செய்யப்படும் மற்றும் மொபைல் போனில் உள்ள வங்கி கணக்கு தொடர்பான தரவுகளையும் HACK செய்தும் பண மோசடி செய்வார்கள்.

இதேபோன்று வாட்ஸ்ஆப் மூலமாக அறிமுகமில்லாத எண்ணிலோ (அ) உங்கள் வாட்ஸ்ஆப் குழுக்களில் உள்ள தெரிந்த நபர்களின் எண்ணிலோ RTO CHALLAN APP- FINE AMOUNT எனவும், SBI BANK, AXIS BANK, UNION BANK ETC., ஆகிய வங்கிகளின் REWARD POINTS எனவும் (அ) அரசாங்க நலதிட்ட உதவி, மானியம் என்று வரும் எந்த APK FILE-களையும் உங்களது மொபைலில் பதிவிறக்கம் (INSTALL) செய்ய வேண்டாம்.

இதுபோன்று போலியான மெசேஜ்களை உடனே DELETE செய்ய வேண்டும். காவல் துறையினரும் FINE AMOUNT (தண்டனைத்தொகை) எதையும் கட்ட வேண்டும் என்று வாட்ஸ்ஆப் செயலி மூலமாக யாரும் கோர மாட்டார்கள். மேலும் காவல் துறையினர் எண்களிலிருந்தோ அல்லது காவல் துறையினர் போலவே போலியான அடையாளத்துடன் உள்ள வாட்ஸ்ஆப் கணக்குகள் மூலம் வரும் ஆர்.டி.ஓ. செல்லான் என வரும் குறுஞ்செய்திகளை எவரும் நம்ப வேண்டாம்.

இது போன்ற சைபர் கிரைம் குற்றங்கள் நடைபெற்றால் அருகில் உள்ள காவல் நிலையங்களிலோ அல்லது சைபர் கிரைம் இணையதளத்தில் WWW.CYBERCRIME.GOV.IN அல்லது 1930 என்ற TOLL FREE எண்ணிற்கு அழைத்து உடனடியாக உங்களுடைய புகாரினை பதிவு செய்யுமாறு திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. பிரசண்ணகுமார் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பெண்களை ஏமாற்றி கோடிக்கணக்கில் மோசடி செய்த நபர் கைது

**புதுடெல்லி, ஏப்.18:**

தென்கிழக்கு டில்லி காவல் துறை துணை ஆணையா் அமித் கோயல் கூறியதாவது: குற்றஞ்சாட்டப்பட்ட ஆனந்த் குமாா பல்வேறு போலி சமூக ஊடக மற்றும் டேட்டிங் செயலி கணக்குகளை உருவாக்கியுள்ளாா. இதன் மூலம் பெண்களை அணுகி, தன்னை சிறந்த பின்னணி கொண்டவா் போல காட்டிக்கொண்டு அவா்களது நம்பிக்கையை பெற்றுள்ளாா.

இதையடுத்து, அவா்களது மன அழுத்தத்தைப் பயன்படுத்தி உணா்ச்சிப் பூா்வமான நெருக்கத்தை உருவாக்கியுள்ளாா. பின்னா், அவசர மருத்துவ செலவுகள், தொழிலில் நஷ்டம், குடும்ப நெருக்கடி போன்ற காரணங்களைக் கூறி அவா்களிடம் பணம் கேட்டதாகவும், சில பெண்களிடம் அவா்களது தனிப்பட்ட புகைப்படங்களை பெற்று பின்னா் அதை வைத்து மிரட்டி பணம் பறித்ததாகவும் கூறப்படுகிறது. திருமணம் செய்துக்கொள்வதாகக் கூறி ரூ.7 லட்சம் ஏமாற்றப்பட்ட பெண் அளித்த புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்த காவல் துறையினா் விசாரணை மேற்கொண்டனா். வங்கிக் கணக்கின் பணப் பரிமாற்றத்தை வைத்து அவரது இருப்பிடத்தை கண்டறிந்து, மாா்ச் 22-ஆம் தேதி அவரை மேற்கு வங்கத்தில் வைத்து கைது செய்தனா். அவரிடம் இருந்து பல்வேறு கைப்பேசிகள், சிம் காா்டுகள், பல்வேறு வங்கிக் கணக்கின் ஆவணங்கள் மற்றும் விலையுயா்ந்த பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டது. திருமணம் செய்து கொள்வதாகக் கூறி ஏமாற்றப்பட்ட சில பெண்கள் பணத்தை திரும்பக் கேட்டபோது அவா் இறந்துவிட்டதாக பொய்யாக அவா்களை நம்ப வைத்துள்ளாா் என்பது விசாரணையில் தெரியவந்தது. அவரிடம் இது குறித்து மேலும் விசாரணைகள் நடைபெற்று வருகிறது என்று காவல் துறை துணை ஆணையா தெரிவித்தாா.

## வணிகச் செய்திகள்

### அகர்வால்ஸ் மருத்துவர்களுக்கு சர்வதேச விருது

**சென்னை, ஏப்.18:**

டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனை இயக்குநர் டாக்டர் அதியா அகர்வால் மற்றும் முதுநிலை மருத்துவ நிபுணர் சூசன் ஜேக்கப் ஆகியோருக்கு அமெரிக்காவின் கண்புரை மற்றும் ஒளிவிலகல் அறுவை சிகிச்சை (ஏஎஸ்சிஆர்எஸ்) அமைப்பின் சார்பில் விருது வழங்கப்பட்டது.

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் நடைபெற்ற ஏஎஸ்சிஆர்எஸ் 44-ஆவது சர்வதேச திரைப்பட விழாவில் இந்த கௌரவம் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. மேம்பட்ட கண் அறுவை சிகிச்சை தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கும் ஆவணப்படங்களை உருவாக்கியதற்காக இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

உலகெங்கிலும் கண் அறுவை சிகிச்சை துறையில் பல்வேறு புதுமையான நுட்பங்கள், மேம்பட்ட கருவிகளைக் கையாளுவது குறித்து விளக்கும் ஆவணப்படங்கள் ஏஎஸ்சிஆர்எஸ் விழாவில் திரையிடப்படுவது வழக்கம்.

அந்த வகையில், நிகழாண்டு விழாவில் டாக்டர் அதியா அகர்வால் சமர்ப்பித்த 'போல்ஸ் ஆஃப் ஐரிஷ் ரிப்பேர்' என்ற ஆவணப் படத்துக்கு முதல் பரிசு வழங்கப்பட்டது. அதேபோல, டாக்டர் சூசன் ஜேக்கபின், 'ரிபப்லிங் இன் கெரட்டோபிளாஸ்டி' என்ற படத்துக்கு இரண்டாம் பரிசு வழங்கப்பட்டது.

# ஹீட் ஸ்ட்ரோக்: உணவு விநியோக ஊழியர்களுக்கு சுகாதாரத் துறை முக்கிய அறிவுறுத்தல்

**சென்னை, ஏப்.18:**

உணவு விநியோகிக்கும் பணியில் உள்ள ஊழியர்கள் நேரடியாக வெயிலில் பணியாற்றுவதால் அதிக அளவு தண்ணீர் பருகவும், அரை மணி நேரத்துக்கு ஒரு முறை நிழலில் ஓய்வெடுக்கவும் வேண்டும் என பொது சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.

அவர்களுக்கு 'ஹீட் ஸ்ட்ரோக்' பாதிப்பு வர அதிக வாய்ப்புள்ளதால் இத்தகைய முன்னெச்சரிக்கை விடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாள்களாக மாநிலம் முழுவதும் கோடை வெயில் உச்சத்தை எட்டியுள்ளது. அது மேலும் தீவிரமடையக்கூடும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. இதையடுத்து, பொதுமக்களுக்கும், மருத்துவமனைகளுக்கும் பல்வேறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், தனியார் இணையவழி உணவு சேவை நிறுவனங்களுக்காக பணியாற்றும் ஊழியர்கள் கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டும் என்று பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறியுள்ளனர். இதுதொடர்பாக அவர்கள் மேலும் கூறியதாவது: தமிழகத்தில் பல மாவட்டங்களில் இனிவரும் நாள்களில் கடுமையான வெப்பம் பதிவாகலாம் எனக் கூறப்படுகிறது. அந்த தட்பவெப்ப நிலையில், நேரடியாக பணியாற்றும்போது உடலில் உடனடியாக நீர்ச்சத்து இழப்பு ஏற்படும். இதை அலட்சியப்படுத்தினால் ஒரு கட்டத்தில் உடல் உறுப்புகளின் இயக்கம் தடைபடும். அத்தகைய நிலை ஏற்படும்போது மருத்துவ சிகிச்சைகள் விரைந்து கிடைக்காவிடில் உயிரிழப்பு நேரிடலாம். எனவே, கட்டுமானப் பணியாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், வியாபாரிகள் என நேரடி வெயிலில் பணியாற்றக்கூடியவர்கள் அனைவரது பணி நேரத்தை மாற்றியமைக்க தொழில் நிறுவனங்களும், உரிமையாளர்களும் முன்வர வேண்டும். அதிகாலையிலிருந்து காலை வரையிலும், அதன்பின்னர், மாலையிலிருந்து இரவு வரையிலும் பணியாற்ற அறிவுறுத்தலாம். அதேவேளை, நேரடி வெயிலில் பணியாற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ள உணவு விநியோக நிறுவன ஊழியர்கள் அனைவரும் குறைந்தது 5 லிட்டர் தண்ணீர் அருந்த வேண்டும். நீர்ச்சத்து இழப்பு ஏற்படாத வகையில் ஓஆர்எஸ் கரைசல், எலுமிச்சை சாறு, பழச்சாறு, மோர், இளநீர் அதிகமாக அருந்தலாம்.

# தேர்தல் நடத்தை விதி மீறல்: நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை பதவி நீக்க மம்தா வலியுறுத்தல்

கொல்கத்தா, ஏப்.18:

தேர்தல் நடத்தை விதிகளை மீறி மேற்கு வங்கத்தில் பெண்களுக்கு ரூ.3,000 தருவதாக அட்டைகளை விநியோகித்த மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை பதவி நீக்க வேண்டும் என்று மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி வலியுறுத்தியுள்ளார்.




மேற்கு வங்கத்தில் பிரசாரம் மேற்கொண்ட நிர்மலா சீதாராமன், தேர்தலில் வென்றால் பெண்கள் வங்கிக் கணக்கில் மாதம்தோறும் ரூ.3,000 செலுத்தப்படும் என்ற பாஜகவின் முக்கிய வாக்குறுதி தொடர்பான அட்டைகளை பெண்களுக்கு விநியோகித்தார். அதில், பெண்கள் வங்கிக் கணக்கில் ரூ.3,000 செலுத்தப்படும் என்ற வாசகம் இடம்பெற்றிருந்தது.

இந்நிலையில், மேற்கு வங்கத்தின் அலிபூர்துவாரில் தேர்தல் பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற மம்தா இது தொடர்பாக பேசியதாவது:

உத்தர பிரதேசம், ராஜஸ்தான், அஸ்ஸாம் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இப்போது மேற்கு வங்கத்துக்கு வந்து விடுதிகளிலும், விருந்தினர் இல்லங்களிலும் தங்கியுள்ளனர். இவர்களின் பணி வாக்காளர்களைச் சந்தித்து பாஜகவுக்கு ஆதரவாக வாக்களிக்க பணம் விநியோகிப்பதாகும்.

மகளிர் இடஒதுக்கீடு என்ற பெயரில் தொகுதி மறுசீரமைப்பு செய்து வாக்காளர் பட்டியலில் இருந்து மேலும் பலரின் பெயர்களை நீக்க சதி நடந்து வருகிறது. இதைத் தொடர்ந்து தேசிய குடிமக்கள் பதிவேட்டையும் அமல்படுத்துவார்கள்.

மகளிர் இடஒதுக்கீடு மசோதா எப்போதோ நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதை அமல்படுத்தாமல் இருந்தது மத்திய அரசுதான். இப்போது வேறு நோக்கத்துக்காக மகளிர் இடஒதுக்கீடு என்ற பெயரில் மத்திய அரசு சதி செய்கிறது.

தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும் நேரத்தில் ரூ.3,000 தருவதாகக் கூறி அட்டைகளை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வழங்கியுள்ளார்.

இது வாக்காளர்களை தவறாக வழிநடத்தும் செயல். தேர்தல் ஆணையம் இதில் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?. பாஜகவுக்கு எதிராக எங்கள் கட்சியினர் அளிக்கும் அனைத்துப் புகார்களையும் புறக்கணிப்பதைபோல இந்த விஷயத்திலும் நடந்து கொள்ளப் போகிறதா?

தேர்தல் விதிகளை மீறிச் செயல்பட்ட நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை பிரதமர் நரேந்திர மோடி பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்றார்.

# ராகிங் கொடுமையால் மாணவர் தற்கொலை: அரசு மருத்துவக்கல்லூரி பேராசிரியர் பணி நீக்கம்

திருவனந்தபுரம், ஏப்.18:

கேரளம் மாநிலம் திருவனந்தபுரம் மாவட்டம் நெடுமங்காடு பகுதியை சேர்ந்தவர் நித்தின் ராஜ் (வயது 23). இவர் கண்ணூர் மாவட்டம் அஞ்சரகண்டி அரசு மருத்துவக்கல்லூரியில் பி.டி.எஸ். (பல் மருத்துவம்) படித்து வந்தார். அவரை கல்லூரி அனாடமி பாடப்பிரிவு பேராசிரியர்கள் 2 பேர், முதுநிலை மாணவர்கள் சிலர் ராகிங் செய்ததோடு, சாதி, மதத்தின் பெயரால் இழிவுபடுத்தி உள்ளனர். மேலும் அவரது நிறம் குறித்து கிண்டல் செய்ததோடு, மாணவரின் வறுமை நிலையை சுட்டிக்காட்டி கேலி செய்ததாக தெரிகிறது.

இதனால் மனமுடைந்த நித்தின் ராஜ் கல்லூரி கட்டிடத்தின் 4-வது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார். தற்கொலை செய்வதற்கு முன்பு நித்தின் ராஜ் சமூக வலைத்தளத்தில் ஆடியோ வெளியிட்டு இருந்ததாக தெரிகிறது. அதில், அனாடமி பிரிவு பேராசிரியர்கள் ராம், சங்கீதா ஆகியோர் ராகிங் செய்ததாக குறிப்பிட்டு இருந்தார். இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. இதுதொடர்பாக கல்லூரி நிர்வாகம் விசாரணை நடத்தினர். இதைத்தொடர்ந்து பேராசிரியர்கள் ராம், சங்கீதா ஆகிய 2 பேரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். மேலும் சக்கரக்கல் போலீசார், பேராசிரியர்கள் 2 பேர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. இதற்கிடையே மருத்துவ மாணவர் தற்கொலை வழக்கில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேரளம் மாநில கவர்னரும், பல்கலைக்கழக வேந்தருமான ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் உத்தரவிட்டு இருந்தார். அதன்படி குழு அமைத்து, கல்லூரியில் 300-க்கும் மேற்பட்ட மாணவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

அப்போது மாணவர் தற்கொலைக்கு பேராசிரியர் ராமின் ராகிங் கொடுமையே காரணம். அவரை பணியில் இருந்து நீக்க வேண்டும் என்று கூறியதாக தெரிகிறது. மேலும் அவர் தலைமறைவாகி விட்டார். இந்த நிலையில் பேராசிரியர் ராம் பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளார். அவரை போலீசார் தேடி வருகின்றனர்.

# டில்லி விமான நிலையத்தில் மோதிக்கொண்ட ஆகாசா ஏர், ஸ்பைஸ்ஜெட் விமானங்கள்: டிஜிசிஏ விசாரணை

புதுடெல்லி, ஏப்.18:

டில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் வியாழக்கிழமை பிற்பகலில் ஆகாசா ஏர் மற்றும் ஸ்பைஸ்ஜெட் நிறுவனங்களுக்குச் சொந்தமான இரண்டு போயிங் 737 விமானங்கள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டதில் சேதமடைந்தன. இது தொடர்பாக இந்திய விமானப் போக்குவரத்து ஒழுங்குமுறை ஆணையம் (டிஜிசிஏ) விசாரணை நடத்திவருகிறது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆகாசா ஏர் நிறுவனம் கூறுகையில், 'விமான நிலையத்தின் முனையம் 1-இல் பிற்பகல் 2:15 மணியளவில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. அப்போது, ஆகாசா ஏர் நிறுவனத்தின் க்யூபி 1406 விமானம் தில்லியிலிருந்து ஹைதராபாத் புறப்பட நின்றுகொண்டிருந்தது. லடாக்கின் லே பகுதியில் இருந்து தில்லி வந்து தரையிறங்கிய ஸ்பைஸ்ஜெட் நிறுவனத்தின் எஸ்ஜி 124 விமானம், விமானம் நிறுத்தும் இடத்திற்குச் சென்றபோது ஆகாசா விமானம் மீது மோதியது. இதையடுத்து, பயணிகள் மற்றும் குழுவினர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்' எனத் தெரிவித்தது. இது தொடர்பாக டிஜிசிஏ வெளியிட்ட அறிக்கையில், 'விமானம் நிறுத்தும் இடத்துக்குச் சென்றுகொண்டிருந்த ஸ்பைஸ்ஜெட் விமானத்தின் வலது இறக்கையின் முனை ஆகாசா ஏர் விமானத்தின் பின்புற கிடைமட்ட வால் பகுதியில் மோதியது. இதன் காரணமாக இரு விமானங்களிலும் சேதம் ஏற்பட்டது. இதில் பயணிகள் மற்றும் குழுவினர் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது' என தெரிவிக்கப்பட்டது.

# ‘சாணக்கியரே அதிர்ச்சி அடைந்திருப்பார்’.. -பிரியங்கா காந்தி

புதுடெல்லி, ஏப்.18:

நாடாளுமன்றத்தின் 3 நாள் சிறப்பு கூட்டத்தொடர் இன்று காலை தொடங்கியது. இந்த சிறப்பு கூட்டத்தொடரில், மகளிர் இடஒதுக்கீடு சீர்திருத்த மசோதா தாக்கல் செய்யப்பட்டது, அதில் 2 பெரிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுவதுடன், அரசியலமைப்பு சட்டம் 131-வது திருத்த மசோதா-2026, தொகுதிகள் மறுவரையறை மசோதா-2026 மற்றும் யூனியன் பிரதேசங்களின் சட்டங்கள் திருத்த மசோதா-2026 ஆகிய 3 மசோதாக்கள் மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டு விவாதம் நடத்தப்படுகிறது.

இன்றைய விவாதத்தி ன்போது பிரியங்கா காந்தி பேசுகையில், "மகளிர் இடஒதுக்கீட்டை காங்கிரஸ் ஆதரித்தாலும், இன்றைய விவாதம் அதைப்பற்றியது அல்ல, மாறாக அந்த மசோதாவிற்கு பின்னால் இருக்கும் அரசியல் நோக்கம் பற்றியது. மகளிருக்கான இடஒதுக்கீடு என்பது, உண்மையில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் அரசியல் துருப்புச் சீட்டு ஆகும். இந்திய அரசியலமைப்பை சிதைப்பதன் மூலம் பா.ஜ.க. தனது கட்சியின் அடித்தளத்தை வலுப்படுத்துகிறது. நீங்கள் அனைவரும் முழுமையாகத் திட்டமிட்டு வந்துள்ளீர்கள். இன்று சாணக்கியர் உயிரோடு இருந்திருந்தால், உங்கள் தந்திரத்தைக் கண்டு அவரே அதிர்ச்சி அடைந்திருப்பார்" என்று கூறினார். சாணக்கியர் குறித்து பிரியங்கா காந்தி பேசியதைக் கேட்டு அவையில் சிரிப்பலை எழுந்தது.

# வாக்களிப்பதை கட்டாயமாக்க முடியாது: பொது நல மனுவை நிராகரித்தது உச்சநீதிமன்றம்

புதுடெல்லி, ஏப்.18:

தேர்தல்களில் வாக்களிப்பதை கட்டாயமாக்கக் கோரி தாக்கல் செய்த பொதுநல மனுவை விசாரணைக்கு ஏற்க உச்சநீதிமன்றம் வியாழக்கிழமை மறுத்தது.



அஜய் கோயல் என்பவர் சார்பில் இந்தப் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், 'வாக்களிப்பதை கட்டாயமாக்க வேண்டும். வேண்டுமென்றே வாக்களிக்காமல் இருப்பவர்களுக்கு அரசு நலத் திட்டங்களைப் பெறுவதிலிருந்து தடை விதிக்கும் வகையில் வழிகாட்டுதலை வெளியிட தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்' எனக் கோரியிருந்தார்.

இந்த மனு உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி, விபுல் எம். பஞ்சோலி அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. மனுவைப் பரிசீலித்த தலைமை நீதிபதி சூர்ய காந்த், 'சட்ட ரீதியிலான நிர்ப்பந்தத்தைக் காட்டிலும், பொது விழிப்புணர்வில்தான் ஜனநாயகம் செழித்து வளர முடியும். சட்டத்தின் ஆட்சியால் ஆளப்படும், ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட இந்த நாட்டில், அனைவரும் சென்று வாக்களிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அவர்கள் வாக்களிக்கச் செல்லவில்லை என்றால், அவர்களைக் கட்டாயப்படுத்த முடியாது. தேவைப்படுவது விழிப்புணர்வுதான். அதோடு, தேர்தல் நாளில் நீதிபதிகள் உள்பட பலகுடிமக்களும் பணிபுரிய வேண்டிய அவசியம் உள்ள நிலையில், வாக்களிப்பதை கட்டாயமாக்கும் சட்டம் கொண்டுவருவது என்பது நடைமுறையில் சாத்தியமில்லாதது. எனவே, மனுதாரர் மத்திய அரசை அணுகி தனது கோரிக்கைக்குத் தீர்வு காணலாம்' என்று குறிப்பிட்டு, மனுவை விசாரணைக்கு ஏற்க மறுத்து உத்தரவிட்டார்.

# போர் விமானங்களுக்கு வானிலேயே எரிபொருள்: அமெரிக்க நிறுவனத்துடன் மும்பை நிறுவனம் ஒப்பந்தம்

புதுடெல்லி, ஏப்.18:



இந்திய பாதுகாப்புப் படைகளுக்கு சேவையளிக்கவும், போர் விமானங்களுக்கு வானிலேயே எரிபொருள் நிரப்பும் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யவும் இந்தியாவின் முன்னணி பாதுகாப்பு மற்றும் விண்வெளி பொறியியல் நிறுவனம் அமெரிக்க நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மும்பையைச் சேர்ந்த பாராஸ் பாதுகாப்பு மற்றும் விண்வெளி தொழில்நுட்ப நிறுவனத்துக்கும் அமெரிக்காவைச் சேர்ந்த பண்டக விமான தொழில்நுட்ப டிபிநார்த்ஸ்டார் நிறுவனத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி, போர் விமானங்களுக்கு வானிலேயே எரிபொருள் நிரப்புவதற்கான தொழில்நுட்பம் உள்பட நவீன தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களை அமெரிக்க நிறுவனம் விநியோகிப்பதோடு, தொழில்நுட்ப ஆதரவையும் வழங்கும். விமானங்களுக்கு வானிலேயே எரிபொருள் நிரப்பும் தொழில்நுட்பத்தை வடிவமைத்தல், மேம்படுத்துதல் மற்றும் உற்பத்தி செய்வதில் உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான அமெரிக்காவின் நார்த்ஸ்டார் திகழ்கிறது என்று தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து பாராஸ் நிறுவன இயக்குநர் அமித் மஹாஜன் கூறுகையில்,

'இந்திய பாதுகாப்புப் படைகளுக்கு சேவையளிக்கும் நோக்கில், வானிலேயே எரிபொருள் நிரப்பும் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம், இத்தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யும் முதல் நிறுவனமாக பாராஸ் திகழும்' என்றார்.

# அனில் அம்பானி மனு சுப்ரீம் கோர்ட்டில் தள்ளுபடி




புதுடெல்லி, ஏப்.18:

பிரபல தொழில் அதிபர் அனில் அம்பானி மற்றும் அவரது ரிலையன்ஸ் கம்யூனிகேசன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான வங்கிக் கணக்குகளை 'மோசடி கணக்குகள்' என்று ஏன் அறிவிக்கக்கூடாது என்று கேட்டு 3 பொதுத்துறை வங்கிகள் நோட்டீஸ் அனுப்பின. அதை எதிர்த்து அனில் அம்பானி, மும்பை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். அதை விசாரித்த ஒற்றை நீதிபதி, வங்கிகள் நடவடிக்கை எடுக்க தடை விதித்து இடைக்கால உத்தரவு பிறப்பித்தார். அந்த உத்தரவை 2 நீதிபதிகள் அமர்வு ரத்து செய்தது. அதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் அனில் அம்பானி 3 மனுக்களை தாக்கல் செய்தார்.

இந்த மனுக்களை தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு நேற்று விசாரித்து 3 மனுக்களையும் தள்ளுபடி செய்தது. அதே சமயத்தில், அனில் அம்பானி மும்பை ஐகோர்ட்டின் ஒற்றை நீதிபதி முன்பு தனது கோரிக்கையை விடுக்க அனுமதி அளித்தது. அந்த கோரிக்கையை விரைந்து விசாரித்து முடிக்குமாறு ஒற்றை நீதிபதியை சுப்ரீம் கோர்ட் கேட்டுக்கொண்டது.

# திருப்பதி கலப்பட லட்டு குறித்து 7-ம் வகுப்பு தேர்வில் கேள்வி



திருப்பதி, ஏப்.18:

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் கடந்த ஜெகன்மோகன் ரெட்டி ஆட்சியின் போது, கலப்பட நெய் வாங்கப்பட்டதாக தற்போதைய ஆந்திர முதல்வர் சந்திர பாபு நாயுடு அறிவித்தது தொடர்ந்து இந்த விவகாரம் பக்தர்களிடையே பேரதிர்வை ஏற்படுத்தியது.

இதுதொடர்பாக சிபிஐ விசாரணைக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனை தொடர்ந்து சிபிஐ அதிகாரிகள் திருப்பதி மற்றும் திருமலையில் ஆய்வு நடத்தி சிலரை கைதும் செய்தனர். இந்நிலையில் சமீபத்தில் ஆந்திராவில் நடைபெற்ற 7ம் வகுப்பு சமூக அறிவியல் தேர்வில், திருப்பதி கலப்பட லட்டு பிரசாதம் குறித்து 10-வது கேள்வியாக கேட்கப்பட்டுள்ளது.

அதாவது "திருப்பதி லட்டு பிரசாதத்தில் கலப்படம் நடந்தது குறித்து முழு விசாரணை தேவையா?" எனக் கேட்டு, ஒரு வரியில் பதிலளிக்கும்படி கூறப்பட்டுள்ளது. இதற்கு பல மாணவர்கள் லட்டு பிரசாதத்தில் கலப்படம் நடந்ததாகவும், இது குறித்து முழு விசாரணை நடத்தி உண்மையை தெரியப்படுத்த வேண்டுமெனவும் பதில் அளித்துள்ளதாக கூறப்படுகிறது.

# பெண் தெய்வமான காளியும் கருப்பு உடைதான் அணிந்துள்ளார்: பிரதமருக்கு கனிமொழி பதிலடி

புதுடெல்லி, ஏப்.18:

நாடாளுமன்ற மக்களவையில் தொகுதி மறுவரையறை மசோதா எதிர்க் கட்சிகளின் கடும் எதிர்ப்புகளுக்கு இடையே நேற்று தாக்கல் செய்யப்பட்டது. இவ்வாறான எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக்கு பிறகு, மசோதாக்களை தாக்கல் செய்ய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் மசோதாக்களுக்கு ஆதரவாக 251 பேரும், எதிராக 185 பேரும் வாக்களித்தனர். இதனைத் தொடர்ந்து மசோதாக்கள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.





இதனையடுத்து நாடாளுமன்ற மக்களவையில் தொகுதி மறுவரையறை உள்ளிட்ட 3 மசோதாக்கள் மீதான விவாதத்தில் பிரதமர் மோடி சுமார் 40 நிமிடங்கள் பேசினார். அப்போது அவர் தொகுதி மறுவரையறையால் எந்த மாநிலத்துக்கும் பாதிப்பு ஏற்படாது என்று கூறினார்.

தொகுதி மறுவரையறை சட்டத்திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடாளுமன்றத்தில் தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சி எம்.பி.க்கள் கருப்பு நிற சட்டை அணிந்து கூட்டத்தில் பங்கேற்றனர். விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் மற்றும் புதுச்சேரி காங்கிரஸ் எம்.பி. வைத்திலிங்கம் உள்ளிட்டோரும் கருப்புச்சட்டை அணிந்தே அவைக்கு சென்றனர். இதைபோலவே பெண் எம்.பிக்கள் கருப்பு நிற சேலை அணிந்து கூட்டத்தில் பங்கேற்றனர்.

விவாதத்துக்கான நேரம் பற்றிய பேச்சு எழுந்தபோது, 12 மணி நேரம் ஒதுக்க முடிவு செய்திருப்பதாக கிரண் ரிஜிஜு தெரிவித்தார். இதனைத்தொடர்ந்தும்பிரோ. "எல்லா உறுப்பினர்களுக்கும் பேச அனுமதி வழங்கப்படும். 15 முதல் 18 மணி நேரம் வரை விவாதம் நடத்தப்படும். விவாதத்துக்கு பிறகு வாக்கெடுப்பு நடைபெறும்" என்றார்.

திமுகவினரின் கருப்புச்சட்டை போராட்டத்தை பிரதமர் மோடி கிண்டல் செய்தார். அவர் பேசும்போது, திமுகவினரின் கருப்பு சட்டை போராட்டத்தை கண் திருஷ்டியை விரட்டும் 'கருப்புத்திலகம்' போல இருக்கிறது என்று கூறினார். "ஒரு நல்ல காரியத்தைத் தொடங்குவதற்கு முன்பு கருப்புத் திலகம்' இடும் பாரம்பரியம் உள்ளது. அதை செய்துள்ள தி.மு.க.வினருக்கு நன்றி தெரிவிக்கிறேன்" என்று அவர் கூறினார்.

இந்த நிலையில், பிரதமர் மோடியின் கிண்டலுக்கு திமுக எம்.பி.கனிமொழி இன்று பதிலடி கொடுத்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், "இந்துத்துவாவை பாதுகாப்பதாக சொல்லும் ஆளும் கட்சியினருக்கு கருப்பு தெய்வமான காளி நினைவில் இல்லை. கறுப்பு காளியை மறந்துவிட்டீர்களா?. பெண் சக்தியை பறைசாற்றும் பெண் தெய்வமான காளியும் கருப்பு உடைதான் அணிந்துள்ளார்.

அந்த காளிதான் ஒரு ஈகோ அராஜகம் போன்றவற்றை விரட்டும் தன்மை கொண்டவர். அத்தகைய கருப்பு வண்ணத்தை நாங்கள் தேர்வு செய்து எதிர்ப்பை பதிவு செய்கிறோம். ஏனென்றால் அது பெரியாரின் நிறம். சுயமரியாதை, கடைசிவரை போராடும் குணத்தை கற்றுக்கொடுத்தவர் பெரியார். நாங்கள் கடைசிவரை போராடுவோம்" என்று கூறினார்

# லஷ்கர் இணை நிறுவனர் துப்பாக்கிச் சூட்டில் படுகாயம்

**இஸ்லாமாபாத், ஏப்.18:**

பாகிஸ்தானில் தீவிரவாதி ஹபீஸ்சயீதுடன் இணைந்து லஷ்கர்-இ-தொய்பா அமைப்பை நிறுவியவர் அமீர் ஹம்சா (66). இந்தியாவில் மட்டுமின்றி உலகம் முழுவதும் பல தீவிரவாத செயல்களுடன் தொடர்புடையவர். இந்நிலையில் பாகிஸ்தானின் லாகூர் நகரில் ஒரு செய்திச் சேனல் அலுவலகத்துக்கு வெளியில் அவர் மீது மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதில் படுகாயம் அடைந்த அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக கூறப்படுகிறது. ஓராண்டுக்கும் குறைவான காலத்தில் ஹம்சா தாக்குதலுக்கு ஆளானது இது இரண்டாவது முறையாகும். கடந்த ஆண்டு மே மாதம் லாகூரில் உள்ள அவரது வீட்டுக்கு வெளியில் அடையாளம் தெரியாத நபர்களால் அவர் சுடப்பட்டார். பிறகு அவர் குணமடைந்தார்.

# ஈரானுக்கு ஆயுதங்கள் அனுப்பப்படாது: அமெரிக்காவுக்கு சீனா உத்தரவாதம்!


**இஸ்லாமாபாத், ஏப்.18:**

ஈரானுக்கு ஆயுதங்கள் அனுப்பப்படாது எனும் உத்தரவாதத்தை அமெரிக்காவுக்கு சீனா அளித்துள்ளது.

ஈரானுக்கு அடுத்த ஓரிரு வாரங்களில் புதிதாக வான்வெளி பாதுகாப்பு அமைப்புகளை சீனா வழங்க ஆயத்தமாகி வருவதாக உளவுத் துறை தகவல் வந்திருந்த நிலையில், அமெரிக்கா - சீனா இரு நாட்டுத் தலைவர்களிடையேயான கடிதம் வழியிலான தொடர்பில் இந்த உத்தரவாதத்தை சீனா அளித்திருக்கிறது.

இதுகுறித்து அமெரிக்க அரசின் போர் விவகாரங்களுக்கான அமைச்சர் பீட் ஹெக்செத் தெரிவித்திருப்பதாவது, "அதிபர் டிரம்ப்புக்கு சீன அதிபர் ஸி ஜின்புங்குடன் ஒரு வலுவான மற்றும் நேரடி தொடர்புள்ளது. அதைப் பற்றி அவர்கள் இருவரும் விவாதித்தனர். அப்போது, அந்த உத்தரவாதத்தை எங்களிடம் சீனா அளித்தது" என்றார்.

# இஸ்ரேல் - லெபனான் 10 நாள் போர்நிறுத்தம்: டிரம்ப் அறிவிப்பு



**வாஷிங்டன், ஏப்.18:**

இஸ்ரேல்-லெபனான் இடையே 10 நாட்கள் தற்காலிக போர் நிறுத்தம் மேற்கொள்ள இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வியாழக்கிழமை அறிவித்தார்.

வாஷிங்டனில் இரு நாடுகளுக்கும் இடையே பல்லாண்டுகளுக்குப் பிறகு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நேரடி பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்த முக்கிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இப்போர் நிறுத்தம் வெள்ளிக்கிழமை அதிகாலை 2.30 மணி (இந்திய நேரப்படி) முதல் அமலுக்கு வரும் என்றும், இது பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்ட உதவும் என்றும் டிரம்ப் தனது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டார்.

இச்சூழலில், இஸ்ரேல் மற்றும் லெபனான் நாட்டுத் தலைவர்களை வெள்ளை மாளிகைக்கு டிரம்ப் அழைத்துள்ளார். கடந்த 1983-ஆம் ஆண்டுக்குப் பிறகு இரு நாட்டுத் தலைவர்களும் உயர்மட்ட அளவில் சந்தித்துப் பேசவுள்ளது இதுவே முதல்முறையாகும்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, லெபனான் அதிபர் ஜோசப் அவுன் ஆகியோருடன் நடத்தப்பட்ட ஆலோசனைகள் மிகவும் ஆக்கபூர்வமாக அமைந்ததாகத் தெரிவித்த டிரம்ப், நிரந்தர அமைதியை எட்ட துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் தலைமையிலான குழுவினருக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஈரான் மீது அமெரிக்க, இஸ்ரேல் கடந்த பிப். 28-ஆம் தேதி தொடங்கிய கூட்டுத் தாக்குதலைக் கண்டித்து, லெபனானின் ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்பினர் வடக்கு இஸ்ரேலில் ஏவுகணைகளை வீசி தாக்கினர்.

இதையடுத்து, கடந்த மார்ச் 2-ஆம் தேதி முதல் இஸ்ரேல்-ஹிஸ்புல்லா அமைப்பினருக்கு இடையே நடைபெற்றும் வரும் மோதலில் லெபனானில் 172 குழந்தைகள், 260 பெண்கள் உள்பட 2196 பேர் உயிரிழந்தனர். மேலும் சுமார் 7,185 பேர் காயமடைந்துள்ளனர்.

# ஹார்முஸ் ஜலசந்தியில் தடையற்ற கப்பல் போக்குவரத்தை உறுதி செய்ய ஈரானிடம் முதல் முறையாக சீனா வலியுறுத்தல்

**பெய்ஜிங், ஏப்.18:**



ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே போர் பதற்றம் நிலவி வரும் சூழலில், ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல்களின் பாதுகாப்பையும், தடையற்ற போக்குவரத்தையும் உறுதி செய்ய வேண்டும் என்று ஈரான் அரசுக்கு முதன் முறையாக சீனா கோரிக்கை விடுத்துள்ளது.

ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சியுடன் புதன்கிழமை தொலைபேசியில் உரையாடிய சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யீ கூறியுள்ளதாவது: தற்போதைய சூழல் மோதலுக்கும் அமைதிக்கும் இடையிலான ஒரு முக்கியமான கட்டத்தை எட்டியுள்ளது.


அமைதிக்கான ஒரு வாய்ப்பு தற்போது தென்படுகிறது. ஹார்முஸ் ஜலசந்தியின் கடற்கரை நாடான ஈரானின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மை மதிக்கப்பட வேண்டும். அதே நேரத்தில், சர்வதேச கப்பல் போக்குவரத்தின் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட வேண்டும். அந்த வழித்தடத்தில் இயல்பு நிலை திரும்புவதே சர்வதேச சமூகத்தின் பொதுவான விருப்பமாகும். இவ்வாறு வாங் யீ கூறினார்.

ஈரான்-அமெரிக்க மோதல் தொடங்கிய பிறகு இந்த வழித்தடம் குறித்து சீனா இத்தகைய நேரடி கோரிக்கையை முன்வைப்பது இதுவே முதல்முறை. இதற்குப் பதிலளித்த ஈரானிய அமைச்சர் அப்பாஸ் அராக்சி, "பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்ட சீனா முக்கியப் பங்காற்ற வேண்டும் என்பது எங்களின் எதிர்பார்ப்பு.

மேலும், பேச்சுவார்த்தை மூலம் யதார்த்தமான தீர்வை எட்ட ஈரான் தயாராகவே உள்ளது என்று தெரிவித்துள்ளார். முன்னதாக, இஸ்லாமாபாத்தில் நடந்த முதற்கட்டப் பேச்சு வார்த்தையில் உடன்பாடு எட்டப்படாததைத் தொடர்ந்து அமெரிக்கா விதித்த கடல்வழித் தடையை சீனா கடுமையாக விமர்சித்துள்ளது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கை "ஆபத்தானது" என்று சீன வெளியுறவுத் துறை சாடியுள்ளது.

# உக்ரைன் குடியிருப்பு பகுதிகள் மீது 700 ட்ரோன்கள், ஏவுகணைகளை வீசி ரஷ்யா நடத்திய பயங்கர தாக்குதலில் 16 பேர் உயிரிழப்பு

**கீவ், ஏப்.18:**



உக்ரைன் தலைநகர் கீவ் பகுதியில் குடியிருப்புகள் மீது ரஷ்யா 700 ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் பல மணி நேரம் தாக்குதல் நடத்தியது. இதில் 16 பேர் உயிரிழந்தனர், 80 பேர் காயம் அடைந்தனர்.

கடந்த சில வாரங்களாக உக்ரைன் மீது மிகப் பெரியளவிலான தாக்குதலை ரஷ்யா நடத்தவில்லை. தற்போது உக்ரைன் மீது மீண்டும் மிகப் பெரியளவிலான தாக்குதலை ரஷ்யா நேற்று முன்தினம் நடத்தியது. உக்ரைன் தலைவர் கீவ் பகுதியில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்புகளை நோக்கி 700 ட்ரோன்கள் மற்றும் ஏராளமான ஏவுகணைகளை ரஷ்யா பல மணி நேரம் வீசியது.

காலை முதல் இரவு வரை நடைபெற்ற தொடர் தாக்குதலில் 16 பேர் உயிரிழந்தனர், 80 பேர் காயம் அடைந்தனர். நான்கு ஆண்டுகளுக்கு மேலாக ரஷ்யா நடத்தி வரும் தாக்குதலில் உக்ரைன் மக்கள் 15,000 பேர் உயிரிழந்துள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது. வான் பாதுகாப்பு ஆயுதங்களை அதிகளவில் வழங்கக் கோரி ஜெர்மனி மற்றும் நார்வே நாடுகளுக்கு உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி 2 நாள் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில் ரஷ்யா இந்த மிகப் பெரிய தாக்குதலை நடத்தியுள்ளது. உக்ரைன் உள்நாட்டில் ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை உருவாக்கி வருகிறது.

ஆனால், அவை அமெரிக்காவின் பேட்ரியாட் ஏவுகணைகளுக்கு நிகராக இல்லை. ஆயுத பற்றாக்குறை மட்டும் அல்லாமல் போர் காரணமாக நிதி நெருக்கடியிலும் உக்ரைன் சிக்கியுள்ளது.


ஐரோப்பிய யூனியன் 90 பில்லியன் யூரோ கடன் அளிப்பதாக உறுதி அளித்திருந்தது.

ஆனால் ஹங்கேரி எதிர்ப்பால் இந்தக் கடன் நிலுவையில் உள்ளது. இதை விரைவில் வழங்கும்படி உக்ரைன் கோரிக்கை விடுத்துள்ளது.

ஈரான் போர் காரணமாக அமெரிக்க ஆயுதங்களின் கையிருப்பு குறைந்து வருவதும், உக்ரைனுக்கு அமெரிக்க ஆயுதங்கள் கிடைப்பதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. ஆயுத உதவி அளிப்பதாக உறுதி அளித்த பல நட்பு நாடுகள் கைவிரித்து விட்டதாக அதிபர் ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

# தாய்லாந்தில் உலகின் மிகப் பெரிய தண்ணீர் திருவிழாவின்போது 3 நாளில் விபத்தில் சிக்கி 191 பேர் உயிரிழப்பு

**பாங்காக், ஏப்.18:**



தாய்லாந்தில் நடைபெற்று வரும் தண்ணீர் திருவிழாவின் போது சாலை விபத்துகளில் சிக்கி 3 நாளில் 191 பேர் உயிரிழந்துள்ளனர்.

தாய்லாந்து நாட்டு மக்களின் புத்தாண்டு சோங்க்ரான் என்று அழைக்கப்படுகிறது. தாய் தேசிய புத்தாண்டு ஆண்டுதோறும் ஏப்ரல் 9-ம் தேதி கொண்டாடப்படுகிறது. 'சோங்க்ரான்' என்ற சொல் இந்தியாவின் சங்கராந்தி என்ற வார்த்தையுடன் ஒத்துப் போகிறது. தெற்காசியாவின் பல இன மக்களிடையே புத்தாண்டு இந்த சமயத்தில்தான் கொண்டாடப்படுகிறது.

சோங்க்ரான் மத சடங்குகள், பாரம்பரிய நடனங்கள், இசை மற்றும் விருந்துகளுடன் கொண்டாடப் படுகின்றன. சோங்க்ரான் நீர் திருவிழாவின்போது, பழையன கழித்து விட்டு, புதியதை வரவேற்கும் அடையாளமாக மக்கள் ஒருவர் மீது ஒருவர் தண்ணீரைத் தெளித்துக் கொள்கிறார்கள். தமிழ் புத்தாண்டு கொண்டாட்டங்களைப் போலவே, தாய்லாந்து மக்கள் சோங்க்ரான் திருவிழாவின்போது கோயில்களுக்கு சென்று வழிபாடு நடத்துகின்றனர். இந்நிலையில் இந்தத் திருவிழா கடந்த 13-ம் தேதி தொடங்கியது. நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் இந்தத் தண்ணீர் திருவிழா கடந்த 4 நாட்களாக நடைபெற்று வருகிறது. இந்த விழாவில் பங்கேற்க வரும்போது 3 நாளில் சுமார் 951 சாலை விபத்துகள் நடந்துள்ளன.

இதில் 191 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 911 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# "ஈரானுடன் அமைதி ஒப்பந்தம் இறுதியானால் நான் பாகிஸ்தான் செல்வேன்" - ட்ரம்ப்

**வாஷிங்டன், ஏப்.18:**



கடந்த பிப்.28-ம் தேதி ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டாக இணைந்து தாக்குதல் நடத்தின. அதற்கு பதிலடியாக இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள், அமெரிக்காவின் நட்பு நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இந்த சூழலில் கடந்த 8-ம் தேதி அமெரிக்காவும், ஈரானும் இரண்டு வார கால இடைக்கால போர் நிறுத்தத்துக்கு சம்மதம் தெரிவித்தன.

இரண்டு தரப்புக்கும் இடையில் பாகிஸ்தான் மத்தியஸ்தம் செய்ததாக தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து ஏப்.11 அன்று அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்கியது. இதில் அமெரிக்கா தரப்பில் துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் மற்றும் ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் கால்பாஃப் ஆகியோர் பங்கேற்றனர். இந்த பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது. தொடர்ந்து அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை முடக்கும் நோக்கில் செயல்பட்டன. இதனால் மேற்காசியாவில் மீண்டும் போர் பதற்றம் ஏற்பட்டது.

இந்நிலையில் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்த ட்ரம்ப் கூறியதாவது: ஈரான் உடனான அமைதிப் பேச்சுவார்த்தை சுமுகமாக உள்ளது. இதன் முன்னேற்றம் நேர்மறையாக அமைந்துள்ளது. கூடிய விரைவில் இரண்டு தரப்புக்கும் இடையிலும் ஒப்பந்தம் கையெழுத்தாகலாம். பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் அது நடந்தால் நான் செல்லக்கூடும். அங்கு நான் இருக்க வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள்.

இந்த பேச்சுவார்த்தையில் பாகிஸ்தானின் பணி சிறப்பானது. இந்த பேச்சுவார்த்தை இப்போது சரியான திசையில் உள்ளது. இந்த ஒப்பந்தம் மூலம் கச்சா எண்ணெய் விநியோகம் சீராகும், அதன் விலை குறையும், ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல் போக்குவரத்து இயல்பு நிலைக்குத் திரும்பும். அமெரிக்காவின் நிபந்தனைகளுக்கு ஈரான் சம்மதம் தெரிவித்துள்ளது. இதில் அணு ஆயுதமும் உள்ளடங்கியுள்ளது என அவர் தெரிவித்தார்.

இதுவரை 5 அமெரிக்க அதிபர்கள் மட்டுமே தங்கள் பதவி காலத்தில் பாகிஸ்தான் சென்றுள்ளனர். கடைசியாக கடந்த 2006-ல் இஸ்லாமாபாத் நகருக்கு ஜார்ஜ் புஷ் சென்றிருந்தார். அதன் பிறகு பாகிஸ்தானுக்கு எந்தவொரு அமெரிக்க அதிபரும் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரான் போர்: 2 ஆம் கட்ட பேச்சுவார்த்தைக்குத் தயாராகி வரும் பாகிஸ்தான்!

**தெஹ்ரான், ஏப்.18:**

உலகளாவிய எரிசக்தி விநியோகத்தை முடக்கியுள்ள மேற்கு ஆசியப் போரை முடிவுக்குக் கொண்டுவர இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு பாகிஸ்தான் தயாராகி வருவதாக அதிகாரிகள் வெள்ளிக்கிழமை (ஏப்.17) தெரிவித்தனர்.

ஈரான் - இஸ்ரேல், அமெரிக்கா இடையே கடந்த பிப்.28 ஆம் தேதி தொடங்கிய போர் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் நிலையில் அந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர பாகிஸ்தான் தொடர்ந்து மத்தியஸ்தம் செய்துவருகிறது. இதன் ஒருபகுதியாக இஸ்லாமாபாதில் நடந்த 21 மணிநேர பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது. இதனால் பாகிஸ்தான் அடுத்த கட்ட பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக தீவிர முயற்சிகளை செய்து வருகிறது.

இந்த நிலையில், ஈரான், அமெரிக்கா ஆகிய இரு தரப்பினரையும் மீண்டும் பேச்சுவார்த்தைக்குக் கொண்டுவருவதற்காக, தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக பாகிஸ்தானில் உள்ள அதிகாரிகள் கூறியதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும், இரு தரப்பினரும் இரண்டு வார கால தற்காலிக போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைபிடிப்பதால், இந்த முயற்சிகள் வெற்றி கண்டுள்ளதாகவும், இது பாகிஸ்தான் தனது மத்தியஸ்த முன்னெடுப்பை மீண்டும் தொடங்க வழிவகுத்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக, பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் வளைகுடா நாடுகளான சௌதி, கத்தார், துருக்கி ஆகியவற்றுக்கு தனது மும்முனைப் பயணத்தை புதன்கிழமை (ஏப்.15) தொடங்கினார். அதே நாளில், பாகிஸ்தான் ராணுவத் தலைமைத் தளபதி அசீம் முனீர் ஈரானின் தலைநகரான தெஹ்ரானுக்குச் சென்று அங்குள்ள முக்கிய பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினார்.

இதனிடையேஇந்தஇரண்டாம்கட்டபேச்சுவார்த்தையானது பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாதில் அடுத்த வாரம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பசிபிக் கடலில் அமெரிக்க தாக்குதலில் போதைப்பொருள் கும்பல் மூவர் கொலை

**வாஷிங்டன், ஏப்.18:**

கிழக்கு பசிபிக் பெருங்கடல் பகுதியில் அமெரிக்க ராணுவம் நடத்திய தாக்குதலில், போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டதாகக் கருதப்படும் 3 பேர் கொல்லப்பட்டனர்.

சர்வதேச கடல் எல்லைப்பகுதியில் போதைப்பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்படும் வழக்கமான வழித்தடத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் சென்ற படகைக் குறிவைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக பென்டகன் தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாக சர்வதேச கடற்பகுதிகளில் போதைப்பொருள் கும்பல்களுக்கு எதிராக டிரம்ப் நிர்வாகம் தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கடந்த ஆண்டு செப்டம்பர் முதல் இதுவரை நடத்தப்பட்ட பல்வேறு தாக்குதல்களில் சுமார் 178 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த ஜனவரியில் வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மடுரோ பிடிபட்டதைத் தொடர்ந்து, இத்தாக்குதல்கள் வேகம் எடுத்துள்ளன.

# தென்னாப்பிரிக்காவின் முக்கிய எதிர்க்கட்சித் தலைவருக்கு 5 ஆண்டு சிறை

**கேப்டவுன், ஏப்.18:**

தென்னாப்பிரிக்காவின் முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான ஜூலியஸ் மலேமாவுக்கு அந்நாட்டு நீதிமன்றம் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது.

தென்னாப்பிரிக்காவின் 4-ஆவது பெரிய கட்சியான பொருளாதார சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்ற இடதுசாரி கட்சியின் தலைவரான ஜூலியஸ் மலேமா கடந்த 2018-இல் நடைபெற்ற அரசியல் கூட்டம் ஒன்றில், வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டது தொடர்பான வழக்கில் இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

'சிறுபான்மை வெள்ளை இனத்தவர்களுக்காகச் செயல்படும் அமைப்பு தொடர்ந்த இந்த வழக்கு, அரசியல் உள்நோக்கம் கொண்டது; என்னை முடக்கும் முயற்சி' என ஜூலியஸ் மலேமா வாதிட்டார்.

ஆனால், இந்த வாதத்தை நிராகரித்த நீதிபதி, இத்தகைய தேவையற்ற துப்பாக்கிச் சூடுகளால் உயிரிழப்புகள் அவ்வப்போது நிகழ்கின்றன. இதை வெற்றிக் கொண்டாட்டம் என்று கூறி நியாயப்படுத்துவதை ஏற்க முடியாது. மலேமா செய்த செயலின் அடிப்படையிலேயே தீர்ப்பு வழங்கப்படுவதாகத் தெளிவுபடுத்தினார்.

# நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தொகுதி மறுவரையறை மசோதா தோல்வி!






# தமிழ்நாடு, மேற்கு வங்கத்தில் ரூ.865 கோடி பறிமுதல்: தேர்தல் ஆணையம் தகவல்

# கோவையில் இன்று பிரதமர் மோடி, முதல்வர் ஸ்டாலின் பிரச்சாரம்

# உணவு விநியோக ஊழியர்களுக்கு சுகாதாரத் துறை முக்கிய அறிவுறுத்தல்

## வாக்களிப்பதை கட்டாயமாக்க முடியாது: பொது நல மனுவை நிராகரித்தது உச்சநீதிமன்றம்

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை

18.04.2026 சனிக்கிழமை

இலவச இ–பேப்பர்